KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 38680
BRAHUR LIBRARY ... VVR UNIT ...
83-2

தர்ம சக்கரம்

மாத சஞ்சிகை

சக்கரம் 31	துன்மதி ஹு தை மீ	ஆரம் 1

பொருளடக்கம்

சந்தா விவரம்

டிபாஸிட் சந்தா: ரூ. 100 அனுப்பி இங்கு டிபாஸிட் செய்துவிட்டால் டிபாஸிட் இங்கு இருக்கும் வரையில் மாதந்தோறும் தர்ம சக்கரம் பத்திரிகை தங்களுக்கு வந்து கொண்டிருக்கும். ஆண்டுதோறும் சந்தா செலுத்திப் புதுப்பிக்கவேண்டியதில்லை. பத்திரிகை வேண்டாம் என்று கருதும்பொழுது டிபாஸிட் செய்த ரூபாய் நூறையும் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். இந்தத் திட்டம் உள்நாட்டுக்கு மட்டும் உரியது.

ஆண்டு சந்தா: ரூ. 12 செலுத்தியது முதல் அல்லது அடுத்த மாதம் முதல் பன்னிரண்டு மாதங்களுக்கு ஒவ்வொரு தமிழ் மாதமும் முதல் தேதியில் கிடைக்கும்படி பத்திரிகை அனுப்பப்படுகிறது.

சகாய சந்தா: மாத வருவாய் ரூ. 200 அல்லது ஆண்டு வருவாய் ரூ. 2400க்கும் குறைவாக உள்ளவர்கள் ஆண்டு சந்தா பன்னிரண்டு செலுத்த இயலாது இருந்தால் ரூபாய் எட்டு அனுப்பலாம். பாக்கி நான்கு ரூபாயைப் பாண்டிச்சேரி S. விஸ்வநாதன் 'தர்ம சக்கர உதவி நிதி'யினின்று ஈடுசெய்து கொள்கிறோம். தெய்விக விஷயமாதலால் ரூபாய் 12-00 செலுத்த இயலுகிறவர்கள் இந்தச் சலுகையைப் பயன்படுத்தவேண்டாம்.

தமிழ் நாட்டிலும் பாண்டிச்சேரியிலும் உள்ள அரசாங்க பொது நூலகங்கள் அனைத்துக்கும் தர்ம சக்கரம் அன்பர்களின் உதவியால் தொடர்ந்து அனுப்பப்பெறு கிறது. நூலக நிர்வாகியிடம் கேட்டுப் பெற்றுப் படித்துப் பயனடையக் கோருகிறோம்.

உள்நாடு வருட சந்தா ரூ. 12-00 வெளிநாடு வருட சந்தா ரூ. 35-00

அந்தர்யோக விவரங்கள்

பெரியார் மாவட்டம் ஆ. புதுப்பாளையத்தில் 17—1—82 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ ராமகிருஷ்ண சமரச சன்மார்க்க சங்கம்
நேரம்: காலை 9-00 மணிமுதல் மாலை 5-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி அசலானந்தர்

சேலத்தில் 24—1—82 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ சாரதா கல்லூரி பிரார்த்தனைக் கொட்டகை
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்

இராமநாதபுரம் ஜில்லா—இராஜபாளையத்தில் 24—1—82 ஞாயிற்றுக்கிழமை

இடம்: பழைய பாளையம் பாரதி கல்யாண மண்டபம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை.
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்
உணவுவசதி: மதிய உணவுக்கு ரூ. 1-50 செலுத்திச் சீட்டுப்பெற்றுக்கொள்ளலாம்.

திருநெல்வேலி ஜில்லா—ஆத்தூரில் 24—1—82 ஞாயிற்றுக்கிழமை

இடம்: அருள்மிகு சோமசுந்தரி சமேத சோமநாதர் திருக்கோயில் அம்மன் சந்நிதி
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நிவ்யானந்தர்

வடஆற்காடு ஜில்லா—மேக்களூரில் 30—1—82 சனிக்கிழமை

இடம்: ஸ்ரீ நவநீத கோபாலகிருஷ்ணன் ஆலயம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

திருச்சி ஜில்லா—கரூரில் 31—1—82 ஞாயிற்றுக்கிழமை

இடம்: பசுபதிபாளையம், ஸ்ரீ ராமகிருஷ்ண ஆச்ரமம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்
உணவு வசதி: மதிய உணவுக்கு ரூ. 1-00 செலுத்திச் சீட்டுப்பெற்றுக்கொள்ளலாம்.

வடஆற்காடு ஜில்லா—ஆரணியில் 31—1—82 ஞாயிற்றுக்கிழமை

இடம்: குசப்பாளையம் ஸ்ரீ வேதபுரீசுவரர் ஆலயம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

வடஆற்காடு ஜில்லா—மதினுப்பள்ளியில் 1—2—82 திங்கட்கிழமை

இடம்: திரு. கோதண்டராம ரெட்டியார் தோட்டம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

[அட்டை நான்காம் பக்கம் பார்க்க]

KOVLOOR ANDAVAR LIBRARY, KOVLOOR
A. No. 38680

प्रज्ञानं ब्रह्म

தர்ம சக்கரம்

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்(கு) அல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

சக்கரம் 31 | துன்மதி ௵ தை ௴ | ஆரம் 1

பிரார்த்தனை

रूपं गंधो मनो बुद्धिरात्मा कालस्तथा गुणाः ।
एतेषां परमार्थश्च सर्वमेतत् त्वमच्युत ॥

— विष्णु पुराणं

ரூபம் கந்தோ மனோ புத்திராத்மா காலஸ்ததா குண: ।
ஏதேஷாம் பரமார்த்தச்ச ஸர்வமேதத் த்வமச்யுத ॥

— விஷ்ணுபுராணம்

பார்ப்பது, முகர்வது, எண்ணுவது, ஓர்வது, அகங்கரிப்பது, காலம், முக்குணங்கள் ஆகிய யாவுக்கும் அடிப்படையாகவுள்ள மாறாப் பொருளாக இறைவா, நீ உள்ளாய்.

நிலம்நீர் நெருப்புஉயிர் நீள்விசும்பு நிலாப்பகலோன்
புலன்ஆய மைந்தனோடு எண்வகையாய்ப் புணர்ந்து நின்றான்
உலகுஏழ் எனத்திசை பத்துஎனத்தான் ஒருவனுமே
பலஆகி நின்றவா தோள்நோக்கம் ஆடாமோ.

— திருவாசகம்

அருள் விருந்து

சாந்தத்தை உருவாக்குவது சத்சங்கம்.

தூய அன்புள்ள இடத்தில் சுயநலமில்லை.

தூய உள்ளம் யாண்டும் உறுதிபடைத்திருக்கிறது.

உள்ளத்தின் அமைதி கலைந்துபோக இடம் தராதே.

சமயோசித புத்தி மனத்தெளிவினின்று உருவெடுக்கிறது.

மேலாம் கொள்கைகளுக்கிடையில் சமரசம் காண்பது எளிது.

மனிதனுடைய பண்பை அவன் அணியும் உடை விளக்குகிறது.

தன்னைத் திருத்தியமைப்பதற்கு நிகரான செயல் மனிதனுக்கு இல்லை.

கஷ்டதசை சான்றோர் படைத்துள்ள செம்மையை வெளிப்படுத்துகிறது.

பிறர் பேச்சுக்குச் செவி கொடுத்துப் பழகு; ஆனால் நீ பேசாதிருந்து பழகு.

மனிதனுடைய அறிவுக்கெட்டாத பழக்க வழக்கங்களுக்கு அவன் அடிமையாகலாகாது.

உண்மையை உள்ளபடி உணர்பவன் பலபேர் பகரும்பொய்யை நிராகரிக்க வல்லவனாகிறான்.

அக்ஞானத்தை அகற்ற முயலுகின்றவர்களுக்கிடையில் மனத்தாங்கலை வளர்க்க அவகாசமில்லை.

பிறர் பொருளில் ஆசை வைக்காதவனுக்குத் தேவையாயிருப்பதைத் திருமகள் கொடுத்து உதவுகிறாள்.

பிரபஞ்சப் பொருள் எதையும் நாடாதவர் உள்ளத்தில் பரமனுடைய சாந்நித்தியம் தெற்றென விளங்குகிறது.

சூரியனுடைய சந்நிதான விசேஷத்தால் உலகில் நலன்கள் பல நிகழ்கின்றன; சான்றோர்கள் சூரியனுக்கு நிகரானவர்கள்.

மண்ணினுள் மறைந்து நிற்கும் நீர் பயிர் பச்சைகளைப் பாழ்படுத்துகிறது. அங்ஙனம் மனதினுள் மறைந்துநிற்கும் தீய எண்ணம் மானுட வாழ்வைப் பாழ்படுத்துகிறது.

பரமஹம்சர் புகட்டிய
பெருநெறி விளக்கம்

தக்ஷிணேசுவர ஆலயத்தில் பரமஹம்சதேவர் அன்பர்களோடு உரையாடிக் கொண்டிருக்கிருர்.

மோஹினிமோகன் கூடை ஒன்றில் மிட்டாய் வகைகளைப் பரமஹம்சதேவருக்காகக்கொண்டு வந்து இருந்தான்.

பரமஹம்சதேவர்: "இந்தப் பக்ஷண வகைகளைக் கொண்டுவந்தது யார்?"

மோகினி மோகனைப் பாபுராம் சுட்டிக் காட்டினுன்.

'ஓம்' என்னும் பிரணவத்தை உச்சரித்துக் கொண்டு பரமஹம்சதேவர் அந்தப் பக்ஷணங்களைத் தம் கரத்தால் தீண்டினுர். பிறகு அக்கூடையினின்று ஒரு சிறு துண்டு பக்ஷணத்தை எடுத்து அருந்தினுர். அதன் பிறகு அக்கூடையிலிருந்தவைகளை ஆங்குக் குழுமியிருந்த பக்தர்களுக்கிடையில் வழங்கும்படி செய்தார். இளைய நரேந்திரனுக்கும் இன்னும் சில இளைஞர்களுக்கும் அவர் தம் திருக்கரத்தாலேயே பக்ஷணத்தை எடுத்து வழங்கினுர். அச்செயலைப் பார்த்த அன்பர்கள் வியப்படைந்தனர்.

மகேந்திரரிடம் பரமஹம்சதேவர் மொழிந்ததாவது: "கடவுள் எங்கும் நிறைந்த பொருள். அனைத்துமாக இலங்குபவர் அவரே. தோற்றத்துக்கு வந்துள்ளவைகளுள் கடவுளுடைய சாந்நித்தியம் சிறப்பாக மக்களிடம் தென்படுகிறது. மக்களுள்ளும் தூய மனம் படைத்திருப்பவர்களிடத்து அவருடைய சாந்நித்தியம் மிகச் சிறப்பாக ஓங்கியுள்ளது. கடந்துபோன ஆண்டுகளில் கமார்புகூர் சென்றபொழுது பாலர்கள் சிலருக்கு நான் என் கரத்தாலேயே உணவு ஊட்டி வந்தேன். அந்நிகழ்ச்சியைப் பார்த்து வந்த சினைசங்கரி என்னும் சிறுவன் 'அப்பெரியவர் ஏன் எங்களுக்கு அப்பாங்கில் உணவு ஊட்டுவதில்லை?' என்று கேட்டான். ஆனல் அது எப்படிச் சாத்தியப்படும்? தூய உள்ளம் படைத்தவர்களைத்தாம் தீண்ட எனக்கு இயன்றது. மனதில் மாசுபடிந்திருப்பவர்களை அணுக எனக்குச் சாத்தியப்படுவதில்லை. அவர்களைத் தீண்டி உணவு படைக்க எனக்கு இயலவில்லை."

இளைஞர்களும் தூய உள்ளம் படைத்தவர்களுமாகிய பக்தர்களுக்கிடையில் பரமஹம்சதேவர் மிக மகிழ்வுடன் கூடிக்குலாவி வந்தார். தமது அறையிலிருந்த சிறிய கட்டிலின்மீது அவர் அமர்ந்திருந்தார். கீர்த்தனம் பாடிய ஒரு மாதுவின் பாங்கைப் பரமஹம்சதேவர் தாமே விளையாட்டாகக் கேளிக்கை செய்து காட்டினுர். அதைப் பார்த்துப் பக்தர்கள் விலாப்புடைக்கச் சிரித்தார்கள். அம்மாது ஆடம்பரமாக ஆடையணிந்திருந்தாள். ஏராளமாக நகைகளையும் போட்டிருந்தாள். கைக்குட்டை ஒன்றைக் கையில் பிடித்துக்கொண்டு அவள் பாடிய பாங்கைப் பரமஹம்சதேவர் அப்படியே படம் பிடித்துக் காட்டினுர். மக்களுடைய கவனத்தைத் தன்னிடம் கவர்ந்திழுத்தல் பொருட்டு அவள் இருமியதை அவர் அப்படியே செய்து காட்டினுர். மூக்குத்தியைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு மூக்குச் சிந்தியதையும் அவர் நடித்துக் காட்டினுர். பணக்காரப் பிரமுகர் ஒருவர் கூடத்துக்குள் வந்தபொழுது அவருக்கேற்ற அடைமொழிகளைச் சொரிந்து அவள் வரவேற்ருள். பாடல்களையும் தொடர்ந்து பாடிக்கொண்டே போனுள். இடையிடையே தன் கரங்களில் அணிந்திருந்த ஆபரணங்களைக் கூடியிருந்தவர்களிடம் காட்டுதல் பொருட்டுத் தன்னுடைய புடவையை இப்பக்கமும் அப்பக்கமும் மாற்றியமைத்தாள். அச்செயல்களையெல்லாம் அவள் செய்தபடியே பரமஹம்சதேவர் மிகப் பொருத்தமாக நடித்துக் காட்டினுர். சரசமாக அவர் நடித்துக் காட்டியதைப் பார்த்த பக்தர்கள் சிரிப்பில் திணறிப்போனுர்கள். அக்கூட்டத்தில் பால்து என்பவன் சிரிப்பின் வேகத்தால் தரையில் புரண்டான். மகேந்திரரிடம் பரமஹம்சதேவர் அவனைச் சுட்டிக்காட்டி, "அச்சிறுவனைப் பார். நகைப்பின் வேகத்தால் அவன் தரையில் புரண்டு கொண்டு இருக்கிருன்." புன்னகை பூத்தவராக அந்தப் பால்துவிடம் அவர் பகர்ந்ததாவது: "இந்த நிகழ்ச்சியை உன் தந்தை

யிடம் நீ சொல்ல வேண்டாம். ஏனென்றால் இதைக் கேட்ட பிறகு அவர் என்னிடம் வைத்திருக்கின்ற சாமானியமான மரியாதையையும் புறக்கணித்து விடுவார். ஆங்கிலப் பெருமகன் பாங்கில் அவர் நடந்து வருகிறார்."

பக்தர் எல்லாரிடமும் பரமஹம்சதேவர் பகர்ந்ததாவது: "நாள்தோறும் அனுஷ்டிக்க வேண்டிய பக்தி சாதனை வேளைகளில் பொருளற்ற வீண்பேச்சுப் பேசிக் காலத்தைப் போக்கும் மாந்தர் இருக்கின்றனர். அத்தகைய வேளைகளில் நாவினின்று பேச்சு ஏதும் வெளியே கிளம்பலாகாது. வாயை மூடிக்கொண்டு கைகளால் சைகைகள் பல அவர்கள் செய்கிறார்கள். 'இதைக் கொண்டு வா, அதைக் கொண்டு வா' என்று பேசுதற்குப் பதிலாக அவர்கள் 'கூ,' 'கு கூ' என்று ஓலமிடுகின்றனர். இது அன்னவர்களின் போக்கு.

"ஜபம் செய்து கொண்டிருப்பதற்கிடையில் பேரம்பண்ணுபவர்கள் இருக்கிறார்கள். ஜபமாலை ஒருபக்கம் கையாளப்படுகிறது. மற்றொரு பக்கம் விரலால் கத்தரிக்காயைச் சுட்டிக்காட்டி அது வாங்குவதற்கு நல்லது என்னும் சைகை செய்கின்றனர். வழிபாடு பண்ணவேண்டிய நேரத்தைப் பேரம் பண்ணுவதற்கென்றே அவர்கள் ஒதுக்கி வைக்கின்றனர்.

"நீராடுவதற்காகக் கங்கைக்கு வரும் மகளிர் இருக்கின்றனர். அவ்வேளையில் பகவத் சிந்தனையில் மனதைச் செலுத்துவதற்குப் பதிலாக ஏதேதோ உலக விஷயங்களைப் பற்றியே அவர்கள் பேசிக்கொண்டிருப்பார்கள். 'உன் மகனுக்கு நீ மணம் முடித்தபொழுது மணமகளுக்கு என்னென்ன நகைகள் போட்டாய்?'—'தன் மாமனார் வீட்டிற்குச் சென்றிருந்த இன்னவள் தாயின் வீட்டிற்குத் திரும்பி வந்துவிட்டாளா?'—'கொடிய நோயால் வருந்திக்கொண்டிருக்கிற இன்னாருடைய நிலைமை எப்படி இருக்கிறது?'—'பெண் பார்க்க இன்னார் வெளியூருக்குச் சென்றிருந்தார்; அப்பெண்ணுக்கு ஸ்ரீதனம் அவர்கள் ஏராளமாக வழங்குவார்கள் என்று எண்ணுகிறேன். மணச் சடங்கின் பொழுது பெரிய விருந்தும் நடைபெறும் என்று எண்ணுகிறேன்' — 'ஹரீஷ் இப்பொழுது என்னை உபத்திரவப்படுத்திக்கொண்டே இருக்கிறான். ஒரு மணி நேரம் அவன் தொல்லையினின்று விலகியிருக்க அவன் அவகாசம் தருவதில்லை'—'குழந்தாய் உன்னைப் பார்க்க வருவதற்கு இத்தனை நாள் எனக்கு அவகாசம் கிடைக்கவில்லை. இன்னாருடைய பெண்ணின் விவாக விஷயத்தில் நான் தீவிரமாக ஈடுபட்டிருந்தேன்.' இங்ஙனம் அல்லும் பகலும் உலக விஷயங்களிலேயே உழன்று கிடப்பது சரியன்று. உலகப்பற்று உடையவர்களும் காலையிலும் மாலையிலும் சிறிது நேரமாவது உலக விஷயங்களை யெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு அருள் நாட்டத்தில் கருத்தைச் செலுத்துவது முற்றிலும் அவசியமாகிறது. கங்கா ஸ்நானம் பண்ணும்பொழுது கடவுள் சிந்தனையிலேயே மனதைச் செலுத்துவது முற்றிலும் அவசியம்."

இளைய நரேந்திரனைப் பரமஹம்சதேவர் சிறிதுநேரம் உற்று நோக்கினார். அதைத் தொடர்ந்து அவருக்குச் சமாதிநிலை கூடியது. இறைவனுடைய சாந்நித்தியம் சிறப்பாகத் தூய்மையே வடிவெடுத்துள்ள சான்றோர் உள்ளத்தில் ஒளிர்கிறது. ஒருவேளை அத்தகைய காட்சியைக் கண்டுதானோ பரமஹம்சதேவருக்கு இப்பொழுது சமாதி கூடுவதாயிற்று!

அறையில் குழுமியிருந்த பக்தர்கள் இக்காட்சியைப் பார்த்து மௌனமுற்று இருந்தனர். சிறிது நேரத்திற்கு முன்புதான் அந்த அறையினுள் கலகலப்பான சிரிப்பும்வேடிக்கை நிறைந்த பேச்சு வார்த்தைகளும் நிகழ்ந்து கொண்டிருந்தன. சிறிதுநேரத்துக்குள் காட்சி அறவே மாறிவிட்டது. அத்தனைபேர் ஆங்கு அமர்ந்திருந்தும் யாருமே இல்லாத அறை போன்று அங்கு மௌனம் அதிவிரைவில் வடிவெடுத்தது. நாம் படத்தில் காணும் பாங்கில் பரமஹம்சதேவர் கை கூப்பி அமைதியாக அமர்ந்திருந்தார்.

சிறிது நேரத்திற்குப் பிறகு அதீத நிலையிலிருந்த பரமஹம்சதேவருடைய மனது இவ்வுலகுக்குத் திரும்பி வருவதாயிற்று. ஆழ்ந்து அவர் பெருமூச்சு விட்டார். கண் விழித்து அவர் உலகக் காட்சியைக் காணலானார். அங்கு குழுமியிருந்த பக்தர்களோடு அவர்களுடைய ஆத்ம சாதனங்களைப்பற்றி விசாரித்து அவர் உரையாடினார்.

பரமஹம்சர் (இளைய நரேந்திரனைப் பார்த்து): "உன்னைப் பார்க்கவேண்டுமென்று நான்

ஆவலுற்றிருந்தேன். வாழ்க்கையில் நீ கொண்டுள்ள குறியை அடையப் பெறுவாய். இடையிடையே இங்கே வந்துகொண்டிரு. ஞான மார்க்கம், பக்திமார்க்கம் — இவ்விரண்டினுள் உனக்கு விருப்பமானது யாது?"

இளைய நரேந்திரன்: "நான் நாடுவது தூய பக்தி."

பரமஹம்சதேவர்: "அது சரி. ஒரு மனிதனை இன்னான் என்று அறிந்துகொள்ளுதற்கு முன் நீ அவனை நேசிப்பது எப்படிச் சாத்தியமாகும்? (புன்சிரிப்போடு மகேந்திரரைச் சுட்டிக் காட்டி) நீ இவனை இன்னான் என்று அறிந்து கொள்வதற்கு முன்பு இவனிடத்து அன்பு வைப்பது எப்படிச் சாத்தியப்படும்? (இப்பொழுது மகேந்திரரைப் பார்த்து) தூய மனம் படைத்துள்ள ஒருவன் தூய பக்தி வேண்டுமென்று கேட்பதில் பொருள் மிக உண்டு.

"பக்தன் ஒருவனிடம் நல்ல சம்ஸ்காரங்கள் இயல்பாகவே அமைந்திருக்கின்றன. தூய பக்தியே வேண்டுமென்று நாடுவதற்குக் காரணம் நல்ல சம்ஸ்காரமேயாம். தூய பக்தியே வேண்டுமென்று நாடுகிற பக்தனுக்குப் படிப்படியாகப் பிரேமை பக்தி வந்து அமைகிறது. பக்தியில் மற்றொரு விதம் உண்டு. அது ஞான பக்தி எனப் பெயர் பெறுகிறது. மெய்ப்பொருளைப்பற்றி விசாரித்துப் பார்ப்பதன் விளைவாக ஞானபக்தி வாய்க்கிறது.

(இளைய நரேந்திரனைப் பார்த்து): "நான் உன் உடலைப் பார்க்க விரும்புகிறேன். ஆதலால் நீ அணிந்திருக்கும் சட்டையை நீக்குவாயாக. அகன்ற மார்புடையவனாக இருக்கின்றாய். நீ நாடுகின்ற மேலாம் நாட்டத்தில் வெற்றி காண்பாய். இடையிடையே இங்கு வந்து கொண்டிரு."

தம்மிடத்து அமைந்திருந்த பாரமார்த்திகப் பெருநிலையினின்று பரமஹம்ச தேவருடைய மனது இன்னும் முற்றிலும் மண்ணுலக நிலைக்குக் கீழே இறங்கி வரவில்லை. அறையிலே குழுமியிருந்த பக்தர்களோடு அருள் சுரந்த பாங்கில் அவர் உரையாடலாயினர். காலக்கிரமத்தில் அவர்கள் எல்லாரும் சாதனத்தில் முன்னேற்றம் அடைவார்கள் என்று அவர் உறுதி கூறினர்.

பரமஹம்சதேவர் (பால்துவைப் பார்த்து): "ஆத்ம சாதனத்தில் நீயும் முன்னேற்றம் அடைவாய். ஆயினும் அது விரைந்து வாய்க்காது. சற்றுக் காலதாமதம் ஆகும்.

(பாபுராமைப் பார்த்து) "உன்னை நான் என்னிடம் கவர்ந்திழுப்பதில் காலதாமதம் ஆவது ஏன்? இப்பொழுதே நீ என்னிடம் வந்து சேருவாயாகில் அதன் விளைவாக உபத்ரவங்கள் சில உண்டாகும். ஆதலால் ஒவ்வொரு சாதகனும் தனக்கேற்ற காலம் வரும் வரையில் சிறிது காத்திருப்பது அவசியமாகிறது.

(மோகினி மோகனைப் பார்த்து) "உன்னைப் பொறுத்தவரையில் எல்லாம் ஒழுங்காக அமைந்திருக்கின்றன. எனினும் நிறைநிலை எட்டுதற்கு ஏற்றச் சாதனம் ஒன்றைச் சாதிப்பது அவசியம். அந்தச் சாதனம் நிறைவேறுமிடத்து உன் கடமைகள் யாவும் பூர்த்தியாகின்றன. அந்நிலையை எட்டிய பிறகு இப்பிரபஞ்சவாழ்க்கையே உனக்குத் தேவைப்படாது. நிலையற்றயாவையும் துறந்துவிடு."

இங்ஙனம் பரமஹம்சதேவர் பேசிக்கொண்டிருந்ததற்கு இடையில் மோகினி மோகனை அவர் பேரன்புடன் உற்று நோக்கினர். அவனுடைய மனதில் புதைந்து கிடந்த யாவையும் துருவி ஆராய்கின்ற பாங்கிலே அவருடைய பார்வை தென்பட்டது. பரநாட்டத்தின் பொருட்டுப் பிரபஞ்ச நாட்டமனைத்தையும் ஒதுக்கித் தள்ளுவது அவசியமா என்னும் எண்ணம் மோகினி மோகனுடைய உள்ளத்தில் ஊசலாடிற்று. சிறிது நேரத்திற்குப் பிறகு பரமஹம்சதேவர் பகர்ந்ததாவது: "பாகவதம் கற்றிருந்த பண்டிதன் ஒருவனை உலக பாசம் ஏதேனும் ஒன்றில் கடவுள் கட்டி வைக்கிறார். இல்லையேல் சாஸ்திரங்களில் அடங்கியுள்ள மேலாம் கருத்துக்களை உலக மக்களுக்கிடையில் எடுத்துரைப்பதற்கு யாருமே இல்லாது போய் விடுவார்கள். ஆகவே பாண்டித்தியப் பற்றுள்ளவர்கள் சாஸ்திரங்களில் புதைந்துள்ள மேலாம் கருத்துக்களைப் பொதுமக்களுக்கிடையில் எடுத்துப் புகட்டுகின்றனர். அதன் விளைவாக மக்களும் நலன் அடையப் பெறுகின்றனர். அக்காரணத்தை முன்னிட்டே அன்னை பராசக்தி உன்னை இந்நிலவுலக வாழ்க்கையில் ஈடுபடுத்தியுள்ளாள்."

எந்நாள் கண்ணி

(தாயுமானவர் இயற்றியது)

6-13. பொல்லாத காமப் புலைத்தொழிலில் என்அறிவு
செல்லாமல் நன்னெறியில் சேருநாள்
[எந்நாளோ ?

ஐம்பொறிகளும் புலன்களை நுகர விரும்புகின்றன. நல்லுணவைப் புசிக்க நா நாட்டங் கொள்கிறது. அழகிய வடிவுகளைக் காணக் கண் விரும்புகிறது. மிருதுவான உடலோடு தோய்ந்திருக்க ஊறு அல்லது ஸ்பரிச உணர்ச்சி நாட்டங்கொள்கிறது. இனிய ஓசையைக் கேட்க காது விரும்புகிறது. நறுமணத்தை நுகர மூக்கிற்கு ஆசை உண்டாகிறது. இந்த ஐந்து விதமான இன்பங்களுக்கு விஷய சுகம் என்பது பொதுப் பெயர். இந்திரியங்கள் இந்திரியார்த்தங்களை நாடுவதற்குக் காமம் என்பது பொதுப் பெயர். இவை யாவுக்கும் மேலாக ஆண்பாலும் பெண்பாலும் சேர்ந்திருக்க விருப்புவதற்குக் காமம் என்பது தனிப் பெயராகும். உடல் எடுத்திருக்கும் உயிர் வகைகள் அனைத்திற்கும் காமம் இயல்பாக அமைந்திருக்கின்றது. அத்தகைய அவாவுக்கு இணங்கி நடப்பதுதான் இயற்கையின் போக்கு என்பது பொதுவாக அமைந்துள்ள கொள்கையாகும். ஐம்பொறிகளையும் வெல்லுவது செயற்கரிய செயல் என்பது சான்றோர் கொள்கையாகும். 'பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க நெறி நின்றார் நீடு வாழ்வார்' என்பது பொய்யா மொழியாகும். ஐம்பொறிகளில் அவாவை வெல்லுதற்கேற்ப மனிதன் மேலோன் ஆகிறான். ஐம்பொறிகளை அறவே வென்றவனுக்கு ஞானக்கண் வடிவெடுக்கிறது. தான் உடல் அல்லன் உடலுக்கு அப்பாலுள்ள ஆத்ம சொரூபம் என்னும் நிறைஞானத்தைப் பெறுவதே வாழ்க்கையின் குறிக்கோள். இந்த மேலாம் குறியை நாடுபவர்கள் காமத்தைக் காமநோய் எனப் புறக்கணிக்கின்றனர்.

ஆண்பால் பெண்பால் வேற்றுமை சரீரத்தில் அமைந்திருக்கிறது. ஆத்மாவோ ஆணுமல்ல, பெண்ணுமல்ல, அலியுமல்ல. சச்சிதானந்தம் அதனுடைய நிஜசொரூபம். எனவே ஆத்ம ஞானத்தை நாடுகிறவர்கள் காம நோயைக் களையக் கடமைப்பட்டிருக்கின்றனர். அத்தகைய மேலாம் நோக்கம் கொண்டுள்ள ஆடவர்கள் அனைவரும் பெண்பாலர்களை அன்னை பராசக்தியின் சொருபமாகக் கருதுதல் வேண்டும். அதே விதத்தில் பெண்பாலர்கள் ஆண்பாலரைச் சிவ சொருபமாகப் பாராட்டிப் புனித வாழ்க்கையில் ஈடுபடுதல் அவசியமாகின்றது. இக்காரணத்தை முன்னிட்டே காம நோயானது பரநாட்டம் பூண்டிருக்கிறவர்களுக்கு நித்ய சத்ருவாகக் கருதப்படுகிறது.

பஞ்சபூதங்களால் ஆகிய தேகத்தைத் தான் என்று கருதுவதால் காமம் வடிவெடுக்கிறது. இந்த உடலோ மனிதனுக்குப் பொய்யுறவு. புலால் உடலில் பற்றுவைத்து வாழ்பவன் புலையன் எனப் புறக்கணிக்கப்படுகின்றான். உடலில் வாழ்ந்திருப்பதற்கிடையில் உடல் உணர்ச்சிக்கு அப்பால் இருப்பவனே உத்தமன் ஆகிறான். நிலையற்ற உடலை, தான் எனக் கருதுவது தீயநெறி. நிலைத்துள்ள ஆத்ம சொருபத்தை, தான் எனக் கருதுவது நன்னெறி. நன்னெறியைக் கடைப் பிடிப்பவன் மேலாம் குறிக்கோளாகிய பரமனை அடையத் தகுதியுடையவன் ஆகிறான்.

பெறுதற்கரிய மானுடப் பிறவி எடுத்திருக்கின்ற நான் தீய நெறியில் சென்று அழிந்து பட்டுப் போகலாகாது. நன்னெறியில் சென்று நித்ய வஸ்துவாகிய பரமனையே நாடியிருக்கும் நல்ல காலம் எனக்கு வாய்க்கவேண்டும் என்பது இக்கண்ணியின் உட் கருத்தாம்.

6-14. அடிகள்அடிக் கீழ்க்குடியாய் யாம்வாழா
வண்ணம்
குடிகெடுக்கும் பாழ்மடிமைக் கூறு ஒழிவது
எந்நாளோ?

மடிமைக்கூறு - சோம்பித்திரியும் பாங்கு.

சொர்க்கமும், நரகமும் புறவுலகில் இருப்பவைகள் அல்ல. அந்தந்த மனிதன் படைத்துள்ள மனப்பான்மைக்கேற்ப அவன் மேல் உலகில் அல்லது கீழ் உலகில் வாழ்ந்து வருகிறான். பக்கம் பக்கம் குடியிருக்கும் இரண்டு மனிதர்களுக்கிடையில் மனவேற்றுமை ஏராளமாக இருக்குமாகில் தன் அயல் வீட்டானைக் குறித்து மற்ற

வன் 'அவனுக்கும் எனக்கும் வெகுதூரம்' என்கிருன். அதற்கு நேர்மாருக அன்யோன்யமாய் வாழும் சிநேகிதன் ஒருவன் நெடுந்தூரத்திற்கு அப்பால் வாழ்ந்திருந்தாலும் 'அவனுக்கும் எனக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு' என்கிருன். ஆக, மனிதனை மனிதனிடத்திருந்து அப்புறப்படுத்துவது இடமன்று, மனநிலையேயாம். மனம் கொண்டது மாளிகை என்பது மற்ெருரு கோட்பாடு. மனதில் மனிதன் எதை ஆழ்ந்து எண்ணுகிருனே அந்த மயம் அவன் தானே ஆகிருன். ஆத்ம சாதகன் ஒருவன் யாண்டும் கடவுள்சிந்தனையிலேயே ஊறியிருப்பானுகில் அவன் வாழ்ந்திருப்பது சிவலோகம் ஆகிறது. சிவ சிந்தனையில் இன்னும் தீவிரமாக மனிதன் ஈடுபடுவானுகில் அவன் குடியிருப்பது சிவனுடைய திருவடிகளிலேயாம். கடவுளை நாடி மனிதன் இங்குமங்கும் ஓடித்திரிய வேண்டிய அவசியமில்லை. மனிதனுடைய உள்ளத்திலேயே இறைவன் யாண்டும் குடியிருக்கிருர். 'இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க' என்பது ஆப்த வாக்கியம். அத்தகைய இறைவனிடத்து முழு மனதைச் செலுத்தி அவனுடைய சந்நிதியிலேயே ஆத்ம சாதகன் சதா வாழ்ந்திருத்தல் வேண்டும். அதற்கு நேர்மாருகத் தன்னிடத்துள்ள சோம்பலுக்கு அடிமைப்பட்டு அவனது மனதில் உதிக்கும் பழைய ஜன்மாந்திர வாசனையின் விளைவாகவருகின்ற கீழான எண்ணங்களில் அவன் ஊறிக்கிடப்பானுகில் அக்கீழ்மைக்கு அவனே பொறுப்பாளியாகிருன். மனிதனுக்கு மிகப் பக்கத்தில் இருப்பவர் இறைவன். மிகப் பக்கத்தில் இருப்பவரைப் புறக்கணித்து விட்டுப் பொருந்தாத எண்ணங்களில் மனிதன் திளைத்திருப்பானுகில் அக்குற்றத்திற்கு அவனே பொறுப்பாளி. அத்தகைய கீழ்மை எனக்கு வேண்டாம். இறைவா, யாண்டும் நான் உன்னுடைய சந்நிதியிலேயே இன்புற்று இருப்பேனுக என்று இறைவனிடம் விண்ணப்பிப்பது இக்கண்ணியின் கருத்தாம்.

6- 5 ஆன புறக்கருவி ஆறுபத்தும் மற்றுஉளவும்
போன வழியுங்கூடப் புல்முளைப்பது எந்நாளோ?

மனிதனுடைய சொருபத்திற்குப் புறம்பாய் இருப்பது இப்பிரபஞ்சம். இப்பிரபஞ்சத்தைத் தன்மயமாய் எண்ணிக்கொள்வது ஜீவாத்மனுடைய அக்ஞானத்தின் விளைவாம். பிரகிருதி தத்துவங்களை இருபத்து நான்காகப் பிரித்து அந்த இருபத்து நான்கு தத்துவங்களையும் புருஷனுகிய ஜீவாத்மன் பயன்படுத்தி வருகிருன் என்று சாங்க்யதர்சனம் கூறுகிறது. இந்த இருபத்து நான்கு தத்துவங்களைச் சமயங்கள் இன்னும் பலப்பலவாகப் பிரித்து வைத்துக் கூறுகின்றன. இக்கண்ணியிலே காரியப்படுபவைகள் அறுபது தத்துவங்கள் என்றும் அவைகளுக்குக் காரணமாய் இருப்பவைகள் முப்பத்தாறு என்றும் பாகுபடுத்தப்பட்டிருக்கின்றன. 'மற்றுளவும்' என்பதற்குப் பொருள் ஐதிகமாக வந்துள்ள மேலுமுள்ள முப்பத்தாறு தத்துவங்கள் என்று நாம் சேர்த்துக்கொள்ள வேண்டும். இதற்குச் சான்று ஒன்று எடுத்துக் கொள்வோம். இருப்புப்பாதை பிரயாணத்திற்கு அட்டவணை ஆயத்தப்படுத்துகிருர்கள். அந்தந்த பிராந்தியத்தில் உள்ள அட்டவணையில் வண்டி நிற்குமிடங்கள் (**Train halts**) குறிக்கப்பட்டிருக்கின்றன. ஆனல் சென்னையில் இருந்து டில்லிக்குப் போகும் அட்டவணையில் சென்னை, விஜயவாடா, நாகப்பூர், வாட்டார்பெட், டில்லி என்று மட்டும் குறிக்கப்பட்டிருக்கும். பிரயாணத்திற்கேற்றவாறு அட்டவணை இப்படி அமைப்பது முறையே. அதே விதத்தில் பிரகிருதி புருஷ தத்துவங்களில் பிரகிருதி தத்துவத்தின் எண்ணிக்கையில் வேண்டியவாறு அதிகப்படுத்துவதும் குறைப்பதும் சாத்தியம்.

தேவையில்லாத விளையாட்டு இடங்களுக்குச் சிறுவர்கள் நடந்து சென்ற புல் தரையில் பாதைகள் தாமாகவே அமைகின்றன. சில மாதக் கணக்காகச் சிறுவர்கள் அவ்வழியில் போகாது நின்றுவிட்டால் அப்பாதையில் புல் முளைத்துப் பாதை மறைந்துபட்டுப் போகிறது. அதற்கு நிகராக ஜீவாத்மன் யாண்டும் பரமனிடத்தே தன் கருத்தைச் செலுத்தி வருவானுகில் பிரகிருதி தத்துவங்களில் உள்ள பாதைகள் மறைந்துபட்டுப் போகின்றன.

அண்ணலே, நான் யாண்டும் உன்னுடைய திருவடிகளையே சார்ந்திருப்பேனுக. பிரகிருதி தத்துவங்களில் நான் கருத்தைச் செலுத்தாது உன்னையே நாடி இருப்பேனுக என்பது இக்கண்ணியின் கருத்தாம்.

இயேசுவின் மலை உபதேச விளக்கம்

(சுவாமி பிரபவானந்தரின் கருத்தைத் தழுவியது)

34. கவலைப்படுவதன் மூலம் உங்களுள் யாரேனும் ஒருவர் உங்கள் உடலின் உயரத்தைச் சிறிது அதிகப் படுத்திவிட முடியுமா? பின்பு உடையைப்பற்றிய அக்கறை உங்களுக்கு எதற்காக? பூமியில் முளைத்து வரும் பூஞ்செடிகளைப் பாருங்கள். அவைகள் செழிப் புற்று வளருகின்றன. அவைகள் படாத பாடுபடுவ தில்லை. அவைகள் நூல் நூற்பதும் இல்லை. ஆயினும் அவைகளைப் பற்றிய உண்மை என்ன? பூஞ்செடி கள் அலங்கரிக்கப்பட்டிருப்பது போன்று பாராளும் வேந்தன் யாராவது அலங்கரிக்கப்பட்டிருக்கின்றனு? அலங்காரத்தின் உச்சநிலையை அவைகளிடத்துக் காண்கின்றேம். செடிகள் இன்று தழைத்திருக் கின்றன; நாளைக்கு வாடிப்போகின்றன; மறுநாள் அவைகள் தீயிலிட்டுப் பொசுக்கப்படுகின்றன. அத் தகைய அற்பப் பொருள்களை அவ்வளவு நன்கு அலங் கரிக்கின்ற இறைவன் உங்களை வீணே விட்டுவிடு வாரு? விசுவாசமற்ற மானுடர்காள்! உங்கள் நிலையை என்னென்பது!

இயற்கை நிகழ்ச்சிகள் அனைத்தும் நமக்குப் பாடம் புகட்டுகின்றன. வனத்தில் வளர் கின்ற மரங்களும் வாழ்கின்ற விலங்குகளும் இயற்கையை நம்பி இருக்கின்றன. இயற்கை எழில் நிறைந்ததாக இருக்கிறது அந்த இயற்கை எழிலை மனிதர்கள் யாரும் உண்டு பண்ணவில்லை. இமயமலையைப் பார்க்கும் தோறும் அது உள்ளத்தைக் கொள்ளைகொள் கிறது. மனிதன்மட்டும் உண்பதற்கும் உடுப் பதற்கும் படாதபாடு படுகின்ருன். தெய் வத்தை முற்றும் சார்ந்திருக்கின்ற மனிதன் கவலையற்று வாழ்கின்ருன். தனக்காகக் கவ லைப்படுகின்ற மனிதன் தனக்குத்தானே துன் பத்தை வரவழைத்துக் கொள்வதைத் தவிர தனக்கு ஒரு நலனையும் தேடிக்கொள்வதில்லை.

தம் வாழ்க்கையைத் தெய்வத்துக்கென்றே ஒப்படைத்தவர்கள் தங்களைப் பற்றிச் சிறிதும் கவலைகொள்வதில்லை. ஓடுகின்ற நதியினிடத் தும் சஞ்சரிக்கின்ற சந்நியாசியினிடத்தும் மாசு படிவதில்லை என்பது கோட்பாடு. பண்டைக்காலத்தில் துறவிகள் சிலர் மூன்று இரவுக்கு மேல் ஓர் இடத்தில் தங்குவதில்லை. உணவைப்பற்றியும் அவர்கள் கவலைப்படுவ தில்லை. உணவையும் இருப்பிடத்தையும்பற்றி எவ்வித ஏற்பாடும் செய்யாது தியானத்தில் அமர்ந்து விடுவார்கள். ஆனல் அவர்கள் யாரும் பட்டினி இருந்ததில்லை. அவர்களைத் தேடி உணவு வந்துகொண்டிருக்கும். ஸ்ரீ ராம கிருஷ்ணருடைய சிஷ்யர்களுள் ஒரு சிலர் இத்தகைய விரதத்தைக் கடைப்பிடித்தார்கள். அவர்களுக்குத் தேவையான உணவும் அவர் கள் தேடாமலேயே வந்துகொண்டிருந்தது. சுவாமி விவேகானந்தரும் பரிவ்ராஜகராக இந்தியாவில் பயணம் செய்தார். அப்பொழுது காசைக் கையில் தொடுவதில்லை என்றும், உணவைத் தான் தேடிப் போவதில்லை என் றும் விரதம் எடுத்துக்கொண்டிருந்தார். ஒரு சம யம் அவர் பிருந்தாவனத்தில் பசியுடன் போய்க் கொண்டிருந்தார். வனத்துக்குள் ஓர் அன்பர் அவரைத்தேடிக்கொண்டுவந்து உணவு படைத் தார். உணவு அருந்தியதும் உணவு கொண்டு வந்தவர் மாயமாக மறைந்து போனதைப் பார்த்துச் சுவாமி விவேகானந்தர் "எனக்கு உணவு படைத்தவர் என் இஷ்ட தெய்வமான ராமபிரானேயாவார். அவர்தாம் மானுட வடி வெடுத்து வந்து எனக்கு உணவு படைத்துவிட் டுப் போயிருக்கிருர்" என்ருர்.

தெய்வத்தை முற்றும் சார்ந்திருந்து தெய் வச்சிந்தனையில் மூழ்கியிருந்த சான்றோர்கள் உணவுக்காகவும் உடைக்காகவும் கவலைப் படாதிருந்தார்கள். அவர்களுக்குத் தேவை யானவை தெய்விக அருளால் வந்து கிடைத் துக்கொண்டிருந்தன. உள்ளம் தெய்வச்சிந் தனையில் ஈடுபடுகின்றபொழுது உள்ளத்தில் ஓஜஸ் என்னும் தெய்விக ஒளி உண்டாகிறது. அது மேனியின் மூலம் வெளிப்படும்பொழுது தேஜஸ் என்னும் பெயர்பெறுகிறது. உள் ளத்தை ஓஜஸும், மேனியைத் தேஜஸும் அலங்காரம் செய்கின்றன. அது தெய்விக அழகு ஆகிறது. அவ்வழகு உலகத்தவர்களு டைய உள்ளத்தில் தூய்மையையும் சாந்தத் தையும் உண்டுபண்ணுகிறது. இயற்கையி லுள்ள தாவரங்களை இறைவன் அலங்கரிப்பது போன்று துறவிகளையும் இறைவன் ஓஜஸா

லும் தேஜஸாலும் அலங்கரிக்கின்றார். இயேசு நாதருடைய இவ்வுபதேசம் இக்கருத்தை விளக்குகின்றது.

35. நீங்கள் செய்யக்கிடக்கும் கடமை ஒன்று உண்டு. எதை அருந்துவோம், எதைப்பருகுவோம், எதை அணிந்துகொள்வோம் என்ற கவலைகளை ஒழித்துவிடுங்கள். அறிவிலிகள் இத்தகைய அற்ப விஷயங்களைப் பற்றிக் கவலைப்பட்டுக்கொண்டிருப்பார்கள். நீங்கள் கடவுளை நாடுங்கள். உங்களுக்குத் தேவையானவைகளை எல்லாம் அவர் அறிவார். உங்களுக்கு அவைகளை அவர் நிறைவேற்றியும் வைப்பார்.

இறைவன் அருளையே நாடுங்கள். அவர் வகுத்து வைத்துள்ள அறநெறியிலிருந்து பிறழாதிருங்கள். அப்பொழுது உலகப்பொருள்கள் யாவும் தாமாக உங்களை வந்து சேரும்படி இறைவன் செய்து வைப்பார்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் பகர்ந்துள்ளதாவது: "பறவைகளும் துறவிகளும் நாளைக்கு என்று எதையும் தேடிவைப்பதில்லை." இத்தகைய துறவுநிலையை எல்லாரும் பின்பற்ற முடியாது. ஆனால் அகங்காரமற்று உலகில் வாழ்ந்திருக்கமுடியும். இல்லறத்தில் வாழ்ந்திருப்பவர்கள் இறைவனிடம் தங்களை ஒப்படைத்துப் பழகவேண்டும். உலகக்கடமைகளை நிறைவேற்றுவதற்கிடையில் இல்லறத்தார்கள் பற்றற்று வாழ்ந்திருக்கவும் தெரிந்து கொள்ளவேண்டும். ஒருவேலைக்காரி தன் எஜமானனுடைய குழந்தையை அன்புடன் பராமரிக்கிறாள். 'என் கண்ணே!' என்று அக்குழந்தையிடம் கொஞ்சி விளையாடுகிறாள். அக்குழந்தையைக் கண்ணும் கருத்துமாக வளர்த்து வருவதற்கிடையில் அக்குழந்தை தன்னுடையதன்று என்பதை அறிந்திருக்கின்றாள். அந்த வேலைக்காரி போன்று இல்லறத்தார் உலகத்தில் வாழ்ந்து வரவேண்டும். குழந்தைகளிடம் அன்புசெலுத்தி வளர்ப்பதற்கிடையில் அவைகள் யாவும் இறைவனுக்குரியவைகள் என்றும் தம்முடைய குழந்தைகள் அல்லவென்றும் அறிந்திருக்கவேண்டும். அப்படி இல்லறத்தார்கள் வாழ்வார்களானால் அவர்களுடைய உள்ளம் உலகத்தோடு ஒட்டாதிருக்கும். கடவுள் நம்மை உலகத்தில் வைத்திருக்கின்றார். நம்மை உலகத்தில் வைத்திருக்கின்ற வரையில் அவரிடம் நம்மை ஒப்படைத்து வாழ்வதைத் தவிர நமக்கு வேறு வழியில்லை. அவரிடம் நம்மை ஒப்படைத்து வாழ்கின்ற அளவு உலகப்பற்றிலிருந்து நாம் விடுபடலாம். அவரை மறந்தால் பந்தத்தில் நாம் அகப்பட்டுக் கொள்கின்றோம்.

நாம் உலகத்தில் எப்படி வாழவேண்டும்? என்பதை ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஒரு நெசவுக்காரன் கதையின் மூலம் விளக்குகிறார். ஒரு நெசவுக்காரன் ராமபக்தி உடையவனாக இருந்தான். ஊர்மக்கள் அனைவரும் அவனிடத்தில் நம்பிக்கையும் பக்தியும் கொண்டிருந்தார்கள். ஊர்மக்களுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமாகும்படி அவன் நேர்மையான வாழ்விலும் பக்தியிலும் ஈடுபட்டிருந்தான். ஓர் இரவு அவன் தன் வீட்டுப் பிரார்த்தனை அறையில் அமர்ந்து ராமநாமம் சொல்லிக்கொண்டிருந்தான். அப்பொழுது அவன் தனியாக இருந்தான். கொள்ளைக் கூட்டத்தினர் அவன் வீட்டுப்பக்கம் வந்தார்கள். கொள்ளை அடித்த பொருளைத் தூக்கிச் செல்வதற்கு அவர்களுக்கு ஓர் ஆள் தேவைப்பட்டான். எனவே அவர்கள் அந்தச் சேணியனைத் தங்களோடு அழைத்துப் போனார்கள். அவர்கள் ஒரு வீட்டுக்குள் புகுந்து பொருள்களைக் களவாடினார்கள். களவாடிய பொருள்களை மூட்டையாகக் கட்டிச் சேணியன் தலைமீது வைத்தார்கள். திடீரென்று வீட்டுக் காவல்காரன் அங்கு வந்து விட்டான். திருடர்கள் தப்பி ஓடிவிட்டார்கள். ஆனால் சேணியன் அகப்பட்டுக்கொண்டான். சேணியன் இரவு முழுவதும் காவலில் வைக்கப்பட்டான். அடுத்தநாள் சேணியன் நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டான். ஊர் மக்கள் அனைவரும் ஏகமனதாகச் சேணியன் எப்பொருளையும் திருடி இருக்கமாட்டான் என்று நீதிபதியிடம் சொன்னார்கள். நீதிபதி சேணியனிடம் நிகழ்ந்ததை விவரமாகக் கூறும்படி கேட்டார். சேணியன் பகர்ந்ததாவது: "மதிப்பிற்குரிய நீதிபதி அவர்களே! ராமனுடைய இச்சைப்படி ராமநாமத்தை ஜபித்துக்கொண்டு பூஜை அறையில் அமர்ந்திருந்தேன். ராமனுடைய இச்சைப்படி அவ்வழியாக வந்த கொள்ளைக் கூட்டத்தினர் அவர்களோடு என்னை அழைத்துச் சென்றார்கள். ராமனுடைய இச்சைப்படி அவர்கள் ஒரு வீட்டில் புகுந்து பொருள்களைத் திருடினார்

கள். ராமனுடைய இச்சைப்படி திருடிய பொருள்களை மூட்டையாகக்கட்டி என் தலை மீது வைத்தார்கள். ராமனுடைய இச்சைப்படி காவல்காரன் அங்கு வந்தான். ராமனுடைய இச்சைப்படி நான் மட்டும் அகப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டேன். ராமனுடைய இச்சைப்படி இப்பொழுது உங்கள் முன்னிலையில் அழைத்து வரப்பட்டுள்ளேன்.'' நீதிபதி சேணியனுடைய உண்மை வாக்கு மூலத்தையும் பக்தியையும் பார்த்து அவனை விடுதலை செய்தார். சேணியன் வீட்டுக்குப் போகும் வழியில் ஊர் மக்களிடம் அவன் பகர்ந்ததாவது: "ராமனுடைய இச்சையால் நான் விடுதலையானேன்.'' சேணியன் போன்று இல்லறத்தான் ஒருவன் தன்னை முற்றிலும் தெய்வத்திடம் ஒப்படைக்கும்பொழுது தெய்வம் அவனுக்கு வழிகாட்டுகின்றார். சான்றோர்கள் தங்கள் வாழ்க்கையில் இவ்வுண்மையைச் சோதித்துப் பார்த்திருக்கிறார்கள். கண்ணனும் கீதையில் பகர்ந்திருப்பதாவது: "வேறு எண்ணம் இல்லாது எவனொருவன் என்னையே சிந்தித்துக்கொண்டிருக்கின்றானோ அவனுக்குத் தேவையானவைகளை எல்லாம் கொடுக்கின்றேன். அவற்றை அவனிடமிருந்து நீங்காதிருக்கும் பொருட்டுப் பாதுகாத்துக்கொண்டும் இருக்கின்றேன்." கண்ணனே இத்தகைய வாக்குறுதி கொடுத்திருக்கும்பொழுது உலக வாழ்க்கையைக் குறித்து நாம் ஏன் கவலைப் பட வேண்டும்?

உண்மையான அருள் நாட்டம் நமக்கு இருக்குமானால் கடவுள் துணை செய்வதை நாம் உணரலாம். அருள் நாட்டம் உடையவர்கள் தெய்வத்தைத் தவிர வேறொன்றையும் நாடுவதில்லை. தெய்வத்தின் அருள்கிட்டியவர்களுக்கு அனைத்தும் வந்து வாய்த்துவிடுகின்றன. அருள் நாட்டம் உடையவர்கள் லௌகிகச் சம்பத்துக்களை நாடுவதில்லை. ஆனால் அவர்கள் விரும்பாவிட்டாலும் லௌகிகச் சம்பத்துக்கள் அவர்களுக்கு வந்து வாய்த்து விடுகின்றன. தாய் ஒருத்தி குழந்தைக்குத் தேவையானது எது என்பதை அறிந்து அதைக் கொடுத்துக் குழந்தையைப் பாதுகாக்கின்றாள். அதே போன்று கடவுள் தம் பக்தர்களுக்கு வாழ்க்கைக்குத் தேவையானதை அறிந்து அதை அவர்களுக்கு வழங்கிவருகின்றார். உலகப் பொருள்களைக் கடவுளிடம் கேட்டுப்பெறுவது அல்லது உலகப்பொருள்களுக்காகக் கடவுளை வழிபாடு செய்வது காமிய வழிபாடு ஆகும். அது சமயத்துறையில் கீழான செயலாகக் கருதப்படுகிறது. உலகச் சம்பத்துக்களை மனிதன் தன் முயற்சியினால் பெற்றுவிடலாம். மனிதன் எவ்வளவு முயன்றாலும் கடவுள் அருள் இல்லாது கடவுள் காட்சி பெறமுடியாது. கடவுள் அருள் பெறுவதற்கு மனம் தூயதாக வேண்டும். தெய்வச் சிந்தனையும், தெய்வப் பணிவிடையும் மனதைத் தூயதாக்குகின்றன.

ஆன்மிகத் துறையில் முன்னேற்றம் அடைய ஞானம், பக்தி, வைராக்கியம் உள்ளத்தில் ஏற்படவேண்டும். அவைகளை உள்ளத்தில் வளர்க்கவேண்டுமென்று தெய்வத்தினிடம் பிரார்த்தனை செய்து கொள்ளலாம். சுவாமி விவேகானந்தர் குடும்பத்தின் வறுமை நீங்க வேண்டுமென்று அம்பிகையினிடம் பிரார்த்தனை செய்யப்போனார். ஆனால் அதை அவர் மறந்து விட்டு அம்பிகையினிடம் ஞானம், பக்தி, வைராக்கியம் வேண்டுமென்று பிரார்த்தித்து வந்தார். குடும்ப வறுமை போகவேண்டுமென்று அம்பிகையினிடம் பிரார்த்திக்க அவரால் முடியவில்லை. அம்பிகை சன்னிதிக்குப் போனதும் அப்படிப் பிரார்த்தனை செய்வது அற்பப் பிரார்த்தனை என்று அவருக்குத் தோன்றியது.

மேற்கூறிய சான்றிலிருந்து ஈசனுடைய அருளையும், ஈசனுடைய காட்சியையும் பெறுவது தான் நம்முடைய குறிக்கோள் என்பதை அறிந்துகொள்ளவேண்டும். இந்த உயர்ந்த லட்சியத்தில் நம் உள்ளம் உறுதிபெறுகின்றபொழுது உலகத்தேவைகள் தாமாகப்பூர்த்தியாகிவிடுகின்றன. தாயை முற்றும் நம்பி இருக்கின்ற குழந்தையைத் தாய் காப்பாற்றத் தவறுவதில்லை. தெய்வத்தை முற்றும் நம்பி இருப்பவர்களைத் தெய்வம் காப்பாற்றத் தவறமாட்டார். தெய்வத்தினிடம் உன்னை ஒப்படைத்துவிடுவாயானால் உனக்கு வேண்டியவற்றையெல்லாம் அவர் பார்த்துக்கொள்வார். இயேசுவின் இவ்வுபதேசம் இக்கருத்தை விளக்குகிறது.

கண்ணன் வாழ்வும் போதனையும்

(1980ஆம் வருடம் மதுரை ஸ்ரீ கிருஷ்ண ஜயந்தி விழாவில் ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள் ஆற்றிய உரை)

ராமன் நரோத்தமன் என்று அழைக்கப்படுகின்றார். கிருஷ்ணன் பரமாத்மா என்று அழைக்கப்படுகின்றார். கிருஷ்ணன் பூரண அவதாரமாக விளங்குகின்றார். பாரமார்த்திகப் பெருநிலையிலிருந்து மனிதனுடைய நன்மைக்காகக் கிருபை கூர்ந்து கீழ்நிலைக்கு இறங்கி வருவதை அவதாரம் என்கின்றோம். நம் புராணங்கள் தசாவதாரங்களைப் பற்றிக் கூறுகின்றன. புரான பூர்வமாக எடுக்குமிடத்து ஓர் அவதாரத்திற்கும் மற்றோர் அவதாரத்திற்கும் இடைக்காலம் அதிகமாக அமைந்திருக்கிறது. அது உண்மையன்று. தசாவதாரங்கள் இன்றைக்கும் ஏக காலத்தில் பிரபஞ்சத்தில் அமைந்திருக்கின்றன. அவதாரங்களில் கண்ணனுடைய மகிமையை எளிதில் அறிந்துகொள்ள முடிகின்றது.

பத்து அவதாரங்களுள் முதல் அவதாரமாக மத்ஸ்ய அவதாரம் அமைந்திருக்கிறது. பஞ்ச பூதங்கள் தோற்றத்துக்கு வரும்பொழுது முதலில் ஆகாசம் தோற்றத்துக்கு வருகிறது. ஆகாசத்தினின்று வாயுவும், வாயுவினின்று அக்னியும், அக்னியினின்று நீரும், நீரினின்று நிலமும் தோற்றத்துக்கு வருகின்றன. உயிர் வாழ்க்கைக்கு நீர் பொருத்தமான சூழ்நிலையாக இருக்கின்றது. எங்கு நீர் இருக்கின்றதோ அங்கு உயிர் தோன்ற ஆரம்பிக்கின்றது பிரளய காலத்தில் உயிர்கள் தோன்றா நிலையில் இருக்கின்றன. நாம் தூங்குகின்றபொழுது நம்முடைய பாங்குகளெல்லாம் தோன்றா நிலையில் இருக்கின்றன. தூக்கத்திலிருந்து எழுந்திருக்கும் பொழுது நாம் பெற்றிருக்கின்ற பண்புக் கேற்ற பாங்கில் எழுந்திருக்கின்றோம். பிரளய காலத்தில் உயிர்கள் அனைத்தும் தோன்றா நிலைக்குப் போய்விடுகின்றன. சிருஷ்டி ஏற்படும்பொழுது அந்தந்த ஜீவன் தானே தோற்றத்துக்கு வருகிறது. ஆகையால் ஜீவகோடிகளும் அவைகளின் தொகையாக இருக்கின்ற சிருஷ்டி கர்த்தாவாகிய பிரம்மதேவனும் சுயம்பு என அழைக்கப்படுகின்றனர். சுயம்பு என்றால் தானாகத் தோற்றத்துக்கு வந்தவன் என்பது பொருள். உயிர்கள் அனைத்தும் தாங்களாகத் தோற்றத்துக்கு வந்திருக்கின்றன. நீர் வாழ்வன அனைத்தும் இன்றைக்கும் தோற்றத்துக்கு வந்து கொண்டிருக்கின்றன. எனவே மத்ஸ்ய அவதாரம் நிகழ்ந்து கொண்டே இருக்கிறது.

நிலத்தில் வாழும் உயிர்வகைகள் இருக்கின்றன. நீரிலும் நிலத்திலும் வாழ்ந்திருக்கின்ற உயிர்வகைகள் இருக்கின்றன. ஆமை நீரிலும் இருக்கும்; நிலத்திலும் இருக்கும். மத்ஸ்ய அவதாரத்துக்கு அடுத்தது கூர்ம அவதாரமாகும். கூர்மம் என்றால் ஆமை என்பது பொருள். ஆமை, நண்டு, தவளை, முதலை, பாம்பு ஆகியவைகள் நீரிலும் நிலத்திலும் வாழ்கின்ற உயிர்வகைகளாகின்றன. அவைகளுக்குப் பொதுப் பெயராகக் கூர்ம அவதாரம் என்ற பெயர் அமைந்திருக்கிறது. இந்த உயிர்வகைகளும் எல்லாக் காலத்திலும் தோன்றிக்கொண்டே இருக்கின்றன.

கூர்ம அவதாரத்துக்கு அடுத்து வராக அவதாரம் அமைகின்றது. வராகம் என்றால் பன்றி என்பது பொருள். பன்றி நிலத்தில் வாழும் உயிர் ஆகிறது. ஆனாலும் அதற்கு நீரினிடத்து அலாதியான அபிமானம் உண்டு. நீர்ப்பன்றி, காட்டுப்பன்றி, எருமை, யானை, நீர்யானை ஆகியவைகள் நிலத்தில் வாழ்ந்திருந்தாலும் நீரில் அவைகளுக்குப் பற்று இருக்கின்றன. அவைகளுக்குப் பொதுவாக வராக அவதாரம் என்று பெயர்.

வராக அவதாரத்துக்கு அடுத்து நரசிம்ம அவதாரம் வருகின்றது. விலங்கினத்திற்கும், மனிதனுக்கும் இடையிலிருப்பது நரசிம்ம அவதாரம். இந்த நிலையில் விலங்குத் தன்மை சிறிது சிறிதாக மனிதத் தன்மையாக வடிவெடுக்கிறது. நரன் என்றால் மனிதன் என்பது பொருள். சிம்மம் விலங்குகளுக்கு உள்ள பொதுப் பெயர். மனிதத்தன்மையும் விலங்குத் தன்மையும் ஒன்றுசேரும் நிலை நரசிம்ம அவதாரமாகும். நம்முடைய ஜீவிதத்தை நாம் ஆராய்ந்து பார்த்தால் நாம் அனைவரும் நரசிம்ம மூர்த்திகள் என்பது விளங்கும். விலங்குத் தன்மை நம்மிடத்திருக்கிறது. மனிதத் தன்மை

முன்னணியில் நிற்க விலங்குத் தன்மை நம்மிடத்து மறைந்திருக்கிறது. பண்பட்ட பெருமகனுக வாழ்ந்திருக்கின்ற ஒருவனுக்குத் திடீரென்று அசாதாரணமான சூழ்நிலையை உண்டு பண்ணினல் அவன் தன்னுடைய காட்டுமிராண்டித் தனத்தைக் காட்டுகின்ருன். இது மக்களில் பெரும்பான்மையோர் பாங்காக இருப்பதினல் நம்மில் பெரும்பான்மையோர் விலங்குத் தன்மை, மனிதத் தன்மை இரண்டும் கலந்த நிலையில் இருக்கின்ேறாம். அதற்கு எடுத்துக்காட்டாக நரசிம்ம மூர்த்தி அமைகின்ருர்.

நரசிம்ம அவதாரத்துக்கு அடுத்தபடியாக வாமன அவதாரம் அமைகின்றது. வாமனம் என்ருல் குள்ளமான மனிதன் என்பது பொருள். மனபரிபாகம் இன்னும் நன்ருக வராத நிலையில் மக்களுள் பலபேர் மானுட வடிவம் எடுத்திருக்கிருர்கள். மனநிலையில் அவர்களுக்கும் விலங்குகளுக்கும் அதிக வித்தியாசம் இல்லை. மனபரிபாகம் அடையாது மானுடவடிவெடுத்திருக்கும் அவர்கள் மாக்கள் என்று அழைக்கப்படுகின்ருர்கள். மனித வடிவம் வந்தாகி விட்டது. இனி அறிவு வளர்ச்சி வருவது முற்றிலும் அவசியமாகிறது. அத்தகைய நிலையில் உள்ள உயிர்களுக்கு எடுத்துக்காட்டாக வாமன அவதாரம் அமைகின்றது. வாமன அவதார நிலையில் உள்ள மனிதர்கள் இன்றைக்கும் சமுதாயத்தில் இருந்து வருகின்ருர்கள்.

வாமன அவதாரத்துக்கு அடுத்து பரசுராமன் அவதாரம் வருகின்றது. பரசுராமன் என்ருல் கோடரியைக் கையில் ஏந்திக்கொண்டிருப்பவர் என்பது பொருள். மானுடன் ஒருவனிடம் இருக்கவேண்டிய ஆற்றல், அன்பு, அறிவு ஆகியவைகள் இருப்பதற்கிடையில் முரட்டுத்தனமும், கோபாவேசமும், பழிக்குப் பழிவாங்கும் தன்மையும் பரசுராமன் இடத்தில் அமைந்திருக்கின்றன. பரசுராமன் வடிவத்தில் இருக்கின்ற மக்கள் கூட்டத்தை இன்றைக்கும் காணலாம். பரசுராமன் அவதாரம் ஆருவது அவதாரமாகிறது.

பரசுராமன் அவதாரத்துக்கு அடுத்து ஏழாவது அவதாரமாக ராம அவதாரம் அமைகின்றது. மானுட வடிவத்தில் வந்திருக்கின்ற மூர்த்திகளுள் தர்மமே வடிவெடுத்தவராகத் தசரத ராமன் இருக்கின்ருர். மானுடப் பண்புகள் அனைத்தும் அமையப் பெற்றவராகத் தசரத ராமன் அமைந்திருக்கின்ருர். ஆகையால் அவர் நரோத்தமன் என்று அழைக்கப்படுகின்ருர். தர்மத்தை விட்டு இம்மியளவும் பிசகாதவராக ராமன் இருக்கின்ருர். உலகத்தில் எப்படி வாழ்ந்திருக்கவேண்டும்? எதை விலக்கவேண்டும்? எதைக் கடைப்பிடிக்க வேண்டும்? என்ற கேள்விகளுக்கு ராமனுடைய வாழ்க்கையில் விடை கிடைக்கின்றது.

ராம அவதாரத்துக்கு அடுத்து எட்டாவது அவதாரமாகிய கிருஷ்ண அவதாரம் அமைகின்றது. கிருஷ்ணனைப் பரமாத்மா என்று சொல்லுகின்ேறாம். மானுடப் பண்பு முழுதும் உச்சநிலையில் ராமனிடத்தில் அமைந்திருக்கின்றது. பண்பாட்டில் உச்சநிலையை அடைந்தான பிறகு அடுத்து வடிவத்தில் மனிதனுக இருந்தாலும் ஆத்ம சொரூபத்தை விளக்குவது கிருஷ்ண அவதாரம். கிருஷ்ணனும் தம்மைப் பரமாத்மாவென்றே பகர்கின்ருர். தம்மைப் பிறவாதவர் என்றும், தோன்ருநிலையில் இருக்கின்ற பரமாத்ம சொரூபம் என்றும், பூதங்கள் எல்லாவற்றுக்கும் ஈசுவரன் என்றும் அவர் தம்மைப் பற்றிப் பகர்ந்துள்ளார். தோன்ருநிலையில் இருக்கின்ற அவர் தம்மிடத்திலுள்ள மாயா சக்தியைக்கொண்டு தம்மைத் தோன்றியவராகக் காட்டிக்கொள்கின்ருர். அப்படித் தம்மை யுகந்தோறும் தோற்றுவித்து நலத்தைக் காப்பாற்றியும், கேட்டை அழித்தும், நல்லவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுத்தும், கெட்டவர்களை அழித்தும் வருகின்ருர். இயற்கையின் திட்டத்தில் கேடு தலை எடுப்பது போல் தென்படுகிறது. ஆனல் அது அழிந்துபட்டுப் போகிறது. கெட்டவன் முன்னேற்றம் அடைவதுபோல் தென்படுவான். ஆனல் அவனுடைய வாழ்க்கை வெற்றிகரமாகப் பூர்த்தி ஆகாது. வாழ்வு முடியும் பொழுது தோல்வியில்தான் முடியும். நல்லவனுகத் தோன்றி நலத்திலிருந்து பிசகாதிருப்பவன் சோதனைகளுக்கும் கஷ்டங்களுக்கும் ஆளாகின்ருன். ஆனல் அவைகளுக்கிடையில் அவன் நலத்தைவிட்டுப் பிசகாதிருக்கின்ருன். இறுதியில் அவனுடைய வாழ்வு மங்களமாகப்

பூர்த்தி ஆகிறது. இயற்கை முழுவதிலும் இது சதாகாலம் நிகழ்ந்துகொண்டிருக்கிறது. கிருஷ்ணபரமாத்மா அன்ெருரு காலத்தில் தோன்றினர் என்றும், இன்று அவர் இல்லை யென்றும் கருதலாகாது. அவருடைய பிரதிநிதி களாகச் சிலர் இருந்து அவருடைய செயல் களைச் செய்து வருகின்றுர்கள்.

கிருஷ்ண அவதாரத்துக்கு அடுத்து ஒன்பதா வது அவதாரமாகப் புத்த அவதாரம் அமை கின்றது. மனிதன் தன்னுடைய முயற்சியால் பெருநிலையை அடையலாம் என்பதைப் புத்த அவதாரம் விளக்குகின்றது. கடவுள் உயிர்கள் மயமாக இருக்கின்றுர் என்று ஈசாவாஸ்ய உபநிஷதம் பேசுகிறது. தங்கத்துக்குப் புறம் பாக நகை எப்படி இல்லையோ அப்படிப் பரம னுக்குப் புறம்பாக எந்த உயிரும் இல்லை. 'ஆதிபகவன் முதற்றே உலகு' என்பது கோட் பாடு. அணு உயிராகத் துவங்கி அவதார மூர்த்திகளாக விளங்கும் ராமன், கிருஷ்ணன், புத்தன் போன்ற நிலை ஈருக எல்லா வடிவங் களிலும் ஈசனே இருக்கின்றுர். நாம் முயன் ருல் நம்முடைய யதார்த்த நிலையாகிய பர நிலையை எட்டலாம் என்ற சிறந்த செய்தியைப் புத்த அவதாரம் தெரிவிக்கின்றது. பரீக்ஷித்து ஏழு நாட்களில் மனபரிபாகம் அடைந்து முக்தி நிலையை அடைந்துவிட்டார். பாரமார்த் திகப் பெருநிலையைச் சரீரத்தை உகுப்பதற்கு முன்பு ஒருவன் அறிந்துவிட்டாலும் அவன் மீண்டும் பிறவாத முக்திநிலையை எட்டிவிடு கின்றுன். ஆகையினுல் இந்த ஜன்மம் வீணுகப் போய்விட்டது என்று யாரும் ஏமாற்றம் அடையவேண்டியதில்லை. தக்க விவேகமும் ஆத்ம விழிப்பும் வந்துவிட்டால் ஆத்மபோதம் பெறுவதற்கு அரைநிமிடம் போதுமானது என்று புத்த பெருமான் காட்டித் தந்துள்ளார்.

புத்த அவதாரத்துக்கு அடுத்துப் பத்தாவது அவதாரமாகிய கல்கி அவதாரம் அமைகிறது. கல்கி அவதாரத்தைப் பிரளயம்என்றுசொல்லு கின்ருேம். நாள்தோறும் நாம் சுஷுப்தி அவஸ்தையில் கல்கி அவதாரத்தில் இருக்கின் ருேம். தூங்கி விழித்து எழுகின்றபொழுது நாம் அடைந்திருக்கின்ற பரிபாகத்திற்கேற்ப ஒன்பது அவதாரங்களுள் ஏதாவது ஓர் அவ தாரத்தில் வாழ்க்கையை நடாத்துகின்ருேம்.

தசாவதாரங்கள் சர்வகாலமும் பிரபஞ்சத் தில் இருந்து வருகின்றன. நாம் படிப்படியாக மேல் நிலைக்கு வந்து பாரமார்த்திக நிலையை எட்டிவிட்டால் வாழ்க்கை பூர்த்தியாகின்றது. அதன்பிறகு மறுபிறவி நமக்கு இல்லை. பரத் தில் நாம் ஒன்றுபட்டுவிடுகின்ருேம். பார மார்த்திகநிலையை எட்டுவதற்கு முன்பு பிறந்து கொண்டும், இறந்துகொண்டும் இருக்கின் ருேம். நாள்தோறும் உறக்கத்தின் வாயிலாக வும், விழிப்பின் வாயிலாகவும் இதை நாம் நிரூபித்து வருகின்ருேம். கிருஷ்ணனுடைய சொரூபத்தை நாம் அறிந்துகொண்டால் நாம் அறியவேண்டியவைகளை அறிந்தவர்களாகின் ருேம். ஜீவர்கள் கணக்கற்ற வடிவங்களில் தோன்றி இருக்கின்றுர்கள். பஞ்சபூதங்களா லாகிய சரீரங்களை அவர்கள் எடுத்திருக்கின் றுர்கள். அவ் வடிவங்களின் மூலமாக அவர் களை நாம் அறிகின்ருேம். கிருஷ்ண பரமாத்மா பஞ்சபூதங்களாலாகிய சரீரத்தை எடுத்தார். அந்த வடிவத்தைச் சரியாக ஆராய்ச்சிபண்ணி ஞல் பரவஸ்து நமக்கு விளங்குகிறது. கிருஷ்ண னுடைய வடிவம் தியானத்துக்குரியது. அவ ருடைய நாமம் ஜபத்துக்குரியது. அவருடைய வாழ்வு ஆராய்ச்சிக்குரியது. தர்மம் என்ன என்பதை அறிந்துகொள்ள விரும்பினுல் அவ ருடைய ஜீவிதத்தைச் சரியாக ஆராய்ந்து பார்க்கவேண்டும். வாழ்க்கையின் முடிவான குறிக்கோளுக்கு இலக்காகக் கிருஷ்ணன் இலங்குகின்றுர். அவருடைய ஜீவிதத்தில் நாம் கண்டறிந்துகொள்ளும் உண்மைகள் பல இருக் கின்றன.

ஒவ்வொரு ஜீவனும் நல்லொழுக்கமும் இனி மையும் வடிவெடுத்தவனுக வேண்டும். ஒவ் வொரு ஜீவனும் பேரறிவுபடைத்தவனுகவேண் டும். ஒவ்வொரு ஜீவனும் பேராற்றல் படைத் தவனுகவேண்டும். ஒவ்வொரு ஜீவனும் பேரன்பு படைத்தவனுகவேண்டும். கிருஷ்ணபரமாத்மா பேரறிவு, பேரன்பு, பேராற்றல் படைத்தவராக யாண்டும் இருந்து வருகிருர். அவர் பிறக்கும் பொழுதே பேராற்றல் படைத்தவராகப் பிறந் தார். அன்னைக்கும், தந்தைக்கும் காரியங்களை என்னென்ன பாங்கில் செய்யவேண்டும் என் பதைக் காட்டித்தருகிருர். தம்முடைய மாயா சக்தியினுல் தேவகிக்குக் குழந்தையாகப் பிறக்

கின்றார். சூழ்நிலையின் காரணமாக அவர் யசோதைக்குக் குழந்தையாகின்றார். ஆகையால் ஒருத்தி மகனாகப் பிறந்து மற்றொருத்தி மகனாக வளர்ந்தவர் என்று அவரைப்பற்றிக் கூறுகின்றார்கள்.

குழந்தைப் பருவத்தில் அவர் அஷ்டசித்திகளை விளையாட்டாகச் செய்தார். அஷ்டசித்திகளுள் ஏதேனும் ஒன்றைச் செய்துவிட்டால் அதைக் குறித்து ஒருவனுக்குத் தற்பெருமை வந்துவிடும். சித்துக்கள் மூலமாக அகங்காரம் வளர இடம்தந்துவிடுகிறார்கள். அகங்காரத்திற்கு இடம் தருபவர்களுடைய முன்னேற்றம் தடைப்படுகிறது. சித்தி அடையப் பெற்றவர்கள் பெரும்பாலும் யோகப்பிரஷ்டர்களாக மாறிக்கீழ்நிலையை அடைகின்றனர். கிருஷ்ணன் சித்திகளையெல்லாம் உலக நன்மைக்குப் பயன்படுத்தினார். தம்முடைய நன்மைக்காகவென்றோ; தம்முடைய பெருமைக்காகவென்றோ அவர் சித்துக்களைக் கையாளவில்லை. கேட்டை வென்று நலத்தினை நாட்டுதற்காக அவர் தம் சின்னஞ் சிறு வயதிலேயே சித்துக்களைக் கையாண்டார். மழையைத் தடுப்பதற்குக் கண்ணன் கோவர்த்தன மலையைத் தூக்கிப்பிடித்தார். குடிநீர்க் குளத்தை விஷமாக்கிக்கொண்டிருந்த பாம்பைக் கொல்லுவதற்கு அக்குளத்தில் குதித்து அப்பாம்போடு விளையாடி அதைக்கொன்றார்.

உபநிஷதங்களிலே விதைக்கு நிகராக மறைந்த நிலையிலிருந்த பக்திமார்க்கத்தைக் கண்ணன் தோற்றத்துக்குக் கொண்டுவந்தார். கண்ணனுடைய பிருந்தாவன லீலை முழுவதும் பக்திக்கு விளக்கமாக அமைகின்றது. உயிர்களாகிய நாம் அனைவரும் அன்பு சொரூபம் அன்பை அறியாத உயிர்கள் இல்லை. அன்பைத் தெய்விக அன்பாக மாற்றுவோமானால் அது பக்தி எனப்படுகிறது.

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிகிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே" என்பது

திருமூலர் வாக்கு. நம் அனைவரிடத்தும் அன்பு இருக்கின்றது. அதைத்தெய்விக அன்பாக மாற்றுவோமானால் நமக்குப் பாரமார்த்திகப் பெருநிலை வந்து வாய்க்கின்றது. பிருந்தாவனத்தில் வாழ்ந்து வந்த கோபாலர்கள், கோபியர்களோடு விளையாடி, அவ்விளையாட்டின்மூலம் அவர்களிடையே கண்ணன் அன்பை வளர்க்கின்றார். அன்பு வளர வளர யான், எனது என்ற செருக்கு அவர்களிடமிருந்து பின்னணிக்குப் போய்விட்டன. அன்பு ஓங்கும் பொழுது பயமும் போய்விடுகிறது. அன்பில் ஊறியிருக்கின்றவர்கள் காலத்தையும், இடத்தையும் கடந்துவிடுகிறார்கள். அவர்கள் ஜீவபோதத்தையும் கடந்து பரத்தில் ஒன்றுபட்டு விடுகிறார்கள்.

கண்ணன் பிருந்தாவனத்தில் சிறுவர் சிறுமிகளோடு சேர்ந்துவிளையாடினார். பிருந்தாவனக் கோபாலர்களும், கோபியர்களும் கண்ணனிடம் பராபக்தியை வேண்டுகின்றனர். "பராபக்திக்கு உரிய பரிபாகம் உங்களிடம் இல்லை" யென்று கண்ணன் பகர்கின்றார். அப்பொழுது கண்ணனுக்கு வயது ஆறு ஆகும். "கண்ணா! நாங்கள் உமக்குச் சொந்தமாக இருக்கின்றோம். உம்மிடம் நாங்கள் பேரன்பு உடையவர்களாக இருக்கின்றோம்."

"உற்றோமேயாவோம் உமக்கே யாம் ஆட் செய்வோம் மற்றை நம் காமங்கள் மாற்று என்ற ஆண்டாளுடைய கோட்பாட்டுக்கு ஒப்ப உமக்கு நாங்கள் உரியவர்களாகின்றோம். என்று பிருந்தாவனக் கோபியர்களும் கோபாலர்களும் சொன்னார்கள். கண்ணன் பிரேமை பக்திபெறுவதற்குரிய பரிபாகம்இன்னும் அவர்களுக்கு வரவில்லையென்பதை விளக்கிக்காட்ட விரும்பினார். யமுனை நதிக்கரையில் ஆடைகளையெல்லாம் களைந்துவிட்டு ஒருநாள் யமுனையில் கோபிமார்கள் நீராடிக் கொண்டிருந்தார்கள். திடீரென்று அவர்களுடைய ஆடைகள் வைத்த இடத்திலிருந்து மறைந்துவிட்டன. திகைப்புற்றவர்களாக அவர்கள் நாலாப் பக்கமும் பார்த்தார்கள். யமுனை நதிக்கரையிலிருந்த மரத்தின்மீது கண்ணன் அமர்ந்துகொண்டு அவர்களுடைய ஆடைகளையெல்லாம் மரத்திலுள்ள கிளைகளில் மாட்டி வைத்திருந்தான். கோபிமார்கள்: "கண்ணா! நீ ஆண்பிள்ளை அல்லவா!"

கண்ணன் : "அப்படியா?"

கோபிமார்கள் : "நீ செய்தது அடாத செயல்."

கண்ணன் : "அப்படியா?"

கோபிமார்கள் : "தயவுசெய்து எங்கள் ஆடைகளைக் கீழே போட்டுவிடு."

கண்ணன் : "நீங்கள் ஒவ்வொருவரும் நீரைவிட்டு வெளியே வந்து நமஸ்காரம் செய்யுங்கள். உங்கள் ஆடைகளை உங்களுக்குத் தருகின்றேன்."

கோபிமார்கள் : "கண்ணா! நீ இப்படிக் கேட்பது தகாது. இந்தப் பழி பாவத்துக்கு நீ உட்படாதே. தயவு செய்து எங்கள் ஆடைகளைக் கொடுத்துவிடு."

கண்ணன் அவர்களுடைய ஆடைகளையெல்லாம் கீழே போட்டுவிட்டார். அடுத்தநாள் கண்ணன் அவர்களைப் பார்த்துப் பகர்ந்ததாவது : "உங்களிடம் இன்னும் தேகாத்ம புத்தி போகவில்லை. குழந்தைகளிடம் தேகாத்ம புத்தி இன்னும் உருவாகவில்லை. ஆகையால் அவர்கள் ஆண் பெண் என்ற உணர்ச்சி இல்லாமல் ஒன்றுகூடி விளையாடுகின்றனர். தேகாத்ம புத்தி தாண்டிய நிலையில் உள்ள பக்தர்களுக்குத்தான் பராபக்தி சாத்தியம். உடல் மயமாகத் தங்களை எண்ணிக் கொண்டிருப்பவர்களுக்குப் பராபக்தி சாத்தியமில்லை. உங்களிடம் உடல் உணர்வு ஓங்கி இருந்ததால் நீங்கள் பெண்பாலர்கள் என்ற உணர்ச்சிபெற்றிருந்தீர்கள். ஆகையால் நீரைவிட்டு வெளியே வந்து ஆடையைப் பெற்றுக்கொள்ள மறுத்துவிட்டீர்கள். ஆகையால்தான் பராபக்தி பெறுவதற்குத் தகுதி இல்லையென்று நான் கூறுகின்றேன்." கோபிமார்கள் விருப்பத்தை நிறைவேற்றுவதற்கு ராசலீலை மூலமாக அனுக்கிரகம் செய்து அவர்களைப் பக்தியின் உயர்ந்த நிலைக்குக் கண்ணன் எடுத்துச் சென்றார்.

எட்டு வயது முடிந்தான பிறகு கண்ணன் கல்விகற்கக் குருகுல வாசம் செய்கின்றார். ஒரே ஆண்டில் அவர் கற்க வேண்டிய எல்லாவற்றையும் கற்றுவிடுகின்றார். அதன் பிறகு மதுராபுரிக்குச் செல்கின்றார். ஆங்குச் சத்துருக்கள் ஏராளமாக அவருக்கு வந்து வாய்க்கின்றார்கள். அவர்கள் எல்லாரையும் அவர் சமாளிக்கின்றார். ருக்மணி, சத்தியபாமா போன்றவர்களைக் கண்ணன் மணந்துகொள்கின்றார். யோகிகள் கண்ணனை நித்திய பிரம்மச்சாரி என்று கருதுகின்றார்கள். உலகத்தவர்கள் அவர் கணக்கற்றவர்களை மணந்து கொண்டாரென்று சொல்கின்றார்கள். சிவனார் தியாகராஜராகப் பிரபஞ்ச அதீத நிலையிலிருக்கின்றார். அதே சமயத்தில் அவர் திரிலோகக் குடும்பியாக இருக்கின்றார். அன்னை பராசக்தி அகிலாண்டத்தையும் ஈன்ற அன்னையாகவும், அதே சமயத்தில் அவள் கன்னியாகவும் இருக்கின்றாள். அங்ஙனம் கண்ணன் பல பெண்களை மணந்துகொண்டவராகவும், அதே சமயத்தில் நித்திய பிரம்மச்சாரியாகவும் இருக்கின்றார். கண்ணன் பெண்களை ஆதரிக்கின்ற முறையில் அவர்களை மணந்து கொண்டார். எனவே கண்ணனுக்கு அமைந்த மனைவிமார்களைச் சிஷ்யர்கள் என்றும் சொல்லலாம்; கண்ணனால் காப்பாற்றப்பட்டவர்கள் என்றும் சொல்லலாம்.

மதுராபுரி வாழ்க்கைக்குப் பிறகு மகாபாரத யுத்தம் வடிவெடுக்கின்றது. அந்த யுத்தத்தில் கண்ணன் நல்லார்க்குத் துணைபுரிந்தும், கெட்டவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதுமாகிய செயலில் ஈடுபடுகின்றார். கௌரவர்கள் கண்ணனுடைய அருளைப் பெறத்தகுதியற்றவர்களாக இருந்தார்கள். பாண்டவர்கள் கண்ணனுடைய அனுக்கிரகத்தை யாண்டும் சார்ந்திருந்தார்கள்.

பாரதயுத்தம் ஆரம்பிப்பதற்கு முன்பு கௌரவர்களின் சார்பாகத் துரியோதனனும், பாண்டவர்களின் சார்பாக அர்ஜுனனும் கண்ணனிடம் உதவி கேட்கச் சென்றார்கள். அவர்கள் துவாரகைக்கு வந்தபொழுது கண்ணன் கண்ணயர்ந்து கொண்டிருந்தார். அர்ஜுனன் அயர்ந்துகொண்டிருக்கின்ற கண்ணன் கால்பக்கமும், துரியோதனன் கண்ணன் தலைப்பக்கமும் நின்றுகொண்டிருந்தார்கள். கண்ணன் துயில் எழுந்தபொழுது கால்பக்கம் நின்றுகொண்டிருந்த அர்ஜுனனை முதலில் பார்த்தார். "அர்ஜுனா! எப்பொழுது வந்தாய்? என்ன காரியமாக வந்தாய்?" என்று அர்ஜுனனைக் கேட்டார். "நாங்கள் யுத்தம் செய்யத் தீர்மானம் செய்து விட்டோம். யுத்தத்தில் உங்களுடைய உதவி வேண்டுமென்று நான் வந்திருக்கிறேன்" என்றான் அர்ஜுனன். "உதவி தருகிறேன்" என்று கிருஷ்ணன் சொன்னார். அர்ஜுனன் கிருஷ்ணனிடம் அந்த வார்த்தையை வாங்கிக்கொண்டு, "அண்ணாவும் வந்து தலைப்

பக்கம் இருக்கிறார்" என்று சொன்னான். கண்ணன் தலைப்பக்கம் திரும்பியபொழுது துரியோதனன் நிற்பதைப் பார்த்தார். "நானும் உங்களுடைய உதவியை நாடி வந்திருக்கின்றேன். நான் அர்ஜுனனுக்கு முதலிலேயே வந்துவிட்டேன். ஆகையால் எனக்குத்தான் நீங்கள் உதவ வேண்டும்" என்றான் துரியோதனன். "நீ முதலில் வந்ததால் உனக்கும் உதவிதருகின்றேன்; அர்ஜுனனை முதலில் பார்த்ததால் அவனுக்கும் நான் உதவுகின்றேன்" என்று கண்ணன் பகர்ந்தார். இங்குக் கண்ணன் கெட்டவனாகிய துரியோதனனுக்கும் நல்லவனாகிய அர்ஜுனனுக்கும் உதவி புரிவதாகக் கூறுகின்றார். இது பொருந்துமா? என்னும் கேள்வி எழுகிறது. இயற்கையை ஆராய்ந்து பார்த்தால் அது நல்லவர்களுக்கும் உதவி புரிகிறது; கெட்டவர்களுக்கும் உதவிபுரிகிறது. இறைவன் பிரபஞ்ச மயமாக இருந்து நல்லவர்கள் கெட்டவர்களாகிய அனைவருக்கும் உதவி புரிந்து வருகின்றார். யுத்த தளவாடங்கள் நல்லவர்களுக்குப் பயன்படுபவன போன்று கெட்டவர்களுக்கும் பயன்படுகின்றன.

இனி, கண்ணன் நல்லவர்களுக்கும் கெட்டவர்களுக்கும் எப்படிப்பயன்படுகிறார் என்பதைப் பார்ப்போம். கண்ணன் தம்முடைய சேனைகளையும், யுத்த தளவாடங்களையும் ஒருபக்கமும், தாம் தனியாக மற்றொரு பக்கமும் பங்குபிரித்தார். "அர்ஜுனன் வயதில் இளையவனாக இருப்பதாலும் நான் அவனுக்கு முதலில் வாக்குக்கொடுத்ததனாலும் அவனுக்கு விருப்பமானதை முதலில் கேட்டுப் பெற்றுக் கொள்ளட்டும். அவன் எடுத்தது போக மீதி உள்ள பங்கைத் துரியோதனனாகியநீஎடுத்துக் கொள்ளலாம். இது நியாயம்தான் என்பதை நீ ஏற்றுக் கொள்கின்றாயா?" என்று துரியோதனனைக் கண்ணன் கேட்டார். துரியோதனன் சரியென்று அரைமனதோடு தலையை அசைத்தான். "அர்ஜுனா உனக்கு விருப்பமானதை நீ பெற்றுக்கொள்ளலாம்" என்று அர்ஜுனனிடம் பகர்ந்தார். "நீங்கள் தனியாக இருந்தாலும் சரி; நீங்கள் எங்கள் பக்கம் இருந்தால்போதும்" என்று அர்ஜுனன் கண்ணனை மட்டும் கேட்டுப்பெற்றுக்கொண்டான். துரியோதனன் அர்ஜுனன் சொன்னதைக் கேட்டுக் கவலை நீங்கினான். கண்ணனை மட்டும் வைத்துக்கொண்டு பாண்டவர்கள் என்ன செய்யப்போகிறார்கள் என்று மனதில் எண்ணிக்கொண்டு துரியோதனன் மற்றொரு நிபந்தனையும் போட்டான். "கண்ணா! போரில் நீங்கள் ஆயுதம் எடுத்துப்போர்புரியக் கூடாது" என்று கேட்டுக்கொண்டான். கண்ணன் அதற்கும் ஒத்துக்கொண்டார். துரியோதனன் தான் வந்த காரியம் நூற்றுக்கு நூறு வெற்றியடைந்தது என்று எண்ணிக்கொண்டு சென்றான். அர்ஜுனன் கண்ணனுடைய அருள் ஒன்று இருந்தால் போதுமென்று எண்ணிக் கொண்டுபோனான்.

உலகத்துக்கு வந்துள்ள மக்களுள் சொத்து, சுகம், சுகஜீவனம், உலகசம்பத்து ஆகியவைகளை நாடுகின்றவர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் யாவரும் துரியோதனன் கூட்டத்தைச் சார்ந்தவர்கள். இறைவனுடைய அருளை நாடுகின்ற மக்களும் இவ்வுலகில் இருக்கிறார்கள். அவர்கள் அர்ஜுனன் கூட்டத்தைச் சார்ந்தவர்கள். உலகசம்பத்து உலகத்தோடு அழிந்துபட்டுப் போகும். இறைவனருள் ஜன்ம சாபல்யத்தை நமக்குக் கொடுக்கும். கடவுள் அருள் நமக்கு எக்காலத்தும்பயன்படும். தர்மம் அதர்மத்துக் கிடையில் உள்ள போராட்டம் தான் மகாபாரதப் போராட்டமாகும். தர்மத்துக்குஎப்பொழுதும்பரமனுடைய உதவி இருக்கின்றது. இறைவன் அதர்மத்துக்குப் பராமுகமாக இருந்துவருகின்றார். இறுதியில் தர்மம் வெல்லுகின்றது. இந்த உண்மையை நாம் மகாபாரதத்திலிருந்து அறிந்துகொள்கின்றோம்.

கிருஷ்ணபரமாத்மாவினுடைய வடிவம் நமக்குத் தெரியாது. அவருடைய நாமம் நமக்குத் தெரியும். அவருடைய போதனை பகவத்கீதை வடிவத்தில் இருக்கிறது. கிருஷ்ணன் என்னும் நாமத்தை முறையாக உச்சரிக்கவும், அவர் போதித்திருக்கின்ற கீதையை முறையாக ஆராய்ச்சி பண்ணவும் செய்து வந்தால் நாம் கிருஷ்ணபரமாத்மாவை அறிந்தவர்களாகின்றோம். கிருஷ்ணபரமாத்மா பாண்டவருக்குச் சகாயமாக இருந்ததுபோன்று நம் அனைவருக்கும் அவருடைய நாமம் மூலமாகவும், பகவத் கீதை மூலமாகவும் சகாயமாக இருந்து வருகின்றார்.

ஸ்ரீமத் பகவத்கீதைக்குப் பலர் வியாக்கியானம் எழுதியிருக்கிறார்கள். அத்வைதக் கொள்கையுடையவர்கள் கீதை அத்வைதத்தைப் புகட்டுவதாக எழுதியிருக்கின்றார்கள். துவைதக் கொள்கையுடையவர்கள் கீதை துவைதத்தைப் புகட்டுவதாக எழுதியிருக்கின்றார்கள். விசிஷ்டாத்வைதக் கொள்கையுடையவர்கள் கீதை விசிஷ்டாத்வைதத்தைப் புகட்டுவதாக எழுதியிருக்கின்றார்கள். மதவாதிகள் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் மதக்கொள்கைகளையே கீதை புகட்டுவதாக எழுதியிருக்கிறார்கள்.

பகவத்கீதையினுடைய அடிப்படைக் கோட்பாட்டைக் கண்ணனுடைய வாக்கிலிருந்தே அறிந்துகொள்ளலாம். கண்ணன் பகர்ந்திருப்பதாவது :

कुतस्त्वा कश्मलमिदं विषमे समुपस्थितम् ।
अनार्यजुष्टमस्वर्ग्यमकीर्तिकरमर्जुन ॥
क्लैब्यं मा स्म गमः पार्थ नैतत्त्वय्युपपद्यते ।
क्षुद्रं हृदयदौर्बल्यं त्यक्त्वोत्तिष्ठ परन्तप ॥

குதஸ்த்வா கச்மலமிதம் விஷமே ஸமுபஸ்திதம்
அனார்யஜுஷ்டமஸ்வர்க்யமகீர்த்திகரமர்ஜுன
க்லைப்யம் மா ஸ்ம கம: பார்த்த நைதத்வய்யுப [பத்யதே
க்ஷுத்ரம் ஹ்ருதய தௌர்பல்யம் த்யக்த்வோத்திஷ்ட [பரந்தப

''அர்ஜுனா, ஆரியனுக்கு அடாததும், சுவர்க்கத்தைத் தடுப்பதும், புகழைப் போக்குவதுமான இவ்வுள்ளச்சோர்வு இந்நெருக்கடியில் எங்கிருந்து உன்னை வந்தடைந்தது?

"பார்த்தா, அலியின் இயல்பை அடையாதே. அது உனக்குப் பொருந்தாது. எதிரியை வாட்டுபவனே! இழிவான உள்ளத்தளர்வைத் துறந்துவிட்டு எழுந்திராய்.''

கோழைத்தனத்தை உதறித்தள்ளி விட்டுப் பராக்கிரமம் வாய்ந்தவனாக எழுந்திருப்பாயாக என்று கண்ணன் பகர்ந்துள்ளார். கண்ணன் கூறிய இவ்வலிவு சீலத்தில் இருந்தும், யோகத்திலிருந்தும், பக்தியிலிருந்தும், தர்மத்தைக் கடைப்பிடிப்பதிலிருந்தும் வருகின்றது. "பலமே வாழ்வு; பலமின்மையே மரணம்" என்று விவேகானந்தசுவாமிகள் பகர்ந்துள்ளார். இந்த ஆத்மா பலஹீனனால் அடையப்படுவதன்று என்று உபநிஷதமும் பேசுகிறது. இங்குப் பலம் என்று சொல்வது உடல் பலத்தோடு நின்றுவிடுவதன்று. நல்லொழுக்கத்திலிருந்தும் பலம் வருகிறது. அந்தப் பலத்தை இது குறிப்பிடுகின்றது. உடல் திட்பம் படைத்திருப்பதோடு மனத் திட்பமும் படைத்திருப்பது அவசியம். தர்மத்தைவிட்டுப் பிசகாதிருப்பது அவசியம். பலம் படைத்தவன் வாழ்க்கையில் எந்தப் பிரச்னையையும் தீர்த்துக்கொள்கின்றான். பலஹீனனுக்கு வாழ்க்கையில் பிரச்னைகள் அதிகம்.

கண்ணனுடைய வாழ்க்கையிலிருந்தும், கண்ணனுடைய போதனையிலிருந்தும், தீமை ஒரு நாளும் வெல்லாது என்பதையும், நாம் பலம் படைத்தவர்களாகவும், நலத்தில் உறுதி பெற்றவர்களாகவுமிருந்தால் பண்பாட்டில் மேலே வருகிறோம் என்பதையும் அறிந்து கொள்கிறோம். இங்ஙனம் நாம் உறுதி பெற்றவர்களாக இருந்து கடமைகளை யெல்லாம் பூர்த்தி செய்தவர்களாக யாவற்றையும் இறைவனிடம் ஒப்படைத்துவிட்டு இறைவனை அடைவதைக் குறிக்கோளாகக் கொள்ளவேண்டும்.

இங்ஙனம் முறையாக வாழ்வாங்கு வாழ்ந்து எல்லாக் கடமைகளையும் பூர்த்தி செய்து, பூர்த்தியான பிறகு அவையாவற்றையும் இறைவன்பால் ஒப்படைத்து விட்டு இறைவனை அடைவது குறிக்கோள். அதற்கு நம்மை ஆயத்தப்படுத்துவதற்காக மானுடப் பிறப்பு எடுத்து இருக்கின்றோம். கண்ணன் கீதையில் பகர்ந்திருப்பதாவது :

सर्वधर्मान्परित्यज्य मामेकं शरणं व्रज ।
अहं त्वा सर्वपापेभ्यो मोक्षयिष्यामि मा शुचः ॥

ஸர்வதர்மான் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ
அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி [மா சுச:

தர்மங்களை யெல்லாம் அறவே துறந்துவிட்டு என்னையே சரணடைக. பாபங்களனைத்தினின்றும் உன்னை நான் விடுவிப்பேன். வருந்தாதே.

இதை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொண்டு இதன்படி நாம் வாழ்ந்து வருவோமானால் கண்ணனைச் சரியாக அறிந்துகொண்டு அவரைப் பின்பற்றியவர்களாகிறோம். அவர் அருளால் அவரை முறையாகப் பின்பற்றிப் பெருவாழ்வு வாழ்வோமாக.

அனுமன் கண்ட சீதை

(திரு. K. ராமமூர்த்தி M. Com.)

8. மாருதியின் பேருருவம்

ஆழி காட்டித் தன் ஆருயிர் மீட்ட வள்ளலை வாழ்த்திவிட்டுச் சீதை அனுமனிடம் ராமனைப் பற்றி மூன்று கேள்விகள் கேட்கின்ருள்:

1. ராமன், இளையவனுன இலக்குவனுடன் எங்கு இருக்கின்ருர்?
2. அவர் உன்னைச் சந்தித்தது எங்கு?
3. எனக்கு நேர்ந்ததைப்பற்றி ராமன் எவ்வாறு அறிந்துகொண்டார்?

இக்கேள்விகளுக்குப் பதிலாக, சீதையை விட்டு இலக்குவன் பிரிந்ததிலிருந்து அனுமன் இலங்கைக்கு வந்ததுவரை நிகழ்ந்த வரலாற்றை இருபத்தொரு இன்சொற் கவிகளால் இயம்புகின்ருன்—விழுமிய குணத்து வீரனுன அனுமன். இந்தப் பாடல்களில் கூறப்பட்டுள்ள கதை நமக்குத் தெரிந்த ஒன்ருதலால் கதையை மீண்டும் இங்கே பார்ப்பதைத் தவிர்த்து ஒரே ஒரு செய்தியைமட்டும் எடுத்துக்கொள்வோம்.

மாய மானுக வந்த மாரீசன் ராமன் அம்பால் அடிபட்டு வீழ்ந்தபோது, ராமன் குரல்போன்று "ஆ! சீதா! லட்சுமணு!" என்று கத்தினனல்லவா? ராமனுக்கு இது பெரிய அதிர்ச்சியாக இருந்திருக்கவேண்டும். இதனுல் ஏற்படும் விளைவும் அவனுக்குப் புரிந்துவிட்டது. உடனே அந்தச் சத்தத்தை அடக்கும் வண்ணம் தன் வில்லின் நாணைத் தட்டிப் பெரிய ஒலியை எழுப்பினனும். அப்படி நாணெலி எழுப்பியும் கூட அதனையும் மீறி மாரீசனின் மாயக்குரல் சீதைக்குக் கேட்டுவிட்டது. மாரீசனின் பொய்க் குரலை அடக்குவதற்காக ராமன் இவ்வாறு நாணெலி செய்ததுபற்றிக் கம்பராமாயணத்தில் ஆரண்யகாண்டத்தில் மாரீசன் வதை நடக்கும் சந்தர்ப்பத்தில் சொல்லப்படவில்லை. வான்மீகியில் இதுபற்றி எங்கும் குறிக்கப்படவில்லை. நிகழ்ச்சி நடந்தபோது சொல்லாமல் பின்னர் பாத்திரங்களின் வாயிலாக அந்நிகழ்ச்சி பற்றி விவரிப்பது கம்பனின் வழக்கம் என்பதை முன்னரே நாம் பார்த்திருக்கின்ரேம். ராமன் நாண் ஒலி செய்ததாக அனுமன் சீதையிடம் சொல்வதிலிருந்து ராமன் தான் செய்ததுபற்றி அனுமனிடம் கிட்கிந்தையில் தெரிவித்திருக்க வேண்டும் என்று தெரிகின்றது. இச்செய்தியைச் சொன்ன பின்னர் அனுமன் சீதையிடம் மற்ற விவரங்களையும் தனக்கே உரிய பாணியில் விவரிக்கின்ருன்.

ராம-இலக்குவரின் கதை கேட்ட சீதை துன்பமும் உவகையும் சுமந்த உள்ளத்துடனும் ஓடி வழிகின்ற கண்ணீருடனும் அனுமனைப்பற்றி விசாரிக்க முற்படுகின்ருள்.

"ஐயனே! எல்லையில்லாத இப்பெருங்கடலை நீ எவ்வாறு கடந்து வந்தாய்?"

சீதையின் இந்தக் கேள்விக்கு அனுமன் அளிக்கும் விடை அவனுடைய ராம பக்திக்கும், தன்னம்பிக்கைக்கும், அந்தச் சமயத்தில் சீதைக்குத் தேவையான மன ஆறுதலை அளிக்கும் தன்மைக்கும் சிறந்த எடுத்துக்காட்டாக அமைகின்றது. சாதாரணக் கேள்விக்குத் தத்துவ விளக்கத்துடன் கூடிய பதிலைக் கொடுக்கின்ருன் காலம் ஒரு மூன்றும் வல்லவனுகிய காற்றின் மைந்தன்.

> "சுருங்கு இடை! உன் ஒரு துணைவன் தூய தாள்
> ஒருங்குடை உணர்வினேர் ஒப்பு இல் மாயையின்
> பெருங்கடல் கடந்தனர் பெயரும் பெற்றி போல்
> கருங்கடல் கடந்தனன் காலினல்" என்ருன்.
>
> — உருக்காட்டுப் படலம்-97

[சுருங்கு இடை - சீதை; துணைவன் - ராமன்; ஒருங்கு உடை உணர்வினேர் - ஒருமுகப்படுத்தப்பட்ட மன உணர்வு உடையவர்; பெருங்கடல்-பிறவிப் பெருங்கடல்.]

"தாயே! உன்னுடைய ஒப்பற்ற துணைவனுகிய ராமபிரானது தூய்மையான திருவடிகளிடத்தில் மனம் ஒன்றி ஒடுங்கும் அறிவையுடைய உத்தமஞானிகள், ஒழிதலில்லாத மாயையாகிய (பிறவிப்) பெருங்கடலை, அதில் பந்தப்படாமலே தாண்டிச் செல்லும் தன்மை போன்று, நானும் (அப்பெருமானின் திருவடிகளில் என் மனத்தை நிறுத்தி) காற்றின்மூலம் வான் வழியாகக் கரிய இப்பெருங்கடலைத் தாவி வந்தேன்!"

இப்பாடலில் அனுமன் தன் செயலுக்கு உவமையாகக் கூறிய கருத்து சிறப்பான ஒன்

ருகும். ராமனின் பாததூளியினல் கல்லும் மடமங்கையானதும், விராதன், சரபங்கர், கபந்தன், சபரி இவர்களின் கதையும், வாலி யின் மரண வாக்குமூலமும், ராமநாமத்தால் சம்பாதியின் சிறகுகள் முளைத்ததும், அந்த நாமத்தைச் சொல்லிக்கொண்டே தான் கடல் கடந்து வந்ததும், ராமனைப் பாற்கடற்பள்ளியி னின்றும் நீங்கிய பரமனே என்று அனுமன் நினைக்க ஏதுவாயின. ராமனை அவதாரமாகக் கருதினலொழிய இப்பாடலை ரசிக்கமுடியாது.

மாயை எத்தகையது? அது 'ஒப்வில் மாயை'- ஒழிதலில்லாத, மாயை எனப்பட்டது. அது பெரிய கடல் போன்றது-அளவிலும் சக்தியி லும் கடலுக்கு நிகரானது. அம் மாயையின் விளைவாக வந்ததே பிறப்பு இறப்பு என்னும் சுழற்சி. எனவேதான் 'பிறவிப் பெருங்கடல்' என அதனைப் பேசுவர் பெரியோர். கீதையில் இம்மாயை "தெய்வ மாயை" என்றே [கீதை 7: 14] குறிப்பிடப்பட்டுள்ளது காணலாம். இம் மாயையைக் கடப்பதற்குச் சான்ரோர் பின்பற்றிய வழி என்ன? ஒருங்குடை உணர் வோடு தனக்குவமையில்லாதான் தாள் சேர் தல் ஒன்றே அதற்கு வழி. ஞானிகள் தம் உள் ளத்தில் ராமபிரான் திருவடிகளையே நினைத்துக் கொண்டிருந்து ஒய்வில்லாத மாயையை— கடக்க முடியாத பிறவிப் பெருங்கடலைக்—கடந் ததுபோன்று அனுமனும் ராமபிரானின் திரு வடிகளை நினைத்துக்கொண்டே கடலைக் கடந்து வந்தானும். ராமனுடைய திருவடித் தியானம் கடக்க முடியாத பிறவிப் பெருங்கடலையே கடக்கத் துணைசெய்யும்போது அந்த நாமத்தி னல் கேவலம் இந்த உப்புநீர்க் கடலைக் கடப் பதா கடினம் என்று அனுமன் சீதையிடம் தெரிவிக்கின்ருன். இச்சொற்கள் நலிந்து கொண்டிருக்கும் சீதையின் தன்னம்பிக்கைக்கு உயிரூட்டும் அமிர்தமாக இருந்திருக்கும் என் பதை விவரிக்க வேண்டியதில்லை. சீதையின் மனம் அனுமனின் பதிலினல் எவ்வளவு மகிழ்ச்சி கொண்டது என்பதை அடுத்த பாட லில் உள்ள ஒரு வரி நமக்குத் தெரிவிக்கின்றது.

"முத்தினும் நிலவினும் முறுவல் முற்றினுள்"

— உருக்காட்டுப் படலம் 98.

கடலில் பிறந்த வெண்முத்தைக் காட்டிலும், வானத்து உலாவும் வெண்ணிலாவைக் காட்டி லும் ஒளி மிகுந்த புன்முறுவலுடன் பிராட்டி அனுமனிடம் பேசினுளாம். அனுமனின் பதி லைக் கேட்டுச் சீதை புன்னகை புரிந்தது, அவ னுடைய சொல் திறமையையும் கருத்துச் செறி வையும் ரசித்து மகிழ்ந்த மகிழ்ச்சியையே குறிக்கின்றது. சீதை மேலும் அனுமனிடம் வினவுகின்ருள்.

"இவ்வளவு சிறிய உருவமாக இருக்கின் றதே!" என்று யாவரும் வியக்கும் வண்ணம் உருவம் கொண்டுள்ள உத்தமனே! இந்தச் சிறிய உருவத்துடனேயா அப்பெருங்கடலைத் தாண்டி வந்தாய்? உன்னுடைய தவ வலிமை யினலா அல்லது நீ பெற்றுள்ள சித்தியினலா இக்கருங்கடல் கடந்து வந்தாய்? எவ்வாறு இவ் அருஞ்செயலை நீ செய்தாய்? என்றஉண் மையை, வீரனே! எனக்குச் சொல்வாயாக."

சீதையின் இக்கேள்விக்குப் பதில் அனு மன் வார்த்தைகளால் சொல்லவில்லை. மகேந் திரமலையில் தான் எடுத்த பேருருவைச் சீதைக் குக் காட்ட முடிவுசெய்து தொழுத கைகளுடன் வளர ஆரம்பித்தான். வளர்ந்து கொண்டே சென்றவன் இன்னும் மேலே போனல் விண் ணுலகம் முட்டுமே என்று வளைந்து நின்ருனும். பிராட்டியின் முன்னர் அனுமன் வணங்கி நின்ற தைக் கூற வந்த கம்பன், விண்முகடு முட்டும் என்றே அனுமன் வளைந்து நின்றதாகச் சாமர்த்தியமாகக் கூறிப் பேருருவின் பேரள வையும் நமக்கு உணர்த்தி விடுகின்ருன்.

மாருதியின் பேருருவத்தைத் தாங்க முடியா மல் இலங்கை கடலினுள் ஆழ்ந்துபோக ஆரம் பித்துக் கடல் இலங்கையினுள் புக ஆரம்பித் தது. மேருமலையின் மீதுள்ள மரங்களில் மின் மினிப் பூச்சிகள் தொங்குவது போன்று நெடி துயர்ந்த அனுமனின் மேனியிலுள்ள மயிர் களில் விண்மீன்கள் தொங்குவது போன்று தோன்றியது. அவன் காதுகளில் விளங்கிய இரு குண்டலங்களும் சூரிய, சந்திர மண்ட லங்களாகக் காட்சியளித்தன. புவனத்திலுள் ளோர் யாவரும் தன்னைப் பார்க்கும் வண்ணம் வளர்ந்து வானுலகத்துறையும் தேவர்களை அவன் பார்த்துக்கொண்டிருந்தான்.

மோதிரம் கண்ட சீதையின் நிலைமைக்கு ஸ்தூலமான உவமைகளையும் சூட்சுமமான உவமைகளையும் கம்பன் எடுத்துக் காட்டியதை

முன்னர் கண்டோம். அதேபோன்று அனுமனின் பேருருவத்தை வர்ணிக்கவும் முன் பாராவில் பார்த்தது போன்று ஸ்தூலமான விளக்கங்களோடு சூட்சுமமான இரண்டு விளக்கங்களையும் கம்பன் தருகின்றான். இந்தச் சூட்சுமமான விளக்கங்களைச் சுருக்கமாக இப்போது பார்ப்போம்.

1. மூவுலகும் ஈரடியால் முறை நிரம்பாவகை தெரியத் தாவிய வாமன அவதாரச் சிறப்பைக் கம்பன் இங்குக் காட்டுகின்றான். உலகங்களை யெல்லாம் அளந்த நாயகனை திரிவிக்ரமன் அனுமனின் இப்பேருருவத்தைப் பார்க்க நேர்ந்தால் என்ன நினைப்பான்?

"வலிமையில்லாத குரங்கு என்று இவ் அனுமனை எண்ண முடியுமோ? மாறாக, பெரும் பாரத்தைச் சுமந்து வரும் வண்டிச் சக்கரத்தைக் காக்கும் ஆணி போன்றல்லவா அனுமன் விளங்குகின்றான்! உலகளந்த பெருமை என்பது என்னிடத்தில் மட்டும்தான் என்று கொள்ள முடியாதுபோல் செய்துவிட்டானே இந்த அனுமன்!"

-இவ்வாறு எண்ணி உலகெலாம் அளந்த நாயகன் வெட்கமடைவானும் அனுமனின்பேருருவத்தைக் கண்டு! மாபலிச் சக்ரவர்த்தியின் அகங்காரத்தை அடக்கப் பேருருவம் எடுத்த திருமால் போன்று ராவணனின் கொடுமையை ஒழிக்கக் காற்றின் மைந்தன் பேருருவம் எடுத்ததாகக் கற்பனை செய்து பார்க்கின்றான் கம்பன்.

இவ்வாறு திருமாலின் பேருருவத்தையும் அனுமனின் பேருருவத்தையும் ஒப்பிட்டு அனுமனைக் கண்டு உலகளந்த நாயகன் நாணினான் என்று கம்பன் கூறுவதில் இன்னொரு கருத்தும் உண்டு. இறைவன் அவதாரமாக வந்து செய்த ஒரு செயற்கரிய செயலை மனித இனத்திற்கு அடுத்தபடியாகக் கருதப்படும் வானரம் ஒன்று தன் தவத்தினாலும், சீலத்தினாலும், தியாகத்தினாலும் செய்ய முடியும் என்று நமக்கு அறிவுறுத்துவதே கம்பன் கருத்தாகலாம். ஊழின் வலிமைபற்றிப் பேசும் கம்பன் மனிதனின் முயற்சியால் கிடைக்கும் மாண்பு பற்றி அறுதியிட்டு உறுதி கூறுவது நம் வாழ்க்கைக்குச் சிறந்த பாடமாகிறது. இனி, அடுத்த சூட்சுமமான விளக்கத்தைக் காணலாம்.

2. 'நிலம், தீ, நீர், வளி, விசும்போடு ஐந்தும் கலந்த மயக்கம் உலகம்' என்பர் ஆசிரியர் தொல்காப்பியர். [தொல்காப்பியம், பொருள் அதிகாரம், மரபியல்-90]. 'அணுச்செறிந்த நிலனும், நிலத்தினின்றும் ஓங்கிய ஆகாயமும், ஆகாயத்தைத் தழுவி வரும் காற்றும், காற்றின் தலைப்பட்ட தீயும், தீயுடன் மாறுபட்ட நீரும் என்று ஐம்பெரும் பூதங்களால் ஆக்கப்பட்டது இவ் உலகம்' என்று பேசுவான் புறநானூற்றுப் புலவன் [புறம்-2]. இறைவன் படைப்பில் இவ் ஐந்து பூதங்களுக்கு வேறானதாக எதுவும் இல்லை. இவற்றுள் குறையையும் காணமுடியாது. பூரணமான இறைவனின் படைப்பில் பூரணத்தைத்தானே காண முடியும்! ஆனால் மனித இனத்திற்கும், ஏனையவற்றிற்கும் ஒரு வேறுபாடு உண்டு. ஏனைய உயிரினங்கள், தங்களுக்கு இயல்பாக அமைந்துள்ள impulse, instinct ஆகியவற்றிற்கேற்பச் செயல்படுகின்றன. இவற்றுள் தவறு நேர வழியில்லை. மனிதனுக்கு மட்டும் intellect என்னும் ஆறாவது அறிவு இருப்பதால் தன்னைத்தானே உயர்த்திக்கொள்வதும் தாழ்த்திக் கொள்வதும் அவனால் இயலும். எனவே ஏனைய உயிரினங்கள் அவற்றிற்கேற்ற நியதிகளுக்கு உட்பட்டு ஒழுகுவதால் அதனதன் நிலையில் நிறைவு பெற்றவையாக விளங்க, மனிதன் மட்டும் நிறைநிலை அடைவதும், குறை நிலையிலேயே இருப்பதும் தன் முயற்சியினால் பெறக்கூடிய வகையில் படைக்கப்பட்டுள்ளான். எனவே இயற்கையின் பூரணத்துவத்தை மனிதன் தன் முயற்சியினால் பெறுவானாயின் அவனுடைய சாதனையை எவ்வளவு பாராட்டினாலும் தகும். பஞ்ச பூதங்கள் அமைப்பிலும் இயல்பிலும் பூரணத்வம் வாய்க்கப்பெற்றவை. இப்பூரணத்வத்தை ஒருவன் தன் உள்ளப் பண்பினாலும் உருவப் பெருக்கினாலும் அடையப் பெற்றானால் அவனை அப்பஞ்சபூதங்களைவிட உயர்ந்தவன் என்றுதானே சொல்லவேண்டும். ஐம் பூதங்களின் இத்தன்மையையும், அனுமனின் பேருருவத்தையும் ஒப்பிட்டுக் காண்பிக்கின்றான் கம்பன். இறைவன் படைப்பில் அமைந்தது இயற்கையின் பஞ்சபூதங்களின் பூரணத்வம். அனுமன் தன் ஒழுக்கத்தாலும் தவத்தாலும் பெற்றது பேருருவம் இதில்

LIBRARY ... UHEFT No. 6780

எது மிகச் சிறந்தது என்ற கேள்வியை எழுப்பி அனுமனுடைய பூரணத்வம் பஞ்ச பூதங்களின் பூரணத்வத்திற்குச் சவால் விடுவது போன்றிருந்தது என்று பதில் சொல்கின்றான். 'நிறை நிலை அல்லது பூரணத்வம் என்பது ஐம்பெரும் பூதங்களிடத்தில் உள்ளதோ, அவ்வாறின்றி அனுமனிடம் உள்ளதோ? இவர்களில் யாரிடத்தில் உள்ள நிறை நிலை சிறப்பானது என்று வியக்கும் அளவு அனுமனுடைய பேருருவம் அமைந்திருந்தது' என்கின்றான் கம்பன்.

"நன்னெறி வாயிலாக எய்தும் பெருமை என்று சொல்லப்படுகின்ற சீரியத்தன்மை இறைவனுடைய விருப்பத்தின்படி காரியப்படுகின்ற ஐந்து பூதங்களின்பாலதோ? அந்தப் பூதங்களிடத்திலுள்ளது அன்று என்றால் அனுமனிடத்திலேதான் உள்ளதோ? இவற்றுள் எதனிடத்திலுள்ளதாம் என்று நினைக்கும்படியான பெருமையை உடையது அனுமனின் பேருருவம். அனுமன் தன் இச்சையாற்கொண்ட வளர்ச்சியின் பெருமை,இறைவன் இச்சையாற் காரியப்படுகின்ற பஞ்சபூதங்களுக்கு இல்லை யென்று சொல்லும்படியாயிருந்தது."

— உருக்காட்டுபடலம் 100. அண்ணாமலைப் பல்கலைக் கழகப்பதிப்பு உரை.

இதனையே வள்ளுவர் பெருமானும்,

"நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது"

— குறள் 124.

என்று விளக்குகின்றார். இந்தக் குறள் அனுமனுடைய பண்பு நலன்களுக்கு நல்ல இலக்கணமாக விளங்குவது தெளிவு.

இனி, மாருதியின் இப்பேருருவத்தைக் கண்ட சீதையின் நிலை என்ன என்பதைப் பார்ப்போம். இந்தப் பேருருவத்தின் பாதங்களைக்கூட முழுவதும் காண இயலாதவாறு நின்று வியந்து, அதனை நீண்ட நேரம் காணப் பயந்தவளாக,

"அஞ்சினர்! இவ் உரு அடங்குவாய்"

என்று அனுமனை வேண்டுகின்றாள். தான் பயந்ததால் மட்டும் அனுமன் உருவை அடங்க வேண்டுமென்று வேண்டவில்லையாம் சீதை; இந்நிலவுலக மாந்தர் அனைவரும் இவ்வுருக் கண்டு அஞ்சுவர் ஆதலால் அனுமன் தன் பேருருவத்தைச் சுருக்கிக்கொள்ளவேண்டும் என்றும் பிராட்டி தெரிவிக்கின்றாள். அதுமட்டுமன்று; இவ் உருவத்தைக் கண்ட சீதையின் சிந்தையில் இரண்டு எண்ணங்கள் மலர்ந்தன:

1. 'துஞ்சினர் அரக்கர் என்று உவக்கும் சூழ்ச்சியால்' என்பான் கம்பன். ராமனுக்கு இப்பேர்ப்பட்ட துணைவன் வாய்த்துவிட்டபின்னர் அரக்கரின் அழிவில் சீதைக்கு எவ்வித ஐயமும் இருக்கவில்லையாம். எனவே அப்பொழுதே அரக்கர்களை அழிந்துவிட்டவர்களாகவே கருதி மனம் மகிழ்ச்சியடைந்தாள்.

2. அரக்கர் அழிவு உறுதியான பின்னர் இன்னொரு நினைவும் சீதையின் உள்ளத்தில் தொடர்கின்றது. அரக்கர் அழிவிற்குப்பின் நிகழவிருக்கும் காட்சியை மனக்கண்முன் நிறுத்திப்பார்க்கின்றாள். அல்லையாண்டு அமைந்த மேனி அழகனை ராமபிரானின் அருகிலிருந்து பணிபுரியும் பேறு தனக்கு விரைவில் கிடைக்கப் போகின்றது என்ற மகிழ்ச்சியும் சீதைக்கு ஏற்பட்டதாகக் கம்பன் கூறுகின்றான்.

சீதையின் எண்ண அலைகள் இத்துடன் நின்றுவிடாமல் அனுமனைப்பற்றி மீண்டும் தொடர்கின்றன.

"இந்த அனுமன்தான் எத்துணைச் சிறப்புடையவனாக இருக்கின்றான்! அவனால் முடியாத காரியமே இல்லையென்று சொல்லி விடலாம் போலிருக்கின்றதே! கடலைக் கடந்தான்; கடிய அரக்கனின் கடும் காவலைக்கடந்தான்! செவிக்கினிய சொற்கள் பேசி சிந்தை குளிரச் செய்தான்! இப்போது கண்களாலும் அறிவாலும் அளக்கமுடியாத பேருருவம் கொள்ள வல்லவன் என்றும் காட்டிவிட்டான்! இவனிடம் இல்லாத கலையோ, திறமையோ ஏதாவது உலகில் உண்டோ? இவனை எப்படிப் பாராட்டினாலும் அது குறைவுடையதாகத்தானே அமையும்!"

இப்படியெல்லாம் சிந்தனை படர்கின்றது மிதிலைச் செல்வியின் மனத்தில். நன்றி பொங்கும் உள்ளத்துடனும் நன்னீர் சிந்தும் கண்களுடனும் நல் நெடும் காலின் மைந்தனை மனமார, வாயார மீண்டும் பாராட்டுகின்றாள். இப்பாராட்டு ஐந்து பாடல்களில் காணப்படுகின்றது. அனுமனின் பேருருவத்தையும்

வீரத்தையும் பாராட்டுவதுடன் அவனல் ராம பிரானுக்கும் தனக்கும் வரப்போகும் நன்மைகளையும் விவரிக்கின்றாள் சீதை. கருத்துச் செறிவுள்ள இப்பாடல்களில் ஒன்றின் கருத்தை மட்டும் இங்கே காண்போம் :–

"உன் பெருமைக்குத் தக்கபடி இலங்கை ஏழு கடல்களுக்கும் அப்பாலிருந்தால், அத்தனைக் கடல்களையும்தாண்டி இந்த இலங்கையை அடைந்திருப்பாய். அப்போது உலகத்தோர், உன்னை ஏழுகடல் தாண்டுவோன் என மதித்திருப்பர். அதற்கு இடமில்லாமல் நீ ஒரு கடலே தாண்டுவோன் என மதிக்கும்படி இந்த இலங்கை ஒரு கடலுக்கே அப்பாலுள்ளதாய், ஏழு கடலுக்கும் அப்பாற்பட்டதாய் இல்லாமல் போனது இரங்குதற்கு உரியதாய், உன் பெருமையைக் குறைப்பதாய் உள்ளது' என்று சீதை அனுமனை வியந்து புகழ்ந்தாள். இதன் முன் அனுமன் பெருமைக்கு அவன் கடலைக் கடந்தான் என்பது இழிவென்று கூறிப் புகழ்ந்தவள், இப்போது அவன் தாண்டிய கடல் ஏழாய்இல்லாமல் ஒன்ருயிருந்தது அவன் பெருமைக்கு இழிவு என்று புகழ்ந்தாள்."

— கம்பராமாயண சாரம் - வெ. ப. சு. - சுந்தர [காண்டம் பக்கம் 136.

சீதையின் புகழ்ச்சியைக் கேட்டு நாணமுறுகின்ருன் அனுமன். அந்தப் புகழ்ச்சியை உடனே சீதைக்கு உற்சாகமூட்டுவதற்குச் சாதகமாக்கிக் கொள்கிருன். தன்னுடைய பேருருவத்தையும் பெரு அளவையும் கண்டு சீதை மிகவும் தன்னம்பிக்கை கொண்டவளாக ஆகிவிட்டதை அனுமன் கண்டுகொண்டான். அந்த நம்பிக்கையை உறுதிப்படுத்தி நிரந்தரமாக்குவதற்காகவும், தன்னைப் புகழ்ந்த சீதையிடம் அந்த அளவு புகழ்ச்சிக்குத்தான் அருகதையற்றவன் என்று அடக்கமாகக் கூறவும் இச்சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்திக் கொள்கின்ருன். தன்னுடைய வலிமையை உணர்ந்த சீதையிடம் தன்னைவிட வலிமை வாய்ந்தவர்களே ராமனுக்குத் துணையாக இருக்கின்றனர் என்றும், அவ்வானர சேனையில் தானே கடைப்பட்டவனென்றும் அனுமன் தெரிவிக்கின்ருன். அப்படையினரின் எண்ணிக்கையைச் சொல்ல வேண்டுமானல், இந்தப் பெருங்கடல்நீரை வானரன் ஒவ்வொருவனும் ஒரு கை அள்ளிக் குடித்தால் கடல் இருந்த இடமே தெரியாமல் போய்விடுமாம். இலங்கை அரக்கரின் எண்ணிக்கை வானரப் படையை எண்ண உறையிடவும் போதாதாம். இப்பெரும் படையின் வலிமை எப்படிப் பட்டது? அவர்கள் இந்நிலவுலகத்தை மட்டுமன்றி வேறு வேறு உலகங்களையும் எடுத்து அழிக்கக்கூடிய வல்லமை படைத்தவர்கள். வானரர் வலிமை ராமனின் அம்புகள் போன்று நினைத்த காரியத்தை முடிக்கும் திறனுடையது. வானரரின் வலிமையை விவரிக்கத் தன்னையே அளவுகோலாக்கி விடுகின்ருன் அனுமன். வானரப்படையாகிய பண்ணையில் எடுபிடி வேலை செய்பவன்தானும் அனுமன்! அப்படையினர் ஏவிய பணிகளைச் செய்யும் பணியாள்தானும் அஞ்சனைச் செல்வன்! இதோ சொல்லின் செல்வனின் சொல்லமுதத்தைப் பாருங்கள் .

"அண்ணல் பெரியோன், அடிவணங்கி,
அரிய உரைப்பான்: 'அருந்ததியே!
வண்ணக் கடலின் இடைக்கிடந்த
மணலின் பலரால், வானரத்தின்
எண்ணற்கு அரிய படைத்தலைவர்
ராமற்கு அடியார்; யான் அவர்தம்
பண்ணைக்கு ஒருவன் எனப் போந்தேன்
ஏவல் கூவல் பணிசெய்வேன்."

— உருக்காட்டுப் படலம் 114.

[அண்ணல் பெரியோன் — அனுமன்; அடிவணங்கி—சீதையின் பாதங்களில் வணங்கி]

இதைக் கேட்ட சீதை எண்ணிப் பார்க்கின்ருள். 'எடுபிடி வேலை செய்யும் அனுமனுடைய வலிமையே இத்தகையதாக இருந்தால் இவனை வேலைக்கு ஏவும் வானரப்படையின் வலிமையை நம்மால் கற்பனை செய்து பார்க்க முடியுமோ? அந்தப் படையின் எண்ணிக்கையும் வண்ணக் கடலின் மணலினும் அதிகம் என்கிருன் அனுமன். அப்படியானல் இந்த இலங்கையும் அதன் அரக்கரும் அழிவது நிச்சயம்தான்! இப்படிப்பட்ட எண்ணங்களைச் சீதையின் மனத்தில் ஏற்படுத்தி அவளை உற்சாகப்படுத்த வேண்டுமென்பதுதானே அனுமனின் திட்டம். அனுமனின் சொல்வன்மை சீதைக்குச் சஞ்சீவியாக அமைந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

ஸத் ஸம்பாஷணை

கேள்வி : (299) விஞ்ஞானத்தின் முன்னேற்றம் காரணமாகத் தற்போது விரைந்து அறிவு வளர்ந்து வருகிறது. இத்தருணத்தில் சமயம் அவசியம் தானா?

விஞ்ஞானம் என்பது இயற்கையிலுள்ள வெவ்வேறு பகுதிகளின் விரிவான விபரங்கள் ஆகும். என்னென்ன பொருட்களை என்னென்ன காரியங்களுக்கு எப்படியெப்படிப் பயன்படுத்தலாம் என்பதைப் பற்றிய விரிவான விளக்கமே விஞ்ஞானம் எனப்படுகிறது. விஞ்ஞான ஆராய்ச்சிகளின் விளைவாக நுட்பமான கருவிகளும், அவைகளைப் பயன்படுத்தி வருகிற தொழிற்சாலைகளும் அதிகரித்துக் கொண்டே போகின்றன. நிலத்தை உழுவது, விதை விதைப்பது, அறுவடை செய்வது ஆகிய கிருஷித் தொழில்கள் பெரும்பாலும் இன்றைக்கு அமெரிக்காவில் எந்திரங்களின் வாயிலாகவே நிகழ்ந்து வருகின்றன. அதே போன்று நம்நாட்டில் பயிர்த்தொழில் பண்ண ஆரம்பித்தால் பலபேர்க்குப்பிழைப்புக்கு வகையில்லாது கேடே நிகழும். அந்தப் போக்கில் நம் நாட்டில் விஞ்ஞான வளர்ச்சி வரலாகாது. நூல் நூற்றலும், நெசவுத் தொழிலும் பெரும்பாலும் இன்றைக்கு எந்திரங்கள் வாயிலாகவே நிகழ்ந்து வருகின்றன. தொழிலாளிகளின் எண்ணிக்கையைக் குறைப்பதற்காகவும், உற்பத்திப் பொருள்கள் அனைத்தையும் பெரிதும் எந்திரங்களைக் கொண்டே நிறைவேற்றி வருகின்றனர். அதன் வாயிலாகவும் தொழிலாளிகள் பலருக்கு வேலையில்லாத் திண்டாட்டம் வருகிறது. விஞ்ஞான வளர்ச்சியின் விளைவாக அமைகின்ற இந்தச் சூழ்நிலை ஆமோதிப்பதற்குரியதன்று. எனவே வரம்பு கடந்த விஞ்ஞான வளர்ச்சி மனிதனுக்குக் கேடாய் முடியும் என்பது வெளிப்படை.

என்னென்ன பொருட்களை என்னென்ன காரியங்களுக்கு எப்படி எப்படியெல்லாம் பயன்படுத்தலாம் என்னும் அறிவு வளர்ச்சியின் வாயிலாகச் சுயநலக்காரனுக்குச் சுயநல நோக்கமே முன்னணியில் வந்து நிற்கும். நாள் ஏற ஏற மக்களுக்கிடையில் சுயநல நோக்கமும் அதிகரித்துக்கொண்டே வருகிறது. சமுதாயத்தில் தென்படுகிற கேடுகள் பலவற்றுக்குக் காரணம் சுயநலமே என்பது வெளிப்படை. எனவே மிகைப்பட்ட விஞ்ஞான வளர்ச்சியின் விளைவாகச் சமூகத்தில் கேடுகளும் அதிகரித்து வருகின்றன என்பதில் ஐயமில்லை.

மனிதன் சமயானுஷ்டானத்தில் ஈடுபடுவதற்கேற்ப நல்லொழுக்கம் ஓங்குகிறது. சுயநலப்பற்றும் சமய அனுஷ்டானமும் ஒன்றுபட மாட்டா. சுயநலத் தியாகமே சமய அனுஷ்டானத்துக்கு அஸ்திவாரமாகிறது. சமய அனுஷ்டானம் பின்னணிக்குப் போவதற்கேற்பச் சுயநலமும் இந்திரிய சுகபோகமும் முன்னணிக்கு வரும். அதன் விளைவாகச் சமுதாயம் அதிவிரைவில் பாழ்பட்டுப்போகும். ஆதலால் சமய அனுஷ்டானமே மனிதனுடைய முன்னேற்றத்திற்கு முற்றிலும் முகாமையாகிறது. சமய அனுஷ்டானத்தில் பலபேர் விரைந்து முன்னேற்றம் அடைந்து வந்தால் உலகெங்கும் நலனே அதிகரிக்கும். ஆதலால் நலனை வளர்க்கவும், கேட்டைத் தவிர்க்கவும் வல்லசமய அனுஷ்டானத்தில் மட்டும் மனிதன் தீவிரமாக ஈடுபடக்கடமைப்பட்டிருக்கிறான்.

கேள்வி : (300) இக்காலத்தில் ஒரு காரியம் நிறைவேற வேண்டுமெனில் கைக்கூலி கொடுக்கின்றோம். அதற்கு நிகராகக் கடவுளிடத்தில், காணிக்கை செலுத்துவதாகப் பிரார்த்தனை பண்ணுகிறோம். இது பொருத்தமானதா?

மனிதனுக்குக் கைக்கூலி கொடுப்பதும் கடவுளுக்குக் காணிக்கை செலுத்துவதாகப் பிரார்த்தனை பண்ணுவதும் ஆகிய இரண்டு செயல்களும் பாராட்டத் தக்கவைகள் ஆக மாட்டா.

என்றைக்கு அரசாங்கம் வாக்காளர்களின் வாக்கைப் பெறுதற்குக் கைக்கூலி கொடுக்க ஆரம்பித்ததோ அன்றைக்கே சமுதாயத்தில் கேடுகள் அதிவிரைவில் வடிவெடுக்கலாயின. கைக்கூலி வாங்கிக்கொண்டு காரியங்களை நிறைவேற்றி வைப்பது இன்றைக்குச் சர்வ சாதாரணமாய்விட்டது. பணம் படைத்திருப்பவன் நலம் கேடு ஆகிய எதை வேண்டுமென்றாலும் சாதிக்கலாம் என்னும் எண்ணம் சமு

தாயத்தில் வலுத்து வருகிறது. ஆயினும் நலனைப் பணம் கொடுத்து விலைக்கு வாங்க முடியாது. நல்ல செயல்களுக்கு முட்டுக் கட்டை போடுகின்ற இடைஞ்சல்களை அகற்றுதற்கு மட்டும் கைக்கூலி பயன்படுகிறது. அதற்குமேல் மனிதனிடத்து இயல்பாக அமைந்திருக்கும் மேலான நோக்கமே அவனை நலனில் தூண்டுகிறது. கைக்கூலி அதற்கு உதவமாட்டாது. நல்லியல்பு படைத்திருக்கிற மேலோனுக்குக் கைக்கூலி கொடுக்க முயன்ருல் அவன் அதை ஆமோதிக்கமாட்டான். தன் போக்கில் செய்யவேண்டிய நலனையும் செய்ய அவன் மறுத்துவிடுவான். எனவே நல்லார்க்கிடையில் கைக்கூலி ஒருபொழுதும் ஆதிக்கம் செலுத்தமாட்டாது.

உலகக் காரியங்களுக்கு உலகப் பற்றுதலில் உழன்று வருகிற மக்களுக்கிடையில் கைக்கூலி கொடுத்து விரும்பியதை யெல்லாம் சாதிக்கலாம். நலன் ஒன்று மட்டும் அப்பாங்கில் நிறைவேருது. இன்றைக்கு நம் நாட்டிலுள்ள ஆட்சிமுறையை மாற்றி அமைத்தாலொழிய கைக்கூலி வாங்கிக்கொண்டு காரியங்களைச் செய்துகொடுக்கும் தீமையை அகற்ற முடியாது.

நல்லார்க்கு எங்ஙனம் கைக்கூலி கொடுத்து எக்காரியத்தையாவது சாதிக்க முடியாதோ அதே பாங்கில் கடவுளுக்குக் காணிக்கை செலுத்தி அவருடைய அருளைப் பெற முடியாது. மக்களில் சிலர் கோயிலுக்குச்சென்று கோரிக்கைசெய்யவும், அது நிறைவேறுதல் பொருட்டுக் கடவுளுக்குக் காணிக்கை செலுத்தவும் பிரார்த்தனை பண்ணிக்கொள்ளுகிருர்கள். பண்ணிய பிரார்த்தனை பிரகாரம் காரியம் நிறைவேறினல் காணிக்கையையும் செலுத்துகிருர்கள். மற்று காணிக்கை செலுத்தியதின் விளைவாகக் காரியம் ஒன்று நிறைவேறிற்று எனக் கருதுவது பிழை. காணிக்கை செலுத்தாதிருந்தாலும் நிறைவேறுதற்குரிய காரியங்கள் தாமாகவே நிறைவேறுகின்றன. அது மனிதனுடைய தகைமையைப் பொறுத்ததாம்; ஒரு நாளும் செய்கிற காணிக்கையைப் பொறுத்தது அன்று.

இனி, அறிவுடையோர் கடவுளுக்குக் காணிக்கை செலுத்தி ஒரு காரியம் நிறைவேற வேண்டுமென்று ஒருநாளும் பிரார்த்தனை பண்ணமாட்டார்கள். 'இறைவா, இன்ன காரியத்தில் நான் ஈடுபடுகிறேன். அது எனக்கு நலம் தருமாகில் உன்னுடைய திருவுளம் அதற்கு ஒத்ததாயிருக்குமாகில் அக்காரியம் இனிது நிறைவேறட்டும்' என்பதுதான் அறிஞர்கள் செய்யும் கோரிக்கையாகும்.

பாமரர்க்கிடையில் சிலர் காணிக்கை செலுத்திப் பிரார்த்திப்பதுதான் முறை என்று கருதுகின்றனர். அத்தகைய நம்பிக்கை உடையவர்களுக்கிடையில் அறிஞர்கள் ஏதேதோ சொல்லிக் குழப்பத்தை உண்டுபண்ணலாகாது. மனிதன் எதற்குத் தன்னை தகுதியுடையவனுகப் பண்ணிக்கொள்ளுகிருனே அதுவே அவனுக்குத் தற்செயலாய் வந்து வாய்க்கிறது. கடவுள் சகாயத்தால் அது வந்து வாய்த்தது என்று கருதுதலில் பிழையில்லை.

கேள்வி: (301) ஏதேனும் ஒன்ருல் தூண்டப்பெற்று மட்டுமே மனது வேலை செய்கிறது. பெருவாழ்வு வாழ்தற்கு மனதைத் தூண்டுவது எப்படி?

சிறுவர்கள் சிலர் செயலற்று வெறுமனே இருக்கின்றனர். அத்தகையவர்களைச் சிறுவர் விளையாட்டு மேடைக்கு அழைத்துச் செல்ல வேண்டும். ஏனைய சிறுவர்கள் ஓடியாடி விளையாடுவதைப் பார்த்தால் வெறுமனே இருக்கும் சிறுவனுக்கு ஊக்கம் உருவெடுக்கிறது. மற்றவர்களைப் பார்த்துப் பழகுவதின் வாயிலாகத் தனக்கும் விளையாட்டில் ஆர்வம் படிப்படியாக வருகிறது. நல்லதைப்பார்ப்பதே நலத்தில் நாட்டத்தை வளர்க்க உற்றஉபாயமாகிறது. ஆனல் பெருவாழ்வு வாழ்பவர்களைக் காண்பது அரிதிலும் அரிதாம். அப்படியிருந்தும் பெருவாழ்வில் ஊக்கம் வடிவெடுத்தாக வேண்டும். அதன் பொருட்டுச் சிறுவர்களுக்கு இராமாயணம் மகாபாரதம் போன்றகதைகளை முறையாகச் சொல்லிவந்தால் நல்வாழ்வில் நாட்டமும் கேடு நிறைந்த வாழ்வில் வெறுப்பும் தானுக உள்ளத்தில் வடிவெடுக்கின்றன. அத்தகைய மனநிலையே சிறியோர் பெரியோர்களாகிய எல்லாரையும் பெருவாழ்வில் தூண்டுகிறது. எனவே நலனைவளர்ப்பதற்கும், கேட்டைத் தவிர்ப்பதற்கும், பெருவாழ்வு வாழ்வதற்கும் இந்தஇரண்டு இதிகாசங்களைக் கற்பதே உற்ற உபாயமாம்.

ஸ்ரீ லலிதா வியாக்கியானம்-161

918. चैतन्यार्घ्यसमाराध्या சைதன்யார்த்ய ஸமாராத்யா—ஆத்ம சொரூபத்தின் வாயிலாக நன்கு ஆராதிக்கப்படுபவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

ஜடப்பொருள் படிப்படியாகப் பரிணமித்துச் சேதனமாவது இயற்கையின் திட்டம். பிரபஞ்சம் எங்கும் இது சதா நிகழ்ந்துகொண்டு வருகிறது. ஜடசக்தி சித்சக்தியாகப் பரிணமிக்கிறது என்றும் இத்தத்துவத்தைப்பற்றி இயம்பலாம். சிற்றுயிர் பேருயிராகப் பரிணமிக்கிறது என்றும் இக்கோட்பாட்டைப்பற்றிப் பகரலாம். உயிரின் மேன்மைக்கேற்ப அதனுடைய உடலமைப்பிலும் மேலாம் பாங்கு தானாக வந்து அமைகிறது. உடலின் அமைப்பு மேன்மையுறுதற்கேற்ப அது உண்ணும் உணவிலும் மேலான பாங்கு தானாக வந்து அமைகிறது. அதற்குச் சான்றொன்று எடுத்துக்கொள்வோம். நெற்பயிரினின்று நெல் உண்டாகிறது. நெல்லுள்ளிருக்கும் அரிசியை மக்கள் உணவாக ஏற்றுக்கொள்ளுகின்றனர். அதினின்று வரும் வைக்கோல் கால்நடைகளுக்கு உணவாகிறது. நெல் உமியோ மக்கிப்போன பிறகு நிலத்திலிருக்கும் மண்ணுக்கு எருவாகிறது. இங்ஙனம் சரீர அமைப்பின் மேன்மைக்கேற்ப அதைப் போஷிக்கும் உணவும் மேலானதாக அமைதல்வேண்டும். பரிணமத்தில் மேல்நிலைக்கு வந்துள்ள மனிதனே கிரியா விசேஷங்களுடன் கடவுள் வழிபாட்டில் ஈடுபடுகிறான். அச்செயலைச் சிற்றுயிர்கள் செய்யமாட்டா. வழிபடுகிற முறைக்கு அர்க்யம் படைத்தல் என்பது பரிபாஷை. திரவிய மயமாகிய யக்ஞத்தில் பத்ரம், புஷ்பம், அருகு, சந்தனம், அரிசி முதலியன வழிபாட்டுக்குரியவைகளாக அமைகின்றன. அதே வழிபாட்டை மானச பூஜையாக அமைக்கின்றபொழுது ஐந்து மேலாம் எண்ணங்கள் சேர்ந்து அர்க்கியம் ஆகின்றன. வழிபடுகிற சாதகன் ஆத்மபரிபாகத்தில் ஆரம்பதசையிலிருக்கின்றபொழுது இயற்கையின்கண்ணுள்ள இத்தகைய தூயபொருட்களை வழிபாட்டில் பயன்படுத்துகிறான். மானச பூஜை பண்ணுகிற மேலாம் நிலையை எட்டுகிறபொழுது மனத்தகத்து உதிக்கும் மேலாம் எண்ணங்களே அர்க்கியத்திற்கு உரியவைகள் ஆகின்றன.

தான் உடல் சொரூபம் அல்லன்; ஆத்ம சொரூபம் என்னும் பரிபாகத்தை அடைந்திருக்கிறபொழுது அவனுடைய வழிபாட்டுமுறையும் மேலானதாகமாறியமைகிறது. திரவியமயமான யக்ஞத்தைவிட ஞானயக்ஞம் மேலானது என்பது கோட்பாடு. மனிதன் எதை வழுத்துகிறானே அதன்மயமாக அவன் மேன்மை அடைகிறான். தன்னை ஆத்மசொரூபமாகக் கருதிப் பரமாத்மனிடத்துத் தன்னை லயப்படுத்துவதற்கு நிகரான வழிபாடு இல்லை. சுத்த ஜலம் சுத்த ஜலத்தில் இரண்டறக் கலப்பது போன்று பண்பாடடைந்துள்ள ஜீவாத்மன் பரமாத்மனில் ஒன்றுபடுவதே வழிபாட்டின் முடிந்த நோக்கமாகிறது.

சைதன்யம், சேதனம், பிரக்ஞை, பிரக்ஞானம், துரியம், வாலறிவு Awareness, Pure conciousness ஆகிய பதங்களனைத்தும் ஆத்ம தத்துவத்துக்கே உரியனவாம். ஆத்மசொரூபம் தன்னில் தான் திளைத்திருப்பதற்கு நிகரான வழிபாடு வேறு ஏதுமில்லை. உலக நிலையில் வைத்து இதற்குச் சான்று ஒன்று எடுத்துக் கொள்ளலாம். தாய்க்கும் சேய்க்கும் உள்ள தூய இணக்கம் ஆத்மா ஆத்மசொரூபத்தில் திளைத்திருப்பதற்கு நிகராகிறது. தாய் குழந்தைக்குத் தன்முலைப்பால் ஊட்டிப்பேணுகிறாள். அக்குழந்தை முலைப்பாலைப் பருகித் தாயோடு இணக்கம் பூணுகிறது. இந்த இணக்கம் திரவியமய யக்ஞத்திற்கு நிகர். உடலைத்தானென்று கருதி அகங்கரிக்கிற நிலைக்கு அப்பாலுள்ள குழந்தையோடு அதைப் பெற்றெடுத்துள்ள தாய் தன்னுடைய தேக உணர்ச்சியையும் தாண்டிய நிலையிலிருந்துகொண்டு தன் குழந்தையோடு பேரிணக்கம் பூணுகிறாள். தாய்க்கும் சேய்க்கும் உள்ள இந்த இணக்கமானது ஆத்மசொரூபம் ஆத்மாவில் திளைத்திருப்பதற்கு நிகராகிறது.

சாதகன் பிரபஞ்சப் பொருள்களை வைத்துக் கொண்டு கிரியா விசேஷங்களுடன் அன்னை பராசக்தி வழிபாடு செய்வது ஆத்மசாதனத்தின் ஆரம்பதசையாம். அந்நிலையில் அவன்

கையாளுகிற திரவியங்களனைத்தும் மேலாம் தத்துவங்களுக்குச் சின்னங்களாம். சான்ருக அன்றலர்ந்த தூய மலர் தூய எண்ணத்திற்குச் சின்னமாகிறது. பத்ரம் எழிலின் சின்னமாம். சந்தனம் பிராணதத்துவத்தைக் குறிக்கிறது. அரிசி ஜீவதத்துவம்.

மானசபூஜையில் இவை யாவும் எண்ணங்களாக மாறியமைகின்றன. ஆத்மபோதம் உருவெடுக்கின்றபொழுது இத்தகைய பொருள்களுக்கும் எண்ணங்களுக்கும் அவசியமில்லை. சொரூபம் தன்னில்தானே திளைத்திருப்பது சிறந்த வழிபாடாகிறது. இத்தகைய வழிபாடு நிராலம்பன யோகம் எனப் பெயர் பெறுகிறது. சொருபத்திற்குப் புறம்பாக வேறு ஏதும் அந்நிலையில் இடம்பெறுவதில்லை. சொருபம் தன்னில் தானாய் இலங்குகிறது. ஆதலால் நிர் ஆதாரப்பூஜை என்னும் பெயர் அந்நிலைக்கு வழங்கப்படுகிறது. ஆத்மசாதகன்புரிகிற வழிபாட்டின் உச்சநிலை இதுவாம். கடலை எட்டிய நதிக்கு மேலும்பாய்தற்கு இடமில்லை; அவசியமும் இல்லை. அடைய வேண்டிய குறியை அது அடைந்தாயிற்று. அப்பாங்கில் ஆத்ம சாதகன் உபாதிகள் ரஹிதனுகவும், ஜீவ போதத்தைத் தாண்டியவனுகவும் அமைகின்ற பரிபாகம் அவனுக்குச் சொந்தமாகிறது. பர போதத்திலும் பரமானந்தத்திலும் திளைத்திருப்பதே அந்நிலையில் அவன் அடைகிற பெறுதற்கரிய பேரும். அந்நிலையில் ஜீவாத்மா—பரமாத்மா பேதமில்லை. அப்போதமே அகண்டாகாரமாக இலங்குகிறது. இப்படித் தன்னைத் தான் ஆத்ம சாதகன் வழிபடு தெய்வமாகிய அன்னையினிடம் ஒப்படைக்கிருன். ஆதலால் தான் சைதன்யார்த்ய ஸமாராத்யா என இந்த நாமத்தின் வாயிலாக அன்னை பராசக்தி போற்றப்பெறுகிருள்.

919. **चैतन्यकुसुमप्रिया சைதன்யகுஸுமப்ரியா**— பேரறிவு என்னும் மனதிலே பிரியம் வைத்தவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

விளங்குகின்ற பொருள் ஒன்றை விளங்காத மற்ருெரு பொருளை உபமானமாக வைத்துக்கொண்டு விளக்குவது முறை. சைதன்யம் அல்லது பிரக்ஞை அல்லது சேதனம் எல்லார்க்கும் எளிதில் விளங்குவதன்று. அதை விளக்குதல் பொருட்டே அதற்குப் புஷ்பம் என்னும் அடைமொழி வழங்கப்பட்டிருக்கிறது. வழிபாட்டிலே படித்தரங்கள் பல உள. எல்லாவித வழிபாட்டிலும் குஸுமம் அல்லது புஷ்பம் முக்கியமான இடம்பெறுகிறது. புஷ்பத்தின் பாங்கை ஓரளவு அறிந்துகொள்ளுவது சாமானியமான மனிதனுக்கும் சாத்தியமாகிறது. உயிர்த்தத்துவம் மரம், செடி, கொடிகளாகிய ஸ்தாவரத்தில் துவங்குகிறது. அத்தகைய மரம், செடி, கொடிவகைகள் அடையும் மேலான நிலைக்கு விளக்கமாக மலர் அமைகிறது. உயிர்வகைகளின் மலர்ந்துள்ள நிலைக்கு விளக்கமாக மலர் அமைந்திருக்கிறது. மலரிலே மணம் கமழுகிறது. கண்களைக் கவரும் காட்சிகளுள் பூக்களின் காட்சி மேலோங்கி நிற்கிறது. உணவு வகைகளுள் உச்சநிலையில் இருப்பது தேன். அத்தகைய தேனுக்குப் பிறப்பிடம் பூ. காண்பதற்கு அரியதாயிருப்பதும், சுவைப்பதற்கு அரியதாயிருப்பதும் ஆகிய இந்திரிய சுகங்களுக்குப் பிறப்பிடம் புஷ்பம். மோப்பதற்கு அரியதாயிருப்பது மலர். அதனிடத்திருந்து நறுமணம் சதா கமழ்ந்து கொண்டிருக்கிறது. அது மேனியில் படுமிடத்து ஊறு அல்லது ஸ்பரிச உணர்ச்சியின் வாயிலாகவும் மனிதனுக்கு மலர் மகிழ்வை ஊட்டுகிறது. ஆக ஐந்து இந்திரியங்களுள் நான்கு இந்திரியங்கள் வாயிலாக மனிதனுக்கு நேரே மகிழ்வை வழங்க வல்லதாயிருப்பது மலர். மலரைப் போற்றுவதே உயிர்வகைகளின் இயல்பாகிறது. அப்படிப் போற்றுவதைக் காதால் கேட்டு மனிதன் இன்புறுகிருன். எந்த உயிராவது எந்தவிதத்திலாவது மலரைத் தூற்றவும், புறக்கணிக்கவும் செய்வதில்லை. இக்காரணங்களை முன்னிட்டே ஐம்பொறிகளுக்கும் அருள் விருந்தாய் அமைந்திருப்பது மலர் எனலாம். ஐம்பொறிகளுக்கு அதனதற்குரிய தன்மாத்திரையை வழங்குவது ஆத்மசொரூபம். அந்த ஆத்ம சொருபத்திற்கு நிகராகப் புறவுலகில் அமைந்திருப்பது புஷ்பம். எனவே கடவுள் வழிபாட்டில் புஷ்பம் முக்கியமான இடம்பெற்றிருக்கிறது. ஈசனுடைய மகிமைக்கு விளக்கமாயிருப்பது புஷ்பம். அவனுடைய வழிபாட்டுக்கு ஏற்றத் திரவியமாயிருப்பது புஷ்பம். மனிதனுடைய நிஜசொரூபமாகிய சைதன்

யத்தை நினைவூட்டவல்லதாயிருப்பது புஷ்பம். சைதன்யமும் ஆனந்தமும் சொரூபத்தில் ஒன்றேயாம். ஆனந்தத்தை யாண்டும் புதுப்பிக்க வல்லது புஷ்பம். ஐந்து இந்திரியங்களின் வாயிலாகவும் அது ஆனந்தத்தைப் புசிக்கிறது. எனவே சைதன்ய குஸுமம் என்னும் அடைமொழி தோற்றத்துக்கு அப்பாலுள்ள சைதன்யத்துக்கும் பொருந்துகிறது; தோற்றத்துக்கு வந்துள்ள மலருக்கும் பொருந்துகிறது. ஆதலால் கட்புலனாகின்ற மலரின் வாயிலாகக் கட்புலனாகாத ஆத்மசொருபத்தை அறிந்துகொள்வதற்கு அது நன்கு பயன்படுகிறது. அறிந்துள்ள ஒன்றின் துணைகொண்டு அறிவுக்கெட்டாததைக் கிரகிக்க முயலுவது முறைமை. அதற்கு நன்கு பயன்படுவது குஸுமம் அல்லது புஷ்பம்.

சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐந்துபண்புகள் ஐந்து இந்திரியங்களுக்குத் தன்மாத்திரைகளாக அமைந்திருக்கின்றன. ஐம்பூதங்களாகவும் அவைகளின் தன்மாத்திரைகளாகவும் இலங்குவது ஆத்மசொருபம். சொருபத்தைநேரே அறிந்துகொள்ள இயலாதஜீவாத்மன் அதன் பரிணமத்தின் வாயிலாக அறிந்துகொள்ள வல்லவனாகிறான். இதற்கு உபமானம் ஒன்று தேவை. வானவெளியில் பாய்கிற சூரிய கிரணத்தை மனிதன் நேரில் காணமுடியாது. ஆனல் அது ஒரு மேகத்தின் வாயிலாகப் பாய்ந்து ஏழு நிறங்களாகச் சிதறடைகின்றபொழுது அந்நிறங்களைக் காண அவனுக்கு இயலுகிறது. மூல நிலை சூரியகிரணம். தோற்றத்திற்கு வந்திருப்பது ஏழு நிறங்கள். அதேவிதத்தில் மூலநிலை ஆத்ம சைதன்யம். இந்த ஆத்ம சான்னியத்தியம் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றமாகத் தோற்றத்திற்கு வந்திருக்கிறது. இந்த ஐந்துவித தன்மாத்திரைகளுக்கும் இருப்பிடமாயிருப்பது புஷ்பம். புஷ்பம் ஒன்றை முகந்து இன்புற்று இருப்பதும், ஆத்ம சொருபத்தில் திளைத்திருப்பதும் கிட்டத்தட்ட ஒன்றேயாம். இக்காரணத்தை முன்னிட்டே கட்புலனாகாத ஆத்மசைதன்யம் கட்புலனாகின்ற குஸுமத்தோடு இணைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே ஆத்ம சொருபத்தை உள்ளபடி அறிந்துகொள்வதற்குத் தோற்றத்தில் வந்துள்ள புஷ்பம் நன்கு பயன்படுகிறது.

இயற்கையில் எது ஆனந்தத்தை ஊட்டுகிறதோ அது ஆத்மாவின் புறத்தோற்றமாம். பிரபஞ்சம் முழுதுமே சைதன்யத்தின் தோற்றம். அங்ஙனம் தோன்றி வந்தவைகளுள் உயிர்கள் அனைத்துக்கும் இன்பமூட்டும் தகைமை மலருக்கு உண்டு. ஆதலால்தான் அன்னை பராசக்தி சைதன்ய குஸுமப் பிரியா என்று போற்றப்பெறுகிறாள்.

920. सदोदिता ஸதோதிதா — இடையறாது தோன்றிக்கொண்டிருப்பவள் என்பது இதன் பொருள்.

மலரைத் திரவியமாக வைத்துக்கொண்டு அன்னை பராசக்தியைப் பக்தர்கள் சர்வகாலமும் வணங்கிவருகிறார்கள். அங்ஙனம் வணக்கத்துக்கு உதவுகின்ற மலர் நாள்தோறும் புதியது புதியதாக மலர்ந்துகொண்டே இருக்கிறது. அதன் மலர்ச்சியை ஸதோதிதா என்று சொல்லுவதும் பொருந்தும். சைதன்யமும் சுடர் ஒளியும் ஒன்றேயாம். சுடர் ஒளிக்குப் புறவுலகில் நல்ல எடுத்துக்காட்டாயிருப்பது சூரியன். இந்தச் சூரியனை க்ஷணந்தோறும் உதயமாயிருக்கும் ஞானவெளிச்சம் என்று கூறலாம். இந்த ஞானவெளிச்சத்துக்கு இருப்பிடமாயிருப்பவள் அன்னை பராசக்தி. கருவிகரணங்கள் ஓய்ந்த தொண்டர்களுடைய உள்ளம் அன்னை பராசக்திக்கு யாண்டும் இருப்பிடமாக அமைந்திருக்கிறது. நிலவுலகில் ஒவ்வொரு பகுதியிலும் சூரியன் அப்போதைக்கப்போது உதயமாகிக் கொண்டிருக்கிறது. அப்படி உதயமாவதில் இடையீடு ஏதுமில்லை. அதே பாங்கில் சைதன்யமாய் இலங்கும் அன்னை பராசக்தி பக்தர்களுடைய உள்ளத்தில் சர்வகாலமும் உதித்துக் கொண்டேயிருக்கிறாள். நித்திய ஜாக்ரதாவஸ்தையில் அவள் தொண்டர்களுடைய உள்ளத்தில் மிளிர்ந்துகொண்டிருக்கிறாள் என்று மொழிவதும் மரபு. பக்தனொருவன் அன்னையின் சொருபத்தை உள்ளத்தினுள் ஓய்வு இல்லாது உள்குகிறான். உன்னைமறந்தால் உயிர் துறப்பேன் என்கிறான் அவன். தைலதாரைபோன்று இடையீடின்றி சர்வகாலமும் பரம்பொருளை உள்ளுணர்வோடு உள்குகின்ற பக்தனும் சைதன்ய சொருபமாக இலங்குகின்றான். அது அவன் அடையும் பெறுதற்கு அரிய பேறும். இந்த நாமம் முற்றிலும் தியானத்துக்குரியதாம்.

ஆத்ம போதம்

(திரு V. S. நரசிம்மன்)

கர்ம காண்டத்தின் அடிப்படைக் கொள்கைகளை மறுத்துக் கூறுவது ஞான காண்டம், உபநிஷத் ஆகும். பூர்வ மீமாம்சத்தில் 'கர்ம' என்ற சொல் நான்கு பொருள்களில் பயன்படுத்தப்படுகின்றது. नित्य (நித்தியம்): என்றும் தவறாது செய்யவேண்டிய செயல்; नैमित्तकम्: (நைமித்திகம்) குறிப்பிட்ட காலங்களில் செய்ய வேண்டியவை; काम्य (காம்ய): மனதில் ஏற்பட்ட குறிப்பிட்ட ஆசையை நிறைவேற்றச் செய்யும் செயல்கள்; निषिद्ध (நிஷித்த): விலக்கப்படவேண்டிய செயல்கள்.

கர்மத்தைச் செய்பவரிடம் 'நான் கர்த்தா, நான் போக்தா' என்ற அபிமானம் மேலோங்கியே இருக்கும். அபிமானத்தைக் கர்மம் வலியுறுத்துவதால் அது அஞ்ஞானத்திற்குப் புறம்பன்று. மாற்றங்கள் அற்ற, நித்திய சத் சித் ஆனந்த சொரூபமான ஆத்மாவை மறந்து, 'நான் ஜீவன், நான் கர்த்தா,' என்ற அபிமானமே அஞ்ஞானம் ஆகின்றது. நாம ரூபத்தில் ஈடுபட்டுள்ள அஞ்ஞானி உண்மை சொரூபத்தை மறந்தவன்; அதுபோல் காமத்தில் ஈடுபட்டு 'கர்த்தா, போக்தா' என்ற அபிமானத்தை உடையவனும் அஞ்ஞானியே. ஆகவே 'அவிரோதிதயா கர்ம' என்று கர்மமும், அஞ்ஞானமும் மாறுபட்டவை அல்ல என்று உணர்த்துகின்றார்.

ஞானமும், அஞ்ஞானமும் எதிரிடையானவை—வெளிச்சமும், இருட்டும் போல. ஒளி உள்ள இடத்தில் இருள் இல்லை; இருள் உள்ள இடத்தில் வெளிச்சம் இல்லை. அது போன்று அஞ்ஞானம் உள்ளவரை ஞானம் தோன்றாது; ஞானம் எய்தியபின் அஞ்ஞானத்திற்கு இடமே இல்லை. ஆசையும் தன்னலமும் அகங்காரமும் நிறைந்து செயல்புரிபவன் கர்மி, அஞ்ஞானி; ஆசையை விட்டு (நிஷ்காமிய), செயல் இறைவனின் தொண்டு எனக் கருதி (ஈசுவர ஆராதனை), பிறருடைய நலத்தையே மனதிற்கொண்டு (லோக சங்கரஹம்), தான் இறைவனின் கரங்களில் உள்ள கருவி என்ற எண்ணத்தை மேற்கொண்டு (நிமித்த மாத்திரம்) கர்மத்தைத் திறமையாகச் செய்பவன் (குசல:, தக்ஷ:) கர்மயோகி ஆகின்றான். அவனுக்குக் கர்மபந்தம் கிடையாது; அஞ்ஞானத்தில் அவன் ஆழமாட்டான். இத்தகைய மனபரிபாகம் ஏதுமின்றிக் கர்மத்தில் ஈடுபடுவது அஞ்ஞானத்தை மேலோங்கச் செய்யும்; ஞானத்தின்பாற் கொண்டு செல்லாது.

परिच्छिन्न इवाज्ञानात्तन्नाशे सति केवलः ।
स्वयं प्रकाशते ह्यात्मा मेघापायेऽंशुमानिव ॥

आत्मा (ஆத்மா) ஆத்மாவானது अज्ञानात् (அக்ஞானாத்) அறியாமையினால், परिच्छिन्न इव (பரிச்சின்ன இவ) எல்லைக்கு உட்பட்டதுபோல் (காணப்படுகின்றது); तत् नाशे सति (தத் நாசே சதி) அது அழிவுற்ற பிறகு, मेघापाये (மேகாபாயே) மேகங்கள் கலைந்தபின் अंशुमानिव (அம்சுமானிவ) கதிரவன்போல், स्वयं (ஸ்வயம்) தானே केवलः (கேவல:) அது மாத்திரம் प्रकाशते हि (பிரகாசதே ஹி) பிரகாசிக்கின்றது அல்லவா?

"அறியாமையின் காரணமாக ஆத்மா எல்லைக்கு உட்பட்டது போன்று தோன்றுகின்றது. மேகக்கூட்டங்கள் கலைந்த உடன் சூரியன் தன்னுடைய ஸ்வயம் பிரகாசத்தோடு ஒளி வீசுகின்றது. அதுபோன்று அஞ்ஞானம் அழிந்தவுடன் ஆத்மா தானே ஸ்வயம் ஜோதியாகப் பிரகாசிக்கின்றது அல்லவா?"

அறியாமையினால் (அஞ்ஞானம்) ஆத்மாவின் உண்மையான நிலை நமக்கு விளங்குவதில்லை. எல்லைக்கு அப்பாற்பட்ட அப்பரம்பொருளை, எல்லைக்குட்பட்டதாகக் கருதி அச்சொருபத்தை உள்ளபடி உணராது இருக்கின்றோம். கயிற்றைக் காணாது பாம்பைக் காண்பது போல், வெற்றிடத்தில் கானல் நீரைப் பார்ப்பது போல், கிளிஞ்சலில் வெள்ளியைக் காண்பது போல், ஆத்மாவில் அதற்கு மாறான தன்மையைக் காண்கிறோம். இதனை अध्यारोप (அத்யாரோபம்) என்று வேதாந்தம் குறிப்பிடும். இதனை अध्यास (அத்யாசம்) ஒன்றில் மற்றொன்றைக் காணுதல் என்றும் குறிப்பிடுவர். स्मृति रूपः परत्र पूर्वदृष्टावभासः— என்று ஸ்ரீ ஆசாரியர் இதனை வரையறுப்பார். स्मृति

रूप: ஞாபகத்தின் வடிவமாக, परत्र பிறிது ஓரிடத்தில் पूर्वदृष्ट வேறு ஓரிடத்தில், சமயத்தில் கண்டதின் अवभास: பொய்த் தோற்றம். இருக்கின்ற கயிறு ஒன்றில், முன்பு வேறு எங்கோ கண்ட பாம்பின் தோற்றத்தைக் காணல் அத்தியாசம் ஆகும்.

தவறான எண்ணத்தைப் போக்குவது ஞானம் ஒன்றுதான். எனவே அஞ்ஞானம் அழிந்தவுடன் ஆத்மா தனது ஸ்வபாவத்தோடு தானே பிரகாசிக்கின்றது என்று கூறுகின்றார். கயிறு, கானல் நீர், கிளிஞ்சல் என உள்ள பொருளை உள்ளவாறு காண்பதே ஞானம். தவறான எண்ணத்தைப் போக்கி உண்மையை உணரச் செய்யும் நெறியை அபவாதம் (अपवाद) என்று வேதாந்தம் குறிப்பிடும்.

"மேகம் சூரியனை மறைப்பதுபோல், அஞ்ஞானம் பரம்பொருளை மறைக்கின்றது என்றால் அது பரம்பொருளைக்காட்டிலும் சக்தி அதிகம் உடையது அல்லவா? கயிற்றில் பாம்பைக் காண்கின்றான் எனின், அந்தப் பாம்பு எங்கே உள்ளது? அவனது கற்பனை என்றால், அது வரையில் அது உண்மைதானே, எங்ஙனம் பொய்த் தோற்றமாகும்?" இங்ஙனம் பலவித ஐயங்களைப் பண்டிதர்கள் எழுப்பலாம். இதற்குச் சமாதானம் கூறும் வகையில் அத்வைத வேதாந்திகள் பதில் உரைக்கலாம். ஆனால் இருவரும் கருத்து ஒருமித்துச் சொல்ல மாட்டார்கள். வியவகாரநிலையில் இருந்து, பாரமார்த்திக நிலையைப்பற்றி ஆராயும்போது இத்தகைய சிக்கல்கள் எழுவது இயற்கையே. சாதனத்துடன் வேதாந்த விசாரம் செய்து, அனுபவத்தை ஆதாரமாகக் கொண்டு பேசும் பரமஹம்சர்களிடையே இத்தகைய குழப்பத்திற்குச் சிறிதும் இடமில்லை.

ஞானம் புதியதாக ஒன்றைப் படைப்பதில்லை என்று இரண்டாவது சுலோகத்தில் கண்டோம். அதே கருத்தை இந்தப் பாடல் தெளிவாக்குகின்றது. மேகத்தால் மறைக்கப்பட்டபோதும் சூரியன் தனது ஒளியை இழக்கவில்லை; மேகம் அகன்றவுடன் அப்பிரகாசம் திடீரெனத் தோன்றவில்லை. சூரியன் எக்கணமும் சுயம்பிரகாசமே! மேகம் அந்த ஒளியை மறைத்தது, அவ்வளவுதான்; அதுபோல்அஞ்ஞானம் அல்லது மாயை ஆத்மாவின் பிரகாசத்தை அறியவொட்டாது தடுத்தது. மாயை நீங்கிய பின் உள்ளது உள்ளபடி உண்மையை, ஆத்மபோதத்தை, ஞானச்சுடரை ஜீவன் அறிகிறான். எனவே 'அஞ்ஞானத்தை அகற்றுவது எங்ஙனம்? அதனை எவ்வாறு நாசப்படுத்த வேண்டும்?' — இந்தக் குறிக்கோளை அடிப்படையாகக்கொண்டு சாதகனின் வாழ்வு அமையவேண்டும்.

வேதாந்த தத்துவம், சாதனம் இவை இரண்டும் அத்யாரோபம், அபவாதம் என்ற இரண்டு சொற்களைக்கொண்டு நன்கு விளக்கப்படுகின்றன. மயக்கத்தால், தவறான எண்ணங்களால் உண்டாகிய பொய்த் தோற்றத்தை ஒதுக்குதல் 'அபவாதம்' என்று கண்டோம். ஆத்ம–அனாத்ம விவேசனம், நித்யாநித்ய வஸ்து விவேகம் என்றும் ஞானம் விளக்கப்படுகின்றது. மெய்ப்பொருளைப்பற்றிய சிந்தனையில் மனம் லயித்து, அதன்பின் மனிதன் அடிச்சுவடுகூடச் சிறிதும் இல்லாது ஒழிந்தவுடன் ஞானம் தானே உதயமாகும். தன்னுடைய நிஜஸ்வரூபத்தை (தான் ஆத்மா என்ற உண்மையை) எக்கணமும் தியானித்து வருதலே சாதனமாகும். கூட்டில் உள்ள புழு தன்னைக் கொட்ட வரும் குளவியைப்பற்றிய சிந்தனையில் ஆழ்ந்து மூழ்குவதால், தானும் குளவியாகிவிடுகின்றது. यद्भावं तद्भव्यम्-'யத் பாவம் தத்பவ்யம்' 'சிந்தனை எப்படியோ நிலையும் அப்படியே' என்று இந்த உண்மையை भ्रमरकीटन्याय (ப்ரமர கீட நியாயம்) எனக் குறிப்பிடுவார்கள்.

அகத்தே எப்பொழுதும் ஆத்ம சிந்தனையே மேலோங்கி இருப்பதற்கு மஹா வாக்கியங்களை மனதில் ஜபம் செய்து, அவற்றின் ஆழ்ந்த பொருளை மனதில் லயிக்கச் செய்யவேண்டும். மஹா வாக்கியங்கள் நான்கு. ஒவ்வொரு வேதத்தினின்றும் ஒரு வாக்கியம் எடுக்கப்பட்டுள்ளது. (a) ரிக்வேதம். ஐதரேய உபநிடதம்- प्रज्ञानं ब्रह्म 'ப்ரக்ஞானம் ப்ரஹ்ம' உணர்வே பிரம்மம். இந்த வாக்கியம் பிரம்மத்திற்கு இலக்கணமாக அமைவதால் लक्षण वाक्य லக்ஷண வாக்கியம் எனப்படும். (b) யஜுர் வேதம், தைத்திரீய உபநிடதம்- "अहं ब्रह्मास्मि அஹம் ப்ரஹ்மாஸ்மி, நான் பிரம்மம்" உபதேசத்திற்குப் பின் உண்மையைஉணர்ந்து, தனது அனுபவத்தைச் சீடன் வெளிப்படுத்துவதால்

இது अनुभव वाक्यं, அனுபவ வாக்கியம். (c) சாம வேதம், சாந்தோக்கிய உபநிடதம்— 'तत् त्वमसि தத் த்வமஸி - நீ அதுவாக இருக்கிறாய்.' மாறுபடும் பல்வேறு இயல்புகளுக்கு ஆதாரமாக, மாறாத, நிஜ ஸ்வருபத்தைச் சீடனுக்குக் குரு இம்மொழியில் உபதேசம் செய்வதால் இது गुरूपदेश वाक्यं குரு உபதேச வாக்கியம். (d) அதர்வண வேதம், மாண்டுக்ய உபநிடதம்- "अयमात्मा ब्रह्म அயம் ஆத்மா ப்ரஹ்ம- இந்த ஆத்மா பிரம்மம்" சுருதியில் கூறப்பட்டு, யுக்தியால் நிர்ணயிக்கப்பட்டு, அனுபவத்தால் அடையப்பெறும் साक्षात्कार वाक्यं சாக்ஷாத்கார வாக்கியம்.

மஹா வாக்கியங்களைச் சிந்தித்து, தெளிவு பெற்றுத் தியானத்தில் ஈடுபடுதல் சிறந்த சாதனம் ஆகின்றது. இரண்டாவது சுலோகம் உணர்த்துவதைப் போன்று ஆத்ம ஞானம் புதியதாக அடையப்படுவதன்று. அஞ்ஞானத் திரையின் காரணமாக அறியப்படாத உண்மை அறியப்படுகின்றது. இது அடையப்படாத ஒன்றை அடைவதுபோன்று அன்று. 'மேகம் அகன்றபின் கதிரவன் ஒளியோடு திகழ்வது போல்' என்ற உதாரணம் சிறப்பாக ஊன்றிக் கவனிக்கத் தக்கது. மஹா வாக்கியங்களை ஜபிப்பதால் பெறப்படும் பலன் அஞ்ஞான நாசம். அதுவே ज्ञान प्राप्ति ஞான ப்ராப்தி— ஞானத்தைப் பெறுவது ஆகின்றது.

अज्ञान कलुषं जीवं ज्ञानाभ्यासाद्वि निर्मलम् ।
कृत्वा ज्ञानं स्वयं नश्येत् जलं कतकरेणुवत् ॥

जलं (ஜலம்) தண்ணீரை कतकरेणुवत् (கதகரேணுவத்) தேத்தாங்கொட்டைப் பொடியைப் போல், अज्ञानकलुषं जीवं (அஞ்ஞான கலுஷம் ஜீவம்) அறியாமையில் ஆழ்ந்துள்ள ஜீவனை, ज्ञानाभ्यासात् (ஞான அப்யாசாத்) ஞான சாதனையின் மூலம் ज्ञानम् (ஞானம்) ஞானமானது, विनिर्मलम् कृत्वा (விநிர்மலம் க்ருத்வா) மாசற்றவனைச் செய்து, स्वयं (ஸ்வயம்) தானும் नश्येत् (நச்யேத்) அழிந்துவிடும்.

"கலங்கிய நீரில் போடப்படும் தேத்தாங்கொட்டையின் பொடி, நீரைச் சுத்தமாக்கித் தானும் மறைந்து விடும். அதுபோன்று, ஞானத்தின் துணைகொண்டு மேற்கொள்ளப்படும் ஞான சாதனையின் மூலம் அஞ்ஞான இருளில் மூழ்கியுள்ள ஜீவனைப் பவித்திரமானவனாக ஆக்கி ஞானம் மறைந்து விடுகின்றது."

ஜீவனிடம் உள்ள மாசு யாது? தன்னுடைய உண்மை நிலையை மறந்து, பிறப்பு, இறப்பு, சுகம், துக்கம் ஆகிய விகாரங்களுடன் தன்னை ஐக்கியப்படுத்திக் கொள்வதே அஞ்ஞானம், மலம், மாசு எனப்படும். மலத்தோடு இருப்பவனை 'நிர்மலம்' ஆக்குவது ஞானத்தின் குறிக்கோள். இடைவிடாத ஆத்ம சாதனையால் இது கைகூடுகின்றது. சாதனையின்றித் தெய்விக வாழ்வு பூர்த்தி ஆகாது. இதன் முக்கியத்துவத்தைச் சிறிது காண்போம்.

ஸ்ரீ கிருஷ்ணன், "உத்தரேதாத்மனாத்மானம்–தன்னைக் கொண்டே தன்னை உயர்த்திக்கொள்ளவேண்டும் (கீதை 6-5)" என்று ஞான அப்பியாசத்தை வலியுறுத்துகின்றார். "மனதைத் தன்வயப்படுத்துவது மிகவும் அரிதான செயலாக இருக்கின்றது. அதை அடக்குவது காற்றை அடக்குவதுபோன்று இயலாதது என்று நினைக்கின்றேன்" என்று அர்ச்சுனன் புலம்பும்போது, கீதாசாரியன் விடை தருகிறார். 'மனம் கட்டுப்படாதது, அலையும் தன்மையது என்பதில் ஐயமில்லை. எனினும் அப்பியாசத்தாலும், வைராக்கியத்தாலும் அதை அடக்கலாம். அப்யாசேன து கௌந்தேய வைராக்யேன ச க்ருஹ்யதே" (கீதை 6-34, 35) என்று சாதனையின் இன்றியமையாத தன்மையை இயம்புகிறார்.

'எத்தனை வருடங்கள் இப்பயிற்சியில் ஈடுபடவேண்டும்?' என்ற கேள்வி சாதகனுக்கு எழலாம். ஆத்ம சாதனை துவக்கத்தில் கடினமாகத் தோன்றினாலும், சிறிது காலத்தில் அப்பயிற்சியே இன்பமளிக்கும். "அப்யாஸாத் ரமதே-(கீதை 18-36)" என்று கீதை இந்நிலையைக் குறிக்கும். அப்பியாசத்தின் குறிக்கோள் ஞானத்தை அடைவது ஆகும். எனவே ஞானம் பெறும் வரை பயிற்சி தொடரவேண்டும். ஆசாரிய சங்கரர் இரண்டு உதாரணங்களால் இதனை உணர்த்துகின்றார். 'தண்டுலஸ்ய யதா சர்ம, யதா தாம்ரஸ்ய காரிமா- நெல்லை உரலில் இட்டு உலக்கையால் குத்திப் புடைப்பார்கள். இச்செயல் எதுவரை நிகழவேண்டும் என்ற ஐயம் எவருக்கேனும் தோன்றுமா? உமியை நீக்கி, அரிசியைப் பெறும் வரை இச்செயல் நடைபெற வேண்டும். அழுக்

கடைந்த பாத்திரத்தைத் துலக்குகின்றோம். எத்தனை நிமிடங்கள் துலக்கவேண்டும் என்ற வரையறை உண்டோ? பாத்திரம் அழுக்கு நீங்கி, பளபளப்பாகும்வரை துலக்கியாக வேண்டும். அதுபோன்று அஞ்ஞானத்தின் கறை (Trace) அகலும் வரை சாதனையில் ஈடுபட வேண்டும். ஞான அப்பியாஸாத் விநிர்மலம் க்ருத்வா என்ற சொற்றொடரின் கருத்து இதுவே.

சாதாரணமாக மனிதர்கள் முயற்சி அதிகம் செய்யாது, மிகுந்த பலனை மட்டும் விரும்பு கின்றனர். Minimum work or no work, but maximum result-என்பதே இவர்கள் லட் சியம்! 'க்ஷிப்ரம் ஹி மானுஷே லோகே ஸித் திர்பவதி கர்மஜா-வையகத்தில் வினைப்பயன் விரைவில் வாய்க்கின்றது. எனவே தேவதை களை வழிபடுவதில், கர்மகாண்டத்தில் மனம் விரைவில் ஈடுபடுகின்றது' என்பது கீதையின் மொழி (4-12). ஆத்ம சாதகனின் மனப் பான்மை இதற்கு மாறானது. உபகதை ஒன்று இந்த மனப்பான்மையை விளக்குகின்றது. நாரதர் இறைவனைக் காணச் செல்லும்போது வழியில் இரண்டு முனிவர்கள் தவம் செய்து கொண்டிருந்தனர். இறைவனைக் கண்டு தங் களுக்கு எப்போது முக்தி கிட்டும் என்று அறிந்து வரவேண்டும் என்று இருவரும் நார தரை வேண்டினர். நாரதர் திரும்பி வந்தபின் ஒருவரைப் பார்த்துக் கூறினர்: "நீங்கள் முக்தி பெற இன்னும் மூன்று பிறவிகள் இருக்கின் றன." "ஐயோ! இன்னும் மூன்று பிறவிகளா?" என்று அவர் வியாகுலம் அடைந்தார். அடுத் தவரைக் கண்டு, "இங்கே இருக்கும் மரத்தில் எவ்வளவு இலைகள் இருக்கின்றனவோ, அவ் வளவு பிறவிகள் நீங்கள் எடுத்தபின் முக்தி கிட்டும் என்பது இறைவனின் திருவுள்ளம்" என்றார். இதைக் கேட்டதும், 'ஆகா, என்ன பாக்கியம் செய்தேன். எனக்கு என்றேனும் ஒருநாள் முக்தி நிச்சயம் கிடைக்கும் என்று இறைவனே திருஉள்ளம்கொண்டு இருக்கின் றார்' என்று அவர் ஆனந்தக் கூத்தாடினர். இறைவன் காட்சிகொடுத்து, "சரியான பக்குவ நிலையை உமது மனம் அடைந்துள்ளது. உமக்கு இக்கணமே முக்தி" என்று அருளினர்.

'முக்தோபிமானி முக்தோ ஹி, பத்தோ பத் தோபிமானி—தன்னை முக்தன் என்று எண்ணு பவன் முக்தனாகிறான்; தன்னைப் பாசத் தில் கட்டுண்டவன் என எண்ணுபவன் பந்தத்தில் திளைக்கின்றான்.' சாதகர்கள் அனைவரும் இக்கருத்தை நன்கு அறிந்து கொள்ள வேண்டும். தெய்விக நாட்டம் நம்மிடத்தே தோன்றியிருப்பதே ஈசுவரனின் பெரும் கருணையினால்தான். அவனுடைய அருள் நமக்குக் கிட்டியுள்ளது என்பதற்கு ஆன் மிக நாட்டமே சான்று. ஈஸ்வர அனுக்ரகாத் ஏவ பும்ஸாம் அத்வைத வாஸனா—ஈசுவரனது அனுக்கிரகத்தால் மட்டுமே ஜீவர்களுக்கு அத் வைதத்தில் விருப்பு ஏற்படுகின்றது. அத் தகைய அருள்நிலையை அடைந்தபின் வாளா விருக்கக் கூடாது. ஆத்ம சாதகர்களைக் காண் பதும் அரிதே. 'மனுஷ்யாணும் ஸஹஸ்ரேஷு கஸ்சித் யததி சித்தயே' - ஆயிரக்கணக்கான மனிதர்களுள் யாரோ ஒருவன் மனநிறைவின் பொருட்டு முயலுகிறான்– (கீதை 7-3). 'ஆச்சர் யோ வக்தா ஆச்சர்யோ ஞாதா குசலானு சிஷ்டா'—இந்தப் பெரும் உண்மையை எடுத் துரைக்கும் ஆசிரியரைக் காண்பது அரிது; அதனைக் கேட்க வேண்டும் என்ற நாட்டம் கொண்டுள்ள சீடனும் அரிதே, எனக் கடோப நிஷதம் குரு சிஷ்யனின் பெருமையை உரைக் கின்றது. இங்ஙனம் பாரமார்த்திக வாழ்வில் சாதனைக்குப் பெரிய இடம் தரப்பட்டுள் ளது.

'ஞானம் ஸ்வயம் நச்யேத்-ஞானம் தானும் அழிந்துவிடும்' என்ற கருத்தைச் சிறிது விளக்க வேண்டும். இந்தச் சுலோகத்தில் 'ஞானம்' என்ற சொல் 'அஞ்ஞானம்' என்பதற்கு மாறான பொருளில் வழங்கப்பட்டுள்ளது. 'நான் சரீ ரம்' என்ற எண்ணம் அஞ்ஞானம்; 'நான் ஆத்மா' என்ற எண்ணம் ஞானம். ஆயினும் இதுவும் ஓர் எண்ணமே, மனதின் தூய நிலையே ஆகும். மனம் லயம் அடைந்தால் மட் டும் போதாது. உண்மை சொருபத்தை மனோ நாசமே உணர்த்த இயலும். நல்லது, கெட் டது; பாவம், புண்ணியம் போன்ற இருமைகள் யாவும் அற்று எண்ணங்கள் எழாத 'நிர் விகல்ப' நிலையே ஆத்மஞானம் ஆகும். உலக அறிவு, ஆத்ம அறிவு என்ற அஞ்ஞானமோ, ஞானமோ அங்கே இல்லை. எனவே ஞானம்,

விருத்திமயமாக உள்ள எண்ணம்; அஃதும் அழிந்துவிடுகின்றது' என்று உரைக்கின்றார்.

இச்சுலோகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதேத் தாங்கொட்டை உதாரணம் அற்புதமானது. எளிய, இயற்கையான, நடைமுறையைச் சார்ந்த இத்தகைய உதாரணங்களை வேதாந்த ஆசாரியர்கள் பயன்படுத்துவதில் வல்லவர்கள். இத்தகைய ஞானிகள் உலக வாழ்க்கையுடன் இயைந்து இருப்பதை இவைஉணர்த்துகின்றன. அழுக்கை நீக்கக் காரணமாக அமைந்த பொருள், காரியம் முடிந்தவுடன் அஃதும் அழிகின்றது. ரசாயனச் சேர்க்கையில் இதனை Catalytic Agent, கிரியா ஊக்கி என்பது உண்டு. ரசாயனச் சேர்க்கையில் பங்கு எடுக்காது. ஆனல் அதன் வேகத்தை மட்டும் அதிகரித்து இறுதியில் மாற்றம் ஏதும் அடையாது இவை இருக்கும். அங்ஙனம் அல்லாது சேர்க்கையில் நேரடியாகப் பங்கு கொண்டு தீவிரப்படுத்தும் பொருள்களும் (active agents) உள்ளன. இங்ஙனம் தேத்தாங்கொட்டை நேரடியாகப் பங்குகொண்டு தன்னையும் அழித்துக்கொள்கின்றது. மலம் நிறைந்த ஜீவனை நிர்மலமாக்கும் ரசாயன சேர்க்கையில் ஞானம் நேரடியான பங்கை வகித்து, இறுதியில் தனது வடிவத்தையும் அழித்துக் கொள்கின்றது. அற்புதமான முறையில் இந்த உதாரணம் சிறந்த வேதாந்தக் கருத்தைத் தெரிவிக்கின்றது.

இதை அனுசரித்து வேறு ஒரு கருத்தையும் காணலாம். தியானம் செய்யும் போது எண்ணங்களின் வேகத்தை, மனச் சஞ்சலத்தைக் குறைக்க, ஒரு குறிப்பிட்ட சிந்தனையே மேலோங்கி இருக்கும்படி செய்கின்றோம். மந்திரம் ஒன்றை ஜபித்துக்கொண்டே இருப்பதின் மூலம் மனதில் ஒரே சிந்தனை மேலோங்கி இருக்கும்படி செய்யலாம். மனம் என்பது 'சங்கல்பங்கள்' நிறைந்தது. பல எண்ணங்களின் தொகையாக இருப்பதே மனது. 'ஒரே சிந்தனை' அதற்கு மாறான இயல்பு. எனவே அது தனது சொரூபத்தைத் துறக்கும். அதனால் 'மனோ நாசம்' சித்திக்கும். இங்கு ஒரு ஐயம் எழலாம். மனம் என்பது சிந்தனைகளின் தொகுப்பு. சிந்தனைகள் பலவாயினும் சரி, அல்லது சிந்தனை ஒன்றாயினும் சரி, அது மனதின் கூறுதானே. 'ஒரே சிந்தனை' என்பது 'மனமே'. மனதின் துணைகொண்டு மனதை எப்படி நாசமாக்குவது? வேதாந்தத்தில் இதற்கு அற்புதமான உதாரணம் தரப்படுகின்றது.

பிணம் ஒன்றை எரிப்பதற்கு ஒரு பெரிய கழி பயன்படுத்தப்படுகிறது. நெருப்பைக் கிளறும் போது அது அளவில் குறைந்துகொண்டே வரும். இறுதியில் அனைத்தும் எரிந்த பிறகு, அக்கழியும் அதே நெருப்பில் இடப்பட்டு எரியும். எதன் துணைகொண்டு நெருப்பைக் கிளறி வந்தனரோ, அதுவே இறுதியில் நெருப்பில் எரியும். இங்ஙனம் எந்த ஒரு சிந்தனையின் துணைகொண்டு எண்ணங்களைக் குறைக்க, மனதை நிலைநிறுத்தமுயற்சி செய்தோமோ, அதே சிந்தனையும் இறுதியில் தோன்றாதொழியும். 'மனோநாசம்' என்ற இந்நிலையைச் சொல்லால் விளக்கமுடியாது. தர்க்கத்திற்கு அப்பாற்பட்டதும், அனுபவத்தால்மட்டுமே அறியக்கூடியதும் ஆகிய நிலையை ஓரளவு சுட்டிக் காட்ட இத்தகைய உதாரணங்கள் பயன்படுகின்றன. 'பிணம் சுடு கழிபோல்' என்று வேதாந்திகள் இதனைக் குறிப்பர். உதாரணத்தால் தத்துவம் நிலைநாட்டப்பெறுவது இல்லை. சித்தாந்தத்தைப் பரமஹம்சர்களின் வாழ்க்கை நெறியும், அனுபவ வாக்கியமும், ஓரளவு உணர்த்துகின்றன. ஆதலின் இதில் ஒருவரது அனுபவமே கடைசிச்சொல்லாகும். அத்தகைய அனுபவம்கிட்டும் வரை ஸ்தூல, சூக்ஷ்ம சந்தேகங்கள் தோன்றியவாறு இருக்கலாம். அதைக் குறைநிலை என எண்ணித் தடுமாறவோ, மனம் தளரவோ கூடாது. 'பித்யதே ஹ்ருதய க்ரந்தி: சித்யந்தே சர்வ சம்சயா:—இதயத்தில் உள்ள முடிச்சுகள் தளர்கின்றன; எல்லாச் சந்தேகங்களும் அகன்றுவிடுகின்றன" என்ற நிலை 'தஸ்மின் த்ருஷ்டே பராவரே-அந்தப் பெரிய பொருளைப் பார்த்தபின்' என்று உபநிஷதம் உரைக்கிறது. எனவே ஐயங்களால் மனம் அலைக்கழிக்கப்படாது, தியானப்பயிற்சியைத் தொடரவேண்டும்.

16—1—82 சனிக்கிழமையன்று ஸ்ரீ விவேகானந்தர் ஜன்ம தினமாகும்.

சமூக நலன்

(சுவாமி ஸதானந்தர்)

சுகாதாரம்

சுகமான வாழ்வுக்கு எது ஆதாரமோ அது சுகாதாரம். சரீர சுத்தம், ஆகார சுத்தம், சூழ்நிலைச் சுத்தம், குடிநீர் சுத்தம், பொது இடங்கள் சுத்தம், வாய்க்கால் குளம் சுத்தம், மனச் சுத்தம், பேச்சுச் சுத்தம், செயல் சுத்தம் என்று சுகாதாரம் பலவடிவங்களை எடுக்கிறது. இதைப் புறச்சுத்தம், அகச்சுத்தம் என்று இரு பெரும்பிரிவுகளாகப் பகர்வார்கள். முதலில் புறச்சுத்தம் அமையவேண்டும். அதன் தொடர்ச்சியாக அகச்சுத்தம் தானே அமையும். புறச்சுத்தத்தைச் சுகாதாரம் என்றும் அகச்சுத்தத்தைச் சமய அனுஷ்டானம் என்றும் சொல்கிறோம்.

சுத்தம் சோறுபோடும், 'Cleanliness is next to Godliness' கூழானாலும் குளித்துக்குடி, கந்தையானாலும் கசக்கிக்கட்டு, என்கிற பழமொழிகள் எல்லாம் நாம் சுத்தமாக இருக்கப் போதிக்கின்றன. நமது ஆரோக்கியமான நல்வாழ்வுக்குச் சுகாதாரம் மிகவும் அவசியம். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். ஆரோக்கியமானவன்தான் அறிவு ஆற்றலில் மேன்மை அடைய முடியும். அறிவு ஆற்றலிலிருந்து எல்லாக் கலைஞானங்களும், தொழில், பொருளாதாரம், வியாபாரம் முதலிய துறைகளும் தோன்றவும் வளரவும் நன்மை செய்யவும் முடியும். தனி மனிதனின் சௌபாக்கியத்திற்கும் தேச சுபிக்ஷத்துக்கும் அடிப்படைக் காரணமாய் ஆதாரமாய்ச் சுகாதாரம் அமைகிறது.

விலங்குகளில் பூனை தன்னை மிகவும் சுத்தமாக எப்போதும் வைத்துக்கொள்ளும். தன் சரீரத்தை அது நக்கிச் சுத்தம் பண்ணிக்கொள்ளும். நாய் படுப்பது மண்தரை ஆனாலும் அது வாலால் கூட்டுவது போன்று செய்துவிட்டுப் படுக்கிறது. பறவைகள் தண்ணீரில் வீழ்ந்து இறக்கையை அசைத்து, நாம் மூக்கைப் பிடித்துக்கொண்டு தண்ணீரில் மூழ்கி எழுந்து குளிப்பதுபோன்று செய்து, தன்னைச் சுத்தி பண்ணிகொண்டு, தெளிவும் சுறுசுறுப்பும் பெறுகின்றன. தேனீ சுத்தமே வடிவெடுத்தது. அது மலம்கூடக் கழிப்பது இல்லை. அதன் ஆகாரம் அவ்வளவு தூயது, முழுவதும் ரத்தமயம் ஆகிவிடுகிறது. தண்ணீரில் மீன் எவ்வளவு சுத்தமாய்ச் சஞ்சரிக்கிறது பாருங்கள். பசுமாடுகளையும் காளைமாடுகளையும் குளிப்பாட்டிப்பாருங்கள். காமதேனு என்றும், லக்ஷ்மி தேவி என்றும், நந்திவாகனன் என்றும் கையெடுத்துக் கும்பிடத் தோன்றுகிறது. மழை பெய்ததும் மரம் செடி கொடிகளைப் பாருங்கள். அவைகள் சுத்தமாகக் குளித்து, மடி உடுத்தி, மகிழ்ச்சியோடு, செழிப்பாகக் கடவுள் வழிபாட்டுக்குத் தயாராக இருப்பது போன்று தோன்றுகின்றன. ஆகாயம், தீ இரண்டையும் அழுக்குப்படுத்தவே முடியாது. காற்று, ஜலம், மண் மூன்றும் அவற்றில் கலக்கப்படுகிற அழுக்கை ஜீரணம் பண்ணி எப்போதும் சுத்தமாகவே இருந்துவருகின்றன. சுத்தத்தில் ஒரு தெய்விகம், அழகு தென்படுகிறது. இயற்கை முழுவதும் சுத்தமாய், தூய்மையாய், தெய்விகமாய், சுந்தரமாய் விளங்குகிறது. சுத்தம் தெய்வாம்சங்களில் ஒன்று.

எருமையும் பன்றியும் நமக்கு அழுக்குப் பிராணிகள் போன்று தோன்றலாம். அவைகளின் படைப்பு அத்தகையது. மனிதனது மலம் பன்றிக்கு உணவாகிறது. பன்றியின் மலம் செடிக்கு உரமாகிறது. தாவரங்கள் வெளிவிடும் காற்று நமக்குச் சுவாசிப்பதற்கு வேண்டிய பிராணவாயு ஆகிறது. இது இயற்கையின் அமைப்பு. சமநிலையைக் காப்பதற்காக அமைந்த சிருஷ்டியின் விசித்திரம் இது. அம்முறையில் அழுக்கு என்று ஒன்றையுமே சொல்லமுடியாது. சாணத்தில் புழு தோன்றுகிறது; சாக்கடையில் கொசு உற்பத்தியாகிறது; வியர்வையில் மூட்டைப்பூச்சி உற்பத்தியாகிறது. அவைகளின் பிறப்பிடங்கள் நமது காட்சியில் மிகவும் சுகாதாரமற்றவை. ஆனால் புழு, கொசு, மூட்டைப்பூச்சி ஆகியவற்றிற்கு அவைகள் பிறப்பிடம். அவைகளின் தோற்றம், ஜீவிதம் அங்ஙனம் அமைக்கப்பட்டுள்ளன. அதே போன்று மானுட ஜீவிதத்துக்கு இவ்வுலக உயிர்வகைகளிலேயே மிகவும் சுத்தம், சுகாதாரம் அதிகம் வேண்டியதாக இருக்கிறது. மானுடர் அகத்தையும், புறத்தை

யும் சுத்தமாய் வைத்திருந்து பழகவேண்டும்.

இந்தியாவுக்கு வந்த அமெரிக்கர் ஒருவர்"உங்கள் தேசம் **Dirty, poverty, and ignorance** அழுக்கு–வறுமை–அறியாமை நிறைந்தது. ஆனால் எங்கள் நாட்டில் கோடீஸ்வரனிடமும் காணமுடியாத திருப்தி உங்கள் ஊர் எளிய கூலிக்காரனிடமும் தென்படுவது பெரியஆச்சரியம்''என்று சொன்னார்.மற்றொரு வெளிநாட்டுக்காரர் "உங்கள் ஊரில் இவ்வளவு மழையும், வெய்யிலும் இல்லாவிட்டால் உங்கள் சுகாதாரக் குறைவான பழக்கவழக்கங்களினாலேயே நீங்கள் மடிந்துபோவீர்கள்'' என்று சொன்னார். எத்தகைய காட்சிகளைப் பார்த்துவிட்டு அவர்கள் இங்ஙனம் சொல்கிறார்கள் என்று பார்ப்போம்: (1) நமது தெருக்களில் வீட்டின் முன்புறமே மலஜலம் கழித்தல், சாக்கடை ஓடுதல், எச்சில் இலை,குப்பைக் கூளங்களைப் போடுதல். (2) இதோ பஸ்ஸில் உள்ளேயே மூக்கைச் சிந்திப் போடுகிறான். கையையும் ஜன்னலில் தடவுகிறான். இப்பழக்கத்தை அவன் எங்குப் பழகினானோ! சகப் பிரயாணிகளோ, பஸ் டிரைவரோ கண்டக்டரோ ஒன்றுமே சொல்வதில்லை. பிளாட்பாரத்தில் ரத்தம் படிந்து இருப்பதுபோன்று வெற்றிலை எச்சில் துப்பி இருக்கிறது. எங்கும் பழத்தோலும் கடலைத் தோலும், பீடித்துண்டும், சிகரட்துண்டும் சிதறிக்கிடக்கின்றன. ஆங்கு ஈ மொய்த்துக் கொண்டு இருப்பதையும், துர்நாற்றம் வீசுவதையும் சகித்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. ஆ! இந்தியர்கள் என்ன முன்னேற்றம் அடைந்துள்ளார்கள் பாருங்கள். நகரசபை, பஞ்சாயத்து வருமானங்கள் யாவும் சம்பளம், லஞ்சம் இரண்டிற்குமே போதவில்லை. பிறகு எப்படிச் சுகாதாரக் காரியம் பார்க்கமுடியும்? இன்றுள்ள கொள்கைகளின்படி வேலை வேறு சரியாகச் செய்வதில்லை. (3) இன்னொரு அரிய காட்சியைப் பாருங்கள். பல இடங்களில் சாலை ஓரங்களில் தண்ணீர் ஆங்காங்குத் தேங்கிக் குட்டையாய் நிற்கிறது. அது எத்தனை நாள் தேக்கமோ? குச்சிகள் மிதக்கின்றன, தழைகள் அழுகி மிதக்கின்றன. தண்ணீர் கஷாயம் போல் கறுப்பாய் அல்லது பச்சையாய் இருக்கிறது.அதில் துணிதுவைத்துக் குளிக்கிறார்கள் பாருங்கள்.விலங்கிற்கும் அவர்களுக்கும் என்ன வித்தியாசம்! அழுக்கை உணருகிற தன்மை கூட இன்னும் வரவில்லை.

செல்வர்களே! கல்யாண மண்டபம், புதிது புதிதாக ஆலயம் கட்டுகிறீர்கள். இந்தக் கோணத்தில் சிறிது சிந்தியுங்கள். ஊர் மக்கள் மலஜலம் கழிக்க நல்ல சுகாதாரமான கழிவு அறைகள், குளியல் அறைகள் கட்டி விடுங்கள். கட்டணங்கள் வாங்கினாலும் பாதகமில்லை. மக்களின் சுகாதாரவாழ்வுக்கு வழி செய்யுங்கள். வித்யாவனப் பழைய மாணவர்களுக்கு ஆண்டுதோறும் இக்கருத்துத் தரப்படுகிறது. ஏதாவது பொதுத்தொண்டுசெய்யுங்கள் எனப் புகட்டப்படுகிறது. அரசாங்கத்தை எதிர்பார்த்தால் காரியம் நடக்காது.அவரவர்களே தங்கள் நல்வாழ்வுக்கு வழிதேட வேண்டும். செல்வர்கள் இதில் முக்கியமாகக் கருத்துச் செலுத்த வேண்டும். கோடி கோடியாக வரி செலுத்தும் தொகையில் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டே பணத்தை ஒதுக்கி நல்ல இடத்தில் நகரத்தின் மத்தியில் உள்ள குடிசைகளை நல்ல ஓட்டு வீடுகளாக மாற்றலாம். சில வருஷங்களில் ஒரு பெரிய நகரத்தையே சுகாதாரம் மிக்கது ஆக்கி விடலாம். அரசினால் ஒரு நல்ல காரியமும் பண்ணமுடியாது. சிலர் நல்லவர்களாகவும், நல்ல எண்ணம் வாய்ந்தவர்களாகவும் இருக்கிறார்கள். அவர்கள் செயல்பட மற்றவர்கள் விடமாட்டார்கள். மொத்தத்தில் அரசியல் புரையோடிப் போய் நல்ல காரியத்துக்கு உதவாததாகப் போய்விட்டது. அதைப் பொருட்படுத்தாமல் தங்களுக்குத் தாங்களே நல்ல திட்டமிட்டுச் சமூக நலன்களை மக்களே செய்துகொள்ளவேண்டும். புறச் சுத்தம் படிப்படியாக வளர்ந்து நல்ல ஆரோக்கியம், நல்ல அறிவு, ஆற்றல் பெருகட்டும். அவற்றின் மூலம் ஆக்கமான செயல்களும் விருத்தியாகட்டும். இங்ஙனம் தேசம் சுபிக்ஷமடையட்டும். அதற்கு மேல் அது அகச் சுத்தமும் அடையத் தகுதியுடையதாகும்.

உணவுப் பொருள்களில் கலப்படம் பண்ணுதல், தொழிற்சாலைகளின் புகை காற்றில் கலத்தல், கழிவு நீர் ஜலத்தில் கலத்தல், பூச்சி மருந்து அடித்தல், நாகரிகம் என்கிற பெயரில் வந்துள்ள வாசனைத் திரவியங்கள், மதுவகைகள், சினிமாக்கள், பத்திரிகைகள்,

உடை உடுத்தும் பழக்கங்கள், தலைமுடிக் கோலங்கள், அரசாங்கச் செயல்கள், அல்பமத வாதிகளின் கோஷங்கள், தொழிற்சங்கங்கள், யூனியன்கள் ஆகிய இவைகள் எல்லாம் நமது சமூகத்தின் புறச் சுத்தத்தையும் அகச் சுத்தத் தையும் கெடுத்து வருகின்றன. விஞ்ஞானம் என்கிற பெயரில் நிலைபெற்றுவிட்ட தீமைகள் அதிகம். இவற்றிற்கெல்லாம் மிக நல்ல ஆட்சி ஏற்படுவது பரிகாரமாகும்.

நித்திய வாழ்க்கையில் நல்ல பழக்க வழக் கங்கள் இருந்தால்தான் வாழ்வு ஆரோக்கிய மாக இருக்கும். வைகறையில் எழுந்திருத்தல், மலம் கழித்து, பல்துலக்கி, குளித்தல், பிரார்த் தனை செய்தல், அன்றாடம் நன்கு துவைத்த துணி உடுத்தல், அளவுடன் உண்ணுதல், கடமைகளை நன்றாகச் செய்தல், எப்போதும் சாந்தமாக-அமைதியாக இருத்தல், இத்யாதி பழக்க வழக்கங்கள் மனதையும் உடலையும் சுத்தமாக வைத்திருக்கும்; சிந்தனை அறிவைத் தெளிவாக வைத்திருக்கும். ஆகையால் நம் பழக்க வழக்கங்களில் நாம் கருத்துடையவராய் இருக்கவேண்டும். பழக்கத்துக்கு மனிதன் அடிமை என்பார்கள். நாம் நல்ல பழக்கங் களுக்கு அடிமையாய் இருக்க வேண்டும். அதில் எல்லா நலன்களும் தெய்விகமும் உண்டு. இந்த உடல் சம்பந்தமான யாவும் (உணவு, உடை, பழக்கம், புலன் இன்பம் ஆகியவைகள்) அடக்கமாக, எளிமையாக, தூயதாக, சுகாதாரமானதாக, தெய்விகமாக இருந்தால் அன்றி அந்தக்கரண சுத்தியை அப்ய சிக்க முடியாது. உடலும், மனமும் ஒன்றை ஒன்று சார்ந்தவை. நாம் உண்கின்ற உண வைக் காட்டிலும் மனது கொள்கிற உணர்ச்சி நமது ஆரோக்கியத்தை மிகவும் பாதுகாக்கின் றது, வளர்க்கின்றது. தீய குணங்கள் உடல் ஆரோக்கியத்தைக் கெடுக்கின்றன. ஆரோக் கியமான வாழ்வுக்கு அகச்சுத்தம் அவசியம். அகம் புறம் என்று பிரிக்கமுடியாது இரண்டும் ஒன்றை ஒன்று சார்ந்திருக்கின்றன.

மனத்துக்கண் மாசு இலன் ஆதல் அனைத்து அறன் என்பது மறைமொழி. ஆணவம், மாயை, கர்மம் இம்மூன்றையும் மும்மலம் என் பார்கள். பொறாமையை அழுக்காறு என்பார் கள். பேராசை பெருநஷ்டம். பயம், சோகம், மோகம், மயக்கம் இவைகளைக் கசுமலம் என் பார்கள். முக்குணங்களைத் திருடர்கள் என வர்ணிப்பார்கள். கோபத்தை வெறி அல்லது தாற்காலிகமான பைத்தியம் என்பார்கள், சுயநலக்காரன், ஆணவம் பிடித்த அரக்கன், நயவஞ்சகன், துரோகி, பஞ்சமகாபாதகன், காமநோய் பிடித்தவன் என்றெல்லாம் சொல் வார்கள். இவைகள் எல்லாம் மனமாசுகள் அல்லது மனதைப் பீடித்துள்ள அழுக்குகள் ஆகும். இவைகளின் கொடுமையைத் தணிக்க இயற்கையிலேயே வழி இருக்கிறது. தீயைத் தொட்டால் சுடுவதுபோன்றும், மிளகாயைக் கடித்தால் நாக்கு எரிவதுபோன்றும், தீயவினை யின் பயன் துன்பத்தைத் தந்தே தீரும். இத் தீயகுணங்களால் மனிதன் சீரழிந்து படாத பாடுபட்டுப் பின் அவன் தானே நல்வழிக்கு வருகிறான். ஆனால் பிறர்படும் துன்பங்களி லும் பாடம் கற்பவன் அறிவுடையவன் ஆகி றான். லௌகிகமான விஷயங்களில் பிறர் அனுபவங்களை நமக்கு நன்கு பயன்படுத்த முடி கிறது. ஆனால் அந்தக்கரண சுத்திக்கு ஆரம்ப தசையில் உபதேசமோ பிறர் அனுபவமோ பயன்படுவதில்லை. துன்பதுயரங்களே, அத னதன் பயன்களே, நல்வழிக்குக் கொண்டு வரு கின்றன. இயற்கை நிகழ்ச்சிகளிலிருந்தும், வாழ் வின் அனுபவங்களிலிருந்தும் கடவுள், பிரபஞ் சம், ஜீவன் மூன்றைப்பற்றிய உண்மைகளைக் கண்டறிந்தார்கள். இந்த உண்மைகளைச் சரி பார்ப்பதற்கும், நமக்கு நாமே கண்டுகொள்வ தற்கும் இன்றும் என்றும் இந்த உலகமும் அதன் இயக்கமும், ஜீவிதமும் இருந்து கொண்டே இருக்கின்றன. மதத்தை விஞ்ஞான ரீதியாக நிரூபித்தல் என்று நவீனமக்கள்சொல் கின்றனர். மதம் என்பது கற்பனை அன்று. அது இயற்கை புகட்டியபாடமே ஆகும். ஆகை யால் மானுடர் உயர்குணங்கள் வாய்ந்தவர் ஆதல் வேண்டும். சிருஷ்டியில் உள்ள எல்லா உயிர்வகைகளையும்விட அவன் குணத்தால் உயர்ந்தவன். சரீர வளர்ச்சியோடு மனமும் வளர்ச்சி அடையவேண்டும். அத்தகைய வளர்ச்சி பெற்றவன்தான் வாஸ்தவமான மனி தன். மனிதனை உயர்த்துவதற்கு முதலில் புறச்சுத்தமும் அதைத் தொடர்ந்து அகச்சுத்த மும் அமையவேண்டும்.

விவேகானந்தரைப் பற்றித் தெரியுமா?

வலிவு படைத்தவன் வாழ்வுக்குரியவன் என்பது கோட்பாடு. மானுட அமைப்பில் உடல், உள்ளம் ஆகிய இரண்டும் வலிவு படைத்தனவாக இருக்கவேண்டும். நிறைமனிதனுடைய உடல், திட்பம் வாய்ந்ததாக இருப்பதோடு அதற்கு உண்டான இலக்கணங்களையும் பெற்றிருக்கவேண்டும். அமெரிக்கப்பேராசிரியர் ஒருவர் நிறைமனிதனுக்கு இருக்கவேண்டிய உடல் அமைப்பு, எடை, உயரம் ஆகியவைகளைப்பற்றிப் புள்ளி விவரங்களுடன் தெரிவித்திருக்கின்றார். உடல் அமைப்பிலே அப் புள்ளிவிவரங்கள் அனைத்தும் பொருந்தியவர் யார்? உடல் உறுப்பு ஒவ்வொன்றும் கவர்ச்சியுடையதாக விளங்கி அனைவரையும் தம்பால் கவர்ந்து இழுத்த ஆண்மகனார் யார்? அவர் தாம் 1863ஆம் ஆண்டில் கல்கத்தா நகரில் விசுவநாத தத்தருக்கும், புவனேசுவரி மாதாவுக்கும் புத்திரனாகத் தோன்றிய சுவாமி விவேகானந்தராவார்.

கல்கத்தாவுக்கு வடக்கே நான்குமைல் தூரத்தில் கங்கைக்கரையோரத்தில் தக்ஷிணேசுவர ஆலயம் அமைந்துள்ளது. அவ்வாலயத்தின் ஓர் அறையின் ஸ்ரீ ராமகிருஷ்ணர் அமர்ந்திருந்தார். அவ்வறையின் மேற்குவாயில் கங்கையைப் பார்த்து அமைந்திருக்கிறது. அவ்வாயிலின்வழியாக உடலை மறந்து உள்முக நாட்டமுடையவராக ஓர் இளைஞன் நுழைந்தார். புறவுலகக் கவர்ச்சிக்கு அவர் சிறிதும் வசப்படாதவராகத் தோன்றினார். தூய்மையும் தெய்விகமும் அவரிடம் திகழ்ந்துகொண்டிருந்தன. அவரைப் பார்த்து ஸ்ரீ ராமகிருஷ்ணர் "மருள் சூழ்ந்த இக் கல்கத்தா நகரிலே அருள்நிறைந்த இவ் விளைஞனும் வாழ்கின்றானா!" என்று வியப்படைந்தார். அவர் யார் தெரியுமா? அவர்தாம் சுவாமி விவேகானந்தர்.

"குழந்தாய், என்னிடம் வருவதற்கு உனக்கு ஏன் இவ்வளவு தாமதம்? உனக்காக நான் எவ்வளவு நாட்கள் காத்துக்கொண்டிருந்தேன் என்பது உனக்குத் தெரியாதா? கீழான உலக விஷயங்களில் உழன்று கிடக்கும் மக்களுடைய பேச்சைக் கேட்டு என் காதுகள் உலர்ந்துபோயின. என் உள்ளம் எத்தகைய உணர்வுகொண்டிருக்கிறது என்பதை யாரும் அறியார். உன்னைப் பார்க்கும்பொழுது என் உள்ளம் பரமானந்தம் அடைகிறது. நீ ஒரு தெய்விக புருஷன். ஆகையால் உன்னைக் கையெடுத்துக் கும்பிடுகின்றேன். நீ யாரென்பதை நான் அறிகின்றேன். நீ நரனாக வந்தரிஷி ஆவாய். நீ இப்பொழுது உலக மக்களுடைய துயரங்களையும், துன்பங்களையும் போக்குவதற்காக இவ்வுலகுக்கு வந்திருக்கின்றாய்." இங்ஙனம் ஸ்ரீ ராமகிருஷ்ணர் கூறியவண்ணம் ஓர் இளைஞனின் கைகளைப் பிடித்துக்கொண்டு ஆனந்தக் கண்ணீர் பெருக்கினார். ஸ்ரீ ராமகிருஷ்ணரின் உள்ளத்தை ஈர்த்த அவ்விளைஞன் யார்? அவர்தாம் சுவாமி விவேகானந்தர்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஓர் இளைஞனின் நெஞ்சின் மீது வலக் கையை வைத்தார். அப்பொழுது அவ்விளைஞன் பரவச நிலையடைந்தவராக உரக்கப் பகர்ந்ததாவது: "ஐயன்மீர், என்னை என்ன செய்கின்றீர்? எனக்கும் பெற்றோர்கள் இருக்கிறார்கள். உங்களுக்கு அது தெரியாதா? எனக்கு இவ்வுலக ஞாபகம் மறைந்துகொண்டிருக்கிறது. இவ்வறையிலுள்ள பொருள்களெல்லாம் சுழன்றுகொண்டிருக்கின்றன. நான் இவ்வுலகைவிட்டு ஓர் உயர் நிலைக்குப் போவதாக உணர்கிறேன்." இதைக் கேட்ட ஸ்ரீ ராமகிருஷ்ணர் அவ்விளைஞனின் நெஞ்சின்மீது கையை வைத்து அவ்விளைஞனுக்குப் பழைய நிலையை உண்டுபண்ணினார். அவ்விளைஞன் யார்? அவர்தாம் சுவாமி விவேகானந்தர்.

உள்ளத்தில் உள்ளதை ஒளித்துவைக்காது பேசும் ஓர் உத்தமர் இருந்தார். கடவுள் இல்லை என்று அவர் ஆணித்தரமாகப் பேசினார். அவரை நாஸ்திகர் என்றே உலகம் நினைத்தது. அவரைப்பற்றி ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய பக்தர்கள் ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் குறையாகக் கூறினார்கள். ஸ்ரீ ராமகிருஷ்ணர் பக்தர்களிடம் பகர்ந்ததாவது: "நீங்கள் கூறும் இளைஞனைப்பற்றி அன்னை பராசக்தி என்னிடம் பகர்ந்திருக்கின்றாள். நீங்கள் கூறுவது போன்று அவ்விளைஞன் கண்டிக்கத்தக்கவ

ரல்லர். இனி யாராவது அவரைப்பற்றிக் குறைகூறுவீர்களானால் உங்கள் முகத்தைக் கூட நான் பார்க்கமாட்டேன்." இங்ஙனம் ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய அன்புக்கும் போற்றுதலுக்கும் பாத்திரமான இளைஞன் யார்? அவர் தாம் சுவாமி விவேகானந்தர்.

வாழ்வில் சுகதுக்கங்கள் மாறிமாறி வந்து கொண்டே இருக்கும். சுகத்தில் மூழ்கிப் போகாதும், துக்கத்தில் அழுந்திப் போகாதும் மனதை நடுநிலையில் வைக்கத் தெரிந்துகொண்டவன் வாழ்வில் வெற்றி அடைகின்றான். வாழ்வாவது மாயம்; இது மண்ணாவது திண்ணம் என்ற கோட்பாடு புத்தியளவுக்கு விளங்கினால் போதாது. இக்கோட்பாட்டைச் செயல் படுத்துவதற்கு வேண்டிய உள்ளத்திட்பம் வேண்டும். வாழ்வில் ராஜபோகத்துக்கு நிகரான வசதிகள் வந்து அமையலாம். அவற்றில் மனம் அளவுகடந்த மகிழ்ச்சியையோ, போகத்தையோ பெறக்கூடாது. மலைபோன்ற பெரும் துன்பங்கள் வாழ்க்கையில் வந்து அமையலாம். அவற்றைக் குறித்துத் துயரமோ, சஞ்சலமோ, தளர்ச்சியோ, அடையக்கூடாது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் கல்கத்தாவில் வாழ்ந்த சிறுவன் ஒருவன்வாழ்க்கையில் ராஜபோகமும்,மலை போன்ற துன்பமும் வந்ததைச் சமாளித்தான். சிறுவனின் தந்தையார் ஏராளமான பொருள் ஈட்டினார். குடும்பத்தில் ராஜபோகத்துக்கு நிகரான வசதிகளை அமைத்து வைத்திருந்தார். திடீரென்று தந்தை காலமானதும் குடும்பம் வறுமைக்கு உள்ளானது. வேளா வேளைக்குக் குடும்பத்துக்கு வேண்டிய உணவுக்கே சிரமப் படவேண்டியிருந்தது. இந்த நிலையில் குடியிருக்கும் வீட்டை உறவினர்கள் தங்களுக்குச் சொந்தமென்று நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்தார்கள். ராஜபோகத்தில் இருந்த சிறுவன் இந்தக் கஷ்டங்களை எல்லாம் சமாளிக்க வேண்டி இருந்தது. மனம் தளர்ச்சி அடையாது இவற்றை எல்லாம் சமாளித்தபெருமகனார் யார்? அவர்தாம் சுவாமி விவேகானந்தர்.

எனக்கு உத்தியோகம் கிடைக்குமா? நான் எப்படிச் சம்பாதிப்பேன்? நான் என்னென்ன சுகங்களை அனுபவிக்க முடியும்? நான் என்னென்ன பதவிகளைப் பெறமுடியும்? இத்தகைய சிந்தனைகளைச் செய்து கொண்டிருப்பவர்கள் எண்ணில்லாத மக்களாவார்கள். "குடும்பம் வறுமையுற்று இருக்கிறது; குடும்பத்தைப் பாதுகாப்பது குடும்பத்துக்கு மூத்தவனாகிய என் கடமையாகும். ஆனால் அதை விட உலகுக்குப் பயன்படும் பொருட்டு என்னை ஒரு பெரியார் உலக வாழ்வைத்துறந்து வெளியேற வேண்டும் என்று என் உள்ளத்தைத் தூண்டுகிறார். குடும்ப நலத்தின் பொருட்டு உலகுக்கு உதவும் பெரிய பொறுப்பை ஒதுக்கி வைப்பதா? பொது நலத்தின் பொருட்டு உற்றாரைப் பரிபாலிக்கும் பொறுப்பைப் புறக்கணிப்பதா?" என்ற ஐயத்துடன் தாயாரை அணுகி உள்ளக்கிடக்கையை ஓர் இளைஞன் வெளியிட்டார். தாயார், "மகனே, உனக்கு எது மேலானது என்று தோன்றுகிறதோ நீ அதை மேற்கொள்வாயாக. என் பொருட்டும், உடன் பிறந்தார் பொருட்டும் நீ உள்ளம் குழைய வேண்டாம். உன் சகோதர சகோதரிகளை நல்ல முறையில் வளர்த்து மேல் நிலைக்குக் கொண்டுவரும் திறமையும், உறுதியும் எனக்கு உண்டு. உலகத்துக்கு உதவவேண்டும் என்று உன் உள்ளம் உண்மையிலேயே விரும்புமாயின் நீ அதனை மேற்கொள்வதற்கு நான் முழுமனதுடன் ஆசீர்வதிக்கின்றேன்" என்று எடுத்து இயம்பினார். தாய் சொல் மிக்க வாசகமில்லை. எனவே தாயாரின் ஆசியை இறைவனின் அனுக்கிரகமாகக் கொண்டு உலகைத் துறந்து உலக நன்மையின் பொருட்டு உலகத்துக்குப் பரஞானத்தைப் புகட்டிய பெருமகனார் யார்? அவர்தாம் சுவாமி விவேகானந்தர்.

மக்களுக்குச் சேவைபுரிகிறேன் என்று மார் தட்டிப் பேசிவிட்டு மக்களைச் சுரண்டும் செயலில் ஈடுபடும் மக்கள் அபிமானிகளைத்தாம் இப்பொழுது நாம் காண்கின்றோம். நெஞ்சில் உரமுமின்றி, நேர்மை சிறிதுமின்றி வாழும் வஞ்சகர்களைத் தியாகிகள் என்று சொல்லுகின்றோம். கையில் காசு எதையும் தொடாது, உணவைத் தேடிப் போகாது, தம்மைத் தேடிவந்த உணவை ஏற்று நாட்டு மக்கள் வாழ்க்கையை நேரில் சென்று பார்த்து அறிந்த ஒருமகான் இருந்தார். பணக்காரன், ஏழை, அரசன், கூலியாள், பண்டிதன், பாமரன் ஆகிய எல்லா நிலைகளிலும் உள்ள மக்களை நேரில் சென்று பார்த்து இறுதியில் கன்னியாகுமரியை அடைந்து ஆங்

குள்ள பாறையில் அமர்ந்து இந்தியாவின் நிலையை மனக்கண்முன் கொண்டு வந்து, இந்தியாவின் வறுமையைப் போக்க யாது செய்ய வேண்டும் என்று தியானம் செய்தார். அத் தியானத்தில் மேனுட்டின் பொருள் செல்வம் இந்தியாவுக்கும் அதற்குப் பதில் இந்தியாவின் ஆன்மிகச் செல்வம் மேனுட்டுக்கும் செல்ல வேண்டும் என்ற கருத்து உதயமாயிற்று. தெய்வாதீனமாக அவருடைய கருத்து நிறைவேறும் காலம் வந்தது. உலகச் சர்வமத மகாசபை ஒன்று அமெரிக்காவின் தலைநகரமாகிய சிகாகோவில் நடந்தது. அந்நிகழ்ச்சியைப் பயன்படுத்தி இந்தியாவின் ஆன்மிகச் செல்வத்தை ஆன்மிகநிலையில் ஏழைகளாக இருந்த மேனுட்டவர்களுக்கு வாரி வழங்கினர். அதற்குப் பதிலாக மேனுட்டவர்கள் இந்தியாவுக்குப் பொருள் வழங்கக் கடமைப்பட்டவர்களானுர்கள். பண்டமாற்று முறையில் இந்தியாவின் பொருளாதார வறுமையையும், மேனுட்டவர்களின் ஆத்ம ஞான வறுமையையும் போக்கி உலக க்ஷேமத்துக்குப் பாடுபட்ட உத்தமன் யார்? அவர்தாம் சுவாமி விவேகானந்தர்.

காமமும், காசு ஆசையும் உலகத்தைப் பீடித்துள்ள நோய்களாகும். காமத்தையும், காசு ஆசையையும் வளர்ப்பதையும், உடலை வாட்டுவதையும், தவநெறி என்று கொண்டு ஒழுகும் உலகத்தவர்களுக்கு உண்மைத் தவநெறியைக் காட்டுவது அவசியமாயிற்று. காமத்தையும், காசு ஆசையையும் துடைத்து எறிந்துவிட்டு, உலக நலத்தில் சிந்தனையைச் செலுத்தியவராக இருந்தார் ஒருவர். இன்னும் சில சமயங்களில் பாரமார்த்திகப் பெருநிலையில் கருவிகரணங்களை ஒடுக்கி இருந்தார். ஸ்ரீ ராமகிருஷ்ணபரமஹம்சருடைய சிஷ்யராக அவர் திருவடியில் அமர்ந்துகொண்டு, அவர்தம் தெய்விகப்பெற்றியில் திளைத்திருக்கும் தவத்தில் இருந்தார் ஒருவர். வீண்கர்வம், சினம், விருப்பு, வெறுப்பு ஆகிய இவைகளை எல்லாம் உள்ளத்திலிருந்து அகற்றி உலக நலனிலும், தெய்வச் சிந்தனையிலும் திளைத்திருப்பதே தவமாகும் என்று உலகத்துக்குப் புகட்டிய தவராஜன் யார்? அவர்தாம் சுவாமி விவேகானந்தர்.

'என் தலைவிதி இப்படி ஆய்விட்டதே' என்று விதியை நொந்துகொண்டு வினைக்கு வசப்பட்டிருக்கின்ற மக்களைத்தாம் உலகில் காண்கின்றேரும். இப்பேர்ப்பட்டவர்கள் ரோகிகளாகவோ, போகிகளாகவோ உலகத்தில் வாழ்ந்து வருகிருர்கள். தியானத்தை விளையாட்டாகச் செய்து மனதை உள்முகமாகத் திருப்பி ஆத்மானந்தத்தில் லயித்திருக்கும் இயல்பை உடையவன் யோகி ஆகின்றுன். யோகி ஒருவன் தூங்குகின்ற தூக்கம் யோக நித்திரை அல்லது அறிதுயில் எனப் பகரப்படுகிறது. தெளிந்த அறிவு அல்லது உணர்வோடு கூடிய உறக்கம் என அதுபொருள்படுகிறது. ஜோதிமயமான கோளத்துக்குள் பரமானந்தத்துடன் இருப்பது யோக நித்திரையாகும். இத்தகைய யோக நித்திரையைப் பிறவியிலிருந்தே பெற்றிருந்த யோகீசுவரர் ஒருவர் இருந்தார். அரைநிமிஷ நேரமட்டில் தவமுறை தியானம் வைக்க அறியாதவன் என்று அருணகிரியார் தம்மைப்பற்றி விளம்பி இருக்கிருர். தியானத்தில் அமர்ந்த வேளைகளிலெல்லாம் அது சமாதி நிலையை எட்ட அகண்ட சச்சிதானந்தத்தில் ஆழ்ந்து மூழ்கியிருந்த மகிமையை உடையவராக ஒரு மகான் இருந்தார். 'யானேதும் பிறப்பஞ்சேன் இறப்பு அதனுக்கு என் கடவேன்' என்று வாழ்வை விளையாட்டாகக் கருதுவது யோகியின் செயலாகும். மரணத்தைக் குறித்து அஞ்சுவது உயிர்களின் இயல்பு. பசியோடு வந்த புலி ஒன்றுக்குத் தம் உடலை உணவாகக் கொடுத்து மரணத்தில் மகிழ்ச்சி அடைய விரும்பினர் ஒருவர். இத்தகைய பெருமைகளையுடையவர் யார்? அவர்தாம் சுவாமி விவேகானந்தர்.

தலைமைப் பதவிக்குப் போட்டி போட்டுக் கொண்டு போவது உலகத்தவர்களுடைய இயல்பு. அதிகாரம் செலுத்தவும், பிறர் தம்மைப் புகழவும் வேண்டும் என்று நினைத்துத் தலைவராக விரும்புகிருர்கள். வாழ்வனைத்தையும் தம்மை நம்பி இருப்பவர்கள் பொருட்டுத் தத்தம் பண்ணுவதே தலைமை ஸ்தானமாகிறது. உயிர்களுக்குத் தொண்டு புரிவதைக் கற்றுக்கொண்டவரே தலைமை வகிப்பதற்குத் தகுதி உடையவராகிருர். நாட்டுக்கும் தெய்வத்துக்கும் தொண்டுபுரிவதையே குறிக்கோளாகக்கொண்டு வாழ்வு முழுவதும் தொண்டராகவிருந்து, துறவிகள் கூட்டத்

துக்குத் தலைமிகு தலைவராக விளங்கிய சான்றோர் யார்? அவர் தாம் சுவாமி விவேகானந்தர்.

அன்பும் அறிவும் சேர்ந்து வளரவேண்டும். அன்பில்லாத அறிவும், அறிவில்லாத அன்பும் நிறைவாழ்வு ஆகாது. அன்பு, அறிவு ஆகிய இரண்டினுள் அன்புக்கு முதல் இடம் தர வேண்டும். அறிவில்லாத அன்பு மூடநம்பிக்கை சிலவற்றிற்கு அடிகோலிவிடும். எனவே அறிவு கலந்த அன்பு வேண்டும். வெளித்தோற்றத்துக்கு ஞானியாகவும், உள்ளத்தில் பரம பக்தனாகவும் விளங்கி உலகத்துக்கு ஞானத்தையும் பக்தியையும் வழங்கிய வள்ளல் யார்? அவர் தாம் சுவாமி விவேகானந்தர்.

மேனாட்டு மோகத்தில் மூழ்கி நம் நாட்டுப் பண்பை மறந்திருந்த மக்களைத் தட்டி எழுப்பி, வேதாந்த நெறியில் செலுத்த வித்தகர் ஒருவர் நம் நாட்டுக்குத் தேவைப்பட்டார். அதற்கு ஒருவரை நம்நாடு ஆயத்தப்படுத்தியது. நவீனக் கலைஞானங்கள் எல்லாம் ஒன்றுசேர்ந்து ஒருவரிடம் மிளிர்வனவாயின. பாரமார்த்திகப் பண்பு முழுவதையும் அனுபூதியில் பெற்றிருந்த பரஞானி ஒருவரை அடைந்து பண்டைக் காலத்து ரிஷிகள் பெற்றிருந்த பண்பை அவர் பெற்றிருந்தார். உலகின் நிலைமையைப் பரிவ்ராஜகராக நேரில் சென்று பார்த்து அறிந்து உலகுக்கு எது தேவை என்பதைத் தெளிவாக அறிந்திருந்தார். இம்மூன்றும் ஒருங்கே பெற்றிருந்த ஒருவேதாந்த வித்தகர். மதங்கள் அனைத்துக்கும் அடிப்படையாகவுள்ள வேதாந்த உண்மைகளுக்குப் புதிய வலிவுகொடுத்து உலகுக்கு வேதாந்தத்தைப் புகட்டினர். அவர் யார்? அவர்தாம் சுவாமி விவேகானந்தர்.

தேசபக்தராகவும், ஏழைபங்காளராகவும், சமுதாயச் சீர்திருத்தக்காரராகவும், மக்களைத் தட்டிஎழுப்பி அவர்களுக்குப் புத்துயிர் ஊட்டியவராகவும், ஆத்ம ஞானத்தை உலகுக்கு எடுத்துவழங்கியவராகவும் விளங்கிய செம்மல் வீர விவேகானந்தர் போட்ட திட்டம் செயல்பட்டு மக்கள் தெய்வங்களாக வேண்டும் என்று வாழ்த்தி வணங்கிச் செயல்படுவோமாக.

பாரத்வாஜ ஆச்ரமத்தில் பயிர்த்தொழில் பாடசாலை

திருநெல்வேலி மாவட்டத்தில் சேரன்மகாதேவியில் இந்த ஆச்ரமம் இருக்கிறது. இது 1923ஆம் ஆண்டில் தீவிர தேசாபிமானி திரு வ. வே. சு. ஐயர் அவர்களால் நிறுவப்பெற்றது. இப்பொழுது இந்த ஆச்ரமம் தபோவனத்தால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. வரும் ஏப்ரல் மாதம் 2 ஆம் தேதியன்று திரு வ. வே. சு. ஐயர் அவர்களின் நூற்றாண்டு பூர்த்தியாகிறது. அன்று முதல் அங்கே ஐயர் அவர்களின் திட்டப்படி பயிர்த்தொழில் பாடசாலை துவக்கப் பெறும். ஆரம்பத்தில் சுமார் பத்துச் சிறுவர்கள் அதில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். உணவு, உடை ஆகியவைகள் இலவசமாக அளிக்கப்படும். வயது சுமார் பத்து உள்ளவர்கள் இதில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். தொழிலும், கல்வியும் ஒன்று சேர்ந்து கற்பிக்கப்படும்.

எண்ணும் எழுத்தும் கண் எனத்தகும் என்னும் கோட்பாட்டுக்கு இணங்க, கணக்கிலும், தமிழ்மொழியிலும், பொது அறிவுப்பாடங்களிலும் முற்பகலில் ஒருமணி நேரம், பிற்பகலில் ஒருமணி நேரம், இரவு ஒரு மணி நேரம் ஆக மூன்றுமணி நேரம் சிறுவர்கள் கல்விபெறுவார்கள். ஏனைய நேரங்களில் உசிதம்போன்று சாகுபடி செய்து பழகுவார்கள். திறமைக்கும் விருப்பத்திற்கும் ஏற்ப நெசவுத் தொழிலும், தச்சுவேலையும் ஒருசிலர்க்கு உபதொழில்களாகப் புகட்டப்படும். பத்து வருஷத்தில் இங்குப் பயிற்சிபெறுபவர்கள் வாழ்க்கைக்கு முற்றிலும் தகுதியுடையவர்கள் ஆவார்கள். வேலையில்லாத் திண்டாட்டம் இவர்களுக்கு ஒருபொழுதும் வாராது. கல்வித்துறையில் கல்லூரியில் படித்தவர்களுக்கு இவர்கள் நிகராவார்கள். நிர்வாகத்தில் முற்றிலும் தகுதிவாய்ந்தவர்களாயிருப்பார்கள்.

இப்பாடசாலையில் சிறுவர்களைச் சேர்க்க விரும்புகிறவர்கள் தபோவனத்தோடு நேரில் அல்லது கடிதத்தின் வாயிலாகத் தொடர்பு கொள்ளலாம்.

தத்துவப் பொங்கல் வாழி!

(புலவர் க. தில்லைக்கோவிந்தன்)

வாழ்முதல் படைத்த மாயா உலகியல் ஆன்ம வாழ்க்கை
ஆழ்கடல் அலைபோல் தோன்றி ஆட்கொளும் அவனைச் சாரும்;
ஊழ்வினைத் தொடர்ச்சி மாயின் ஒடுக்கத்தில் ஒன்றாய் நின்று
சூழ்சிவ போகம் துய்க்கும் துரியநற் பொங்கல் வாழி!

உமியினால் மூடப் பட்ட அரிசியை உற்று நோக்கின்
உமியுள போது நெல்லாம்; ஒழிந்தபின் அரிசி என்பர்;
உமியெனும் கருமம் சூழச் சீவனும்; கருமம் ஓய்ந்தால்
தமியதற் பரமாய்க் காட்டும் தத்துவப் பொங்கல் வாழி!

சிலந்திபோல் தனக்குத் தானே பந்தனை செய்தி டாமல்
நிலந்திகழ் சேற்று மீன்போல் நினைப்புறு பற்று நீங்கி
வலந்தரு குறியைச் சார வன்மனச் சிலையை வாங்கிப்
புலந்தெழு சீவ பாணம் போக்கிய பொங்கல் வாழி!

உடம்பெனும் தேரில் பூட்டி ஓட்டுமைம் பொறிகள் ஆய
அடம்புரி பரிகள் தம்மை அறிவெனும் பாகன் தான்தன்
திடமனக் கடிவா ளத்தால் அடக்கியே சீவன் தன்னைத்
தடம்புணர் வீட்டில் சேர்க்கும் தவப்பெரும் பொங்கல் வாழி!

உவர்க்கடல் மூழ்கும் உப்புப் பொம்மையும் உவரி ஆகும்
சுவர்க்கமுத் திரைகள் சொன்ன அன்னையார் குருதேவ் மைந்தன்
பவத்திறன் அறுக்கப் போந்த பரம்பொருள் என்று போற்றித்
தவச்சுடர் பொலியப் பொங்கும் சமரசப் பொங்கல் வாழி!

செய்திகள்

நிகழ்பவை :

ஜனவரி மாதம் 18ஆம் தேதி அன்று மாலை சேலம் மாவட்டம் எடப்பாடியில் கோடி அர்ச்சனை மகிமை பற்றி **ஸ்ரீமத் அசலானந்த சுவாமிகள்** சொற்பொழிவாற்றுவார்கள்.

ஜனவரி மாதம் 19ஆம் தேதி செவ்வாய்க் கிழமை அன்று இராமநாதபுரம் ஸ்ரீ தாயுமான சுவாமி தபோவனத்தில் தாயுமானவர் குரு பூஜையும், 20ஆம் தேதி புதன்கிழமை அன்று ஆங்கு ஒரு நாள் அந்தர்யோகமும் நிகழும். இது சம்பந்தமான விவரம் மார்கழி மாதம் தர்ம சக்கரம் அட்டை நான்காம் பக்கம் வெளி வந்துள்ளது.

ஜனவரி மாதம் 21ஆம் தேதி வியாழக்கிழமை அன்று ஸ்ரீ விவேகானந்த வித்யாவனக் குருகுலப் பள்ளி பொங்கல் விடுமுறைக்குப் பின் திறக்கப்படும்.

24—1—82 ஞாயிறன்று இராமநாதபுரம் மாவட்டம் ராஜபாளையம் பாரதி கல்யாண மண்டபத்தில் காலை 8-30 மணிமுதல் 9-30 மணி வரை "ஓம் நமோ நாராயணாய" என்னும் ஜப யக்ஞம் நிகழும்.

ஜனவரி மாதம் 31ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமை வட ஆற்காடு ஜில்லா, வேலூர் ஜனதா திடலில் மாலை 7-30 மணிக்கு நிகழும் அருள் நெறிச் சங்க ஆண்டுவிழாவில் **ஸ்ரீமத் நித்தியானந்த சுவாமிகள்** கலந்துகொண்டு சொற்பொழிவாற்றுவார்கள்.

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்

இயற்றிய நூல்கள்

ஸ்ரீமத் பகவத்கீதை பிரசார விலை	ரூ. 16-00
மஹாபாரதம் ...	7-00
ஸ்ரீ தாயுமானசுவாமி பாடல்கள் ,, ...	6-00
இராமாயணம் ,, ...	5-00
தினசரி தியானம் ,, ...	4-00
ஸ்ரீ ராமகிருஷ்ணர் உபதேச மஞ்ஜரீ ,, ...	5-50
கர்மயோக விளக்கம் ...	10-00
ஞானயோக விளக்கம் ...	8-00
ராஜயோக விளக்கம் ...	8-00
பக்தியோக விளக்கம் ...	6-00
பரமஹம்சரின் பெருமை ...	6-00
விவேகானந்த விவரணம் ...	4-00
விவேகானந்த உபநிஷதம் ...	4-00
கடவுளின் வடிவங்கள் ...	4-00
சந்தேகம் தெளிதல் பாகம்-I ...	3-50
அனுஷ்டான வேதாந்தம் ...	3-00
எதிர்கால இந்தியா ...	3-00
ஸ்ரீ ராமகிருஷ்ண சரிதம் ...	3-00
திருக்கயிலாயகிரி யாத்திரை ...	3-00
தேவரகசியம் (முதலிய கதைகள்) ...	2-50
ஸ்ரீ சாரதா தேவியார் சரிதம் ...	2-00

தாயுமானவர் இயற்றிய

கருணாகரக் கடவுள் விரிவுரை ...	3-50
பரிபூரணானந்தம் ஷை ...	3-00
சின்மயானந்த குரு ஷை ...	3-00
ஆனந்தமானபரம் ஷை ...	3-00
சுகவாரி ஷை ...	3-00
மௌனகுரு வணக்கம் ஷை ...	3-00
எங்கும்நிறைகின்றபொருள் ஷை ...	2-50
பரசிவ வணக்கம் ஷை ...	1-00
பஜனைப் பாடல்கள் ...	2-50
கண்ணன் என்னும் கடவுள் ...	2-50
விரதவீரர் பீஷ்மர் (நாடகம்) ...	1-50
விபீஷணன் சரணாகதி ஷை ...	1-50
பரமஹம்சர் பாமாலை ...	1-50
அமரநாத யாத்திரை ...	1-25
சந்நியாசி ...	1-25
இறைவணக்கம் ...	1-00
குழந்தைகளின் களிக்கூடம் ...	1-00
சகோதரி நிவேதிதை ...	1-00
காயத்ரீ ...	1-00
இராவண தத்துவம் ...	1-00
வாலி மோட்சம் (நாடகம்) ...	1-00
தவப்புதல்வர்கள் ,, ...	1-00
ஏகலைவ்யனின் குருபக்தி ,, ...	1-00
தானவீரன் கர்ணன் ,, ...	1-00
பார்வதி,லக்ஷ்மி,சரஸ்வதி கர்வபங்கம் ...	1-00

மார்க்கண்டேயன் (நாடகம்)	ரூ. 1-00
பிரஹ்லாதன் ,, ...	1-00
தபோபலன் ,, ...	1-00
இந்துமதமும் கிறிஸ்துவ மதமும் ...	1-00
நோய்க்கு இடம் கொடேல் ...	1-00
ஆத்ம சக்தி ...	1-00
நன்மக்களைப் பெறுதல் ...	0-80
பாதுகா பட்டாபிஷேகம் (நாடகம்) ...	0-75
செத்தவர்கள் நம்மோடு பேசுகிறார்களா? ...	0-75
*ஆலய வழிபாடு ...	0-75
*சக்தி தத்துவம் ...	0-70
*சிவதத்துவம் ...	0-70
*மனிதனது நிஜசொரூபம் ...	0-70
*ஈசன் எங்கும் நிறைந்துள்ளான் ...	0-60
தாயுமானவர் ஆலயத்தில் தத்துவ அமைப்பு ...	0-60
நன்னெறிகளும் அருள்வாக்குகளும் ...	0-60
*சூரிய நாராயணன் ...	0-50
*விஷ்ணு தத்துவம் ...	0-50
தெய்வீக மகிமைகள் ...	0-50
சைவன் யார்? ...	0-50
கர்மகாண்டம்எது?ஞானகாண்டம்எது?	0-50
*கணபதி ...	0-40
வர்ணாச்ரம தர்மம் ...	0-30
அருள் விருந்து 1 to 25 ஒவ்வொன்றும் ...	0-30
கந்தர் அநுபூதி ...	0-25
The Bhagavad Gita (10th Imp.) ...	20-00
Sri Lalitambika Sahasranama Stotram ...	10-00
The Indian National Education ...	8-00
Ramakrishna Lives Vedanta ...	8-00
Facets of Brahman or The Hindu Gods ...	5-00
Daily Divine Digest (DELUXE) ...	4-50
Daily Divine Digest (Ordinary) ...	2-50
Mahabharata (with plastic cover) ...	6-00
Ramayana (do) ...	4-00
The Man Making Message of Vivekananda (with plastic cover) ...	4-00
Sri Vishnu Sahasranama Stotram ...	4-00
The Bhagavad Gita (Small Size) ...	4-00
Siva Sahasranama Stotram ...	3-50
Bheeshma The Superman ...	3-50
Hinduism Hosts Christianity ...	3-00
Holy Bible—In the Light of Vedanta ...	1-50
Reminiscences of Master Mahashaya ...	1-50
*Introducing the Gita ...	1-50
The Garland of Paraaparam ...	1-50
TAT TVAM ASI *That Thou Art* IN Tayumana Swami ...	1-00

தேவையான புத்தகங்களுக்கு உரிய விலையுடன் தபால் கட்டணத்திற்காக கீதைக்கு ரூ. 3-25ம் மஞ்ஜரீக்கு ரூ. 1-40ம் இராமாயணத்திற்கு ரூ. 1-30ம் தினசரி தியானத்திற்கு ரூ. 1-20ம் மற்ற வெளியீடுகளுக்கு ரூ. 2-50 முதல் ரூ. 3-50 வரையும் சேர்த்து அனுப்புங்கள். * இப்புத்தகங்கள் ஏனைய பெரிய புத்தகங்களில் அடங்கியுள்ளன.

அந்தர்யோக விவரங்கள் (தொடர்ச்சி)

சென்னை—புரசவாக்கத்தில் 14—2—82 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸர். M. C. T. முத்தையா செட்டியார் பெண்கள் உயர்நிலைப்பள்ளி

நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

வடஆற்காடு ஜில்லா—வேலூரில் 14—2—82 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ வெங்கடேசுவரா மேல்நிலைப்பள்ளி

நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி அசலானந்தர்

ஸ்ரீ ராமகிருஷ்ணமடம் - ராமேஸ்வரம்

1981ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12ஆம் தேதி ஸ்ரீ ராமநவமி அன்று இம்மடாலயம் துவக்கப்பெற்றது. அன்று முதல் அங்கு மஹேஸ்வரபூஜை முறையில் அன்னம் வழங்குதல் நடைபெற்று வருகிறது. நவம்பர் மாதம் எல்லா வேளைகளிலும் 1948 பேர் உணவு ஏற்றுக்கொண்டனர். அதற்கான உணவுச் செலவு ரூ. 4442. உண்டியல் மூலமும், அன்பர்கள் நேரில்தந்தது மாக நவம்பர் மாதத்தில் வந்த நன்கொடை வரவு ரூ. 1336. மூலதனமாக வைத்துக்கொண்டு வட்டியை மட்டும் செலவிடுமாறு நவம்பர் மாதம் வந்த தொகை ரூ. 6000. இம்மடாலயத்தைப் புதுப்பிக்கும் கட்டடவேலைகளும் புதிய கழிவறை வேலைகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நவம்பர் மாதம் முடிய ஆகியுள்ள கட்டடச் செலவு ரூ. 1,35,819-70.

ஆத்ம சக்தி

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்

இயற்றியது

மனிதன் காம எழுச்சிக்கு வசப்படும்போதெல்லாம் அதன் ஆதிக்கம் வலுக்கிறது; அதனால் அவனுடைய ஆற்றலும் சுதந்திரமும் குறைகின்றன. மனிதன் காமத்தை வெல்லுமளவு அவனிடம் ஆத்ம சக்தி அதிகரிக்கிறது. ஆத்ம சக்தியை வளர்ப்பதற்கேற்ற வழிமுறைகளைப் பத்து தலைப்புகளில் இந்நூல் விரிவாக விளக்குகிறது. மேலாம் வாழ்க்கை வாழவிரும்பும் அனைவரும் அவசியம் வாசிக்கவேண்டிய நூல்.

கிரௌன் சைஸ் விலை ரூ. 1-00 32 பக்கங்கள்

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

திருப்பராய்த்துறை-639 115 திருச்சி ஜில்லா

Edited by SWAMI NITHYANANDA,
Printed & Published by Swami Sankarananda at Tapovanam Printing School, Tirupparaitturai, Tiruchi Dt.